# கண்ணான கண்மணி...!



அகிலா கோவிந்த்

# கண்ணான கண்மணி...!



# 1

"என்ன காஞ்சனை... நீ? கொஞ்சம் யோசித்துப் பார்! அப்பா உனக்கு கெடுதல் பண்ணுவாரா? மாப்பிள்ளை நல்ல உத்தி யோகம். நல்ல குணம் என்று சொல்கிறார். அப்பாவே நேரில் போய் கூட இருந்து பேசிப் பழகிப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறார். அந்த போட்டோவை கூடப் பார்... மாப்பிள்ளை எப்படி பளிச்சென்று நல்ல உயரத்துடன் உனக்குப் பொருத்தமாய் இருக்கிறாரென்று தெரியும்.."

அம்மா கனிவுக் குரலில் விடாமல் திரும்பத் திரும்ப சொன்னபோதுதான் காஞ்சனை அந்த பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தை எடுத்துப் பார்த்தாள்.

பெயர் உதயசந்திரனாம். ஆள் பார்ப்பதற்கு வாட்ட சாட்டமாய் நன்றாகத்தான் தெரிந்தான். அவனது இறுகிய உதடுகளில் அவளது பார்வை வந்து நின்றபோது, கொஞ்சம் இவைகள் சிரித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ? என்ற யோசனை தோன்றியது.

கூடவே 'அசட்டுப் பெண்ணே, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுக்கும்போது யாராவது சிரிக்க முடியுமா?

உம்மென இருக்கும்படிதானே போட்டோக்காரர் சொல்வார். மறந்து விட்டாயா?' என்றொரு மனம் எதிர் கேள்வி கேட்டது.

சமாதானமானவளாய் அந்த புகைப்படத்தையே உற்றுப் பார்த்தாள்.

எது எப்படியோ... அவள் மட்டும் இப்போது தலையாட்டி விட்டால், இவன் அவள் கழுத்தில் பட்டென்று தாலி கட்டி விடுவான். அவள் அவனது மனைவியாகி விடுவாள்!

இதுவரை முன் பின் தெரியாதவன், இப்போது போட்டோவில் முதல் முறையாய் பார்க்கக் கூடியவன் இனி அவளது வாழ்வினை ஆதாரமாகி விடுவான். அவனை மையமாகக் கொண்டுதான் இனி அவளது மொத்த உலகமும் சுழன்றாக வேண்டும்!

அவன் நல்லவனா? கெட்டவனா? அவனுக்கு அவளைப் பிடிக்குமா? இல்லை அவளுக்கும் தான் அவனை பிடித்து விடுமா? அப்படி பிடிக்கும்படி அவன் நடந்து கொள்வானா? அவளைப் பூவாய்த் தாங்கி இதழ்கள் போல் மென்மையாய் வைத்துக் கொள்வானா?

இப்படி ஓராயிரம் கேள்விகள் அவளுள் எழுந்து மனதில் பட்டாம்பூச்சியாய் வட்டமடித்தன.

ஆனால் யார் இதற்கு பதில் தரப் போகிறார்கள்? யார் இதுபற்றி கவலைப்படப் போகிறார்கள்?

எல்லோருக்கும் அவர்களது 'கடமை' தான் முக்கியமாய் போயிற்று. டிகிரி படித்து முடித்து விட்டாளாம். வயது இருபத்தி மூன்றை தாண்டியாயிற்றாம். வேலைக்கெல்லாம் போகத் தேவையில்லை என ஏற்கனவே முடிவு எடுத்து விட்டாயிற்றாம்.



இனியும் வீட்டிற்குள்ளே நெற்குதிர் போல் உட்கார வைத்து அழகு பார்க்கவா முடியும்? காலா காலத்தில் ஒரு கல்யாணத்தை பண்ணி ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து விட வேண்டியதுதானே?

ஆள் ஆளுக்கு தெரிந்தவர்கள் உறவினர்கள், பெரிசுகள் என எல்லோரும் ஒரே போல் சொல்லி வைக்க தந்தைக்கும் தாய்க்கும் பயமே வந்து விட்டது.

ஒரே பெண், ஆசை ஆசையாய் வளர்ந்த செல்ல மகள். பார்ப்பதற்கோ பேரழகி! ஆனால்.. ஆனால் அதற்காக வீட்டிற்குள் வைத்து கொஞ்சிக் கொண்டேவா இருக்க முடியும்?

அவர்களும் தங்களது கடமையை உணர்ந்து தரகர் மூலம் வரன் தேடினர்.

பார்த்த இரண்டு மூன்று வரன்களை நிராகரித்தவர் களுக்கு நான்காவதாய் வந்த உதயசந்திரன் நன்றாகத் தெரிந்தான். பிடித்த வரனாகவும் போய்விட்டான்.

"நல்ல மாப்பிள்ளை... நல்ல குணம். நீ துணிந்து கட்டிக் கொள்ளலாம் காஞ்சனை!"

அப்பா தன் ஒய்யாரக் குரலில் சொல்லி உடனே டிக் செய்து விட்டார்.

இப்போது 'நவ் த பால் இஸ் இன் யூவர் கோர்ட்' என்பதுபோல முடிவெடுக்க வேண்டியது அவள்தான்!

அவள்தான் டிக் செய்ய வேண்டும்.

மறுபடியும் அந்த போட்டோவையே உற்றுப் பார்த்தாள்.

அவளுள் கல்யாணம், எதிர்காலம், குடும்பம் நடத்துவது பற்றி ஆயிரம் கனவுகள், கற்பனைக் கோட்டைகள் இருக்கின்றன.

அவளது ஆசைகள், விருப்பங்கள் எல்லாம் புரிந்து கொண்டு அவன் அவளை ஒரு ராஜகுமாரி போல் வைத்துக் கொள்ள வேண்டும். தினம் தினம் அன்பைப் பொழிந்து அவளைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து தாங்குவது போல் அவளைத் தாங்க வேண்டும். பதிலுக்கு அவளும் அவளது உயிரே அவன்தான் போல நடமாடுவாள்.

பாசம், அன்பு, பிரியம், ஆசை, மகிழ்ச்சி, உவகை என எல்லா உணர்வுகளையும் ஒருசேர இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொட்டி, காட்டி.. திக்குமுக்காட வைத்து திணறடிக்க வேண்டும்.

அப்படி ஒவ்வொரு நாளும் சந்தோஷமாய் நெகிழ்வாய் குடும்பம் நடத்துவதே வாழ்க்கை. அப்படிப்பட்ட உன்னதமான வாழ்க்கை இல்லறம் அவர்கள் நடத்த வேண்டும் என்ற கனவுதான் அவளுக்கு!

இதற்கெல்லாம் இந்த போட்டோவில் இருக்கும் உதய சந்திரன் ஒத்துவருவானா? என தூங்காமல் கொள்ளாமல் இரண்டு நாள் சிந்தித்தவள் இறுதியாய் அந்த முடிவுக்கு வந்தாள்.

வரப்போகும் விபரீதங்கள் புரியாமல் தாய் தந்தையை நோக்கி தலையாட்டினாள் அவள்.





## 2

**கா**ஞ்சனை தலையாட்டியதும்தான் தாமதம். விஷயங்கள் எல்லாம் மளமள வென்று நடந்தது. உதயசந்திரன் அந்த முகூர்த்த நாளில் உறவினர்கள் புடைசூழ்ந்து ஆசீர்வதிக்க தாலி கட்டினான்.

அவனது நெடு உயரமும் கம்பீரப் பார்வை யும் திடமான உடற்கட்டும் அவளை வசீகரித்து மலைக்கவே வைத்தது.

அவள்தான் அப்படி கல்யாணச் சடங்குகளிடையே அவனைப் பார்க்க முயன்றாள். திருட்டுத்தனமாய் பார்த்து பார்த்து ரசித்தாள்.

ஆனால் அவன்...?

அப்படி ஒன்றும் அவளை அதிசயித்து... இல்லை... இல்லை.. ஒரு சாதாரண பார்வை கூட பார்த்தது மாதிரி இல்லையே? ஏன்?

அது மட்டுமில்லை. வரவேற்பில் அவனை உற்றுக் கவனித்தாள். அழகான வரிசையான பற்கள் இருந்தும் ரொம்பவும் யோசித்தே சிரித்தான். யாரிடமும் அளவாக புன்னகைத்தான். அவளிடம் கூட "இதுதான் என்னுடைய ஆபீஸ் மேனேஜர்.." என ஒருவரைக் காட்டி லேசான புன்னகை செய்தபோது இன்னும் கொஞ்சம் சிரிக்க மாட்டானா என்றே அவளுக்கு இருந்தது.

தோழி ஒருத்தி அவளையே உற்றுக் கவனித்து விஷயத்தைக் கண்டுபிடித்தவள், "என்னடி.. மாப்பிள்ளை மயக்கம் ஆரம்பித்து விட்டதா? எதற்காக.. இப்படி ஓரக்

கண்ணால் அடிக்கடி திருட்டுப் பார்வை பார்க்கிறாய்? இன்னும் கொஞ்ச நேரத்தில் முழுசாய் முதலிரவு என்று ஒன்று உனக்கு வரப் போகிறதே... அதில் அவரை என்ன பாடு படுத்தப் போகிறாயோ?'' எனக் கிண்டலடித்தபோது முகம் சிவந்து, ''போடி... லூசு'' என அவளை தள்ளி விடவே செய்தாள்.

ஆனால் அன்று முதலிரவு வந்தபோது அவளது நினைப்பு தரைமட்டமானது.

எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்தாளோ அவ்வளவு ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்தாள் அவள்!

எந்த உதடுகள் விரிந்து புன்னகை இன்னும் உதிராதோ என நினைத்தவளுக்கு அதே உதடுகள் குத்தலும் குதர்க்கமுமாய் வார்த்தைகளை உதிர்த்தது கண்டு மனம் கதிகலங்கிப் போயிற்று.

முதல் கேள்வியாகவே, ''நீ என்ன பெரிய அழகியா?' என்று கேட்டிருந்தான் அவன்.

''கண்களில் பெரிதாய் மைதீட்டியிருக்கிறாய். காதில் டோலக் போல் ஒரு வளையம் .. தலை முடி ஜடையில் ஜிகினாக்கள்... இது என்ன கடை விரிப்பது போல் ஒரு வண்டிப் பூ... வேறு...''

எதையும் ரசிக்காமல் அவன் குதர்க்கமாய் பேசியது கண்டு திடுக்கிடவே செய்தாள்.

''நான்.. நான்.. இல்லை.. உங்களுக்குப் பிடிக்கவில்லை.. என்றால் அழித்து விடுகிறேன்'' என்றாள் திக்கித் திணறி.

''முதலில் அழி..'' என்றான் அவன்.



பின் விளக்கமும் கொடுத்தான். ''எனக்கு அப்படி கண்களில் மை தீட்டி வந்தால்.. மை தீட்டி மயக்க வந்த சாகசக்காரிகள் போலவே நினைக்கச் செய்து விடும். புரிகிறதா?'' என்றபோது அவள் கர்ச்சீப்பால் கண்ணாடியில் பார்த்து அழித்துக் கொண்டிருந்தாள்.

'உன் அழகான குண்டு குண்டு கருவிழிகளுக்கு மை தீட்டியதும் அது மைவிழிப் பார்வையாகி எப்படி ஜொலிக்கிறது தெரியுமா?' என மற்றவர்கள் இவ்வளவு நாள் புகழ்ந்தது பொய்தானா? என்ற நினைப்பு அவளுள் ஓடியது.

பின் அவளை முன் நிறுத்தி ''இப்படி உட்கார்'' என எதிரில் உட்கார வைத்தான்.

''எனக்கென்று சில கொள்கைகள், சில பிடிவாதங்கள் உண்டு. அவற்றை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அதன்படி நடக்க வேண்டும்..'' என்றபடி நீண்ட லெக்சர் ஒன்று கொடுக்க ஆரம்பித்து விட்டான்.

கொள்கைகள்...

பிடிவாதங்கள்...

அந்த இரண்டு வார்த்தைகளிலேயே அவள் மனதில் முடிச்சொன்று விழுந்து மெல்ல இறுக ஆரம்பித்தது.

அதன்பின் அவன் சொன்னதோ... அவனது விரிவான உரையோ.. அவள் காதில் ஏறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இயந்திரம் போல் தலையசைத்து கேட்டவளிடம் பேசி முடித்து விட்டு பக்கத்தில் இழுத்து கட்டிலில் உட்கார வைத்தான்.

அவன் கை ஸ்பரிசமும் தோளை அவன் அணைத்துப் பிடித்திருந்த விதமும் அவளுக்கு கொஞ்சம் ஆறுதலைத் தந்தது.

அந்த ஆறுதலும் மறு வினாடியே தகர்ந்தது.

குனிந்த அவளது முகத்தை நிமிர்த்தி அவள் கண் களுக்குள் எதையோ தேடினான்.

பின் தன் கன்னத்தைக் காட்டி ''ம்ம்..'' என்றான் அழுத்தமாக.

அவன் சொல்வது புரிந்து அதிர்ச்சியும் வெட்கமுமாய் அவள் சிவந்தபோதும் அவன் விடவில்லை. பிடிவாதமாய் அவளை தன் பக்கம் திருப்பி அவன் விருப்பம் போல் செய்ய வைத்துவிட்டு... பெரிய சாகசத்தை செய்து விட்டது போல் ரசித்துச் சிரித்தான்.

அவள் நொந்து போனவளாய் குனிய, ''அட.. பெண் களுக்கே இந்த பொல்லாத வெட்கம்தான்'' என அதற்கும் பெயர் சூட்டினான்.

அவன் தன்னைப் பற்றி கேட்பான்... பேசுவான் என்றெல் லாம் எதிர்பார்த்து சொல்வதற்கு நிறைய விஷயங்களை அள்ளித் தலைக்குள் வைத்திருந்தவளுக்கு பெரும் ஏமாற்றமாய் இடியாய் இருந்தது. அவனது ஒவ்வொரு செய்கையும் பேச்சும்..

பின் டக்கென லைட்டின் சிறு ஸ்விட்சில் கை வைத்து ஆஃப் செய்தான். ''பார்... இருட்டு. இந்த இருட்டில் உன் முகமோ அழகோ தெரிகிறதா? எத்தனை ஜிகினாக்களை கட்டித் தொங்க விட்டிருந்தாய். எல்லாம் லைட்டை அணைத்து விட்டால் வேஸ்ட்தானே'' என்றான்.



'இதற்கு என்ன செய்வது?' என அவள் விழித்தாள்.

கூடவே அவளது கோபம் கேலியாகி அவன் மீது பாய்ந்தது.

''ஆமாம்.. ஆமாம்.. நீங்கள் சொல்வது உண்மைதான். இந்த இருட்டில் நிழலாய் தெரியும் உங்கள் பிம்பம் உங்கள் முகம் கூட அழகு.. கொள்ளை அழகுதான்!'' என்றாள் சிரித்தபடி.

''அட... என்னையே கிண்டல் செய்கிறாயா? பெண்ணே.. உனக்கு துணிச்சல்தான்!'' என முகம் மாறியவன் கூடவே, ''பல்லை உடைத்து விடுவேன்'' என்றான் மிரட்டுவது போல் கண்களை உருட்டி.

அவளும் விடாமல், ''அப்படியானால் இடதுபுற ஓரமாய் இருக்கும் அந்த சொத்தைப் பல்லை குறி பார்த்து உடையுங்கள். டாக்டர் செலவு மிச்சம்'' என்றாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே டக்கென அவன் சிரித்து விட்டான்.

எல்லாம் ஒரு விநாடிதான்.

சிரிப்பை நிறுத்தி விட்டு மறுகணமே முறைத்தவன், ''என்னிடம் இந்தக் கேலி கிண்டல் எல்லாம் வேண்டாம். பின் நான் பொல்லாதவனாகி விடுவேன்'' என்றான்.

பொல்லாதவன்!

முதலிரவில் ஒரு மனைவியிடம் கணவன் பேசுகிற பேச்சா?

ஐயோ! இந்நேரத்தில் அவனை கொஞ்சமும் கோபப் படுத்தி விடக் கூடாது என நினைத்து அவசரமாய், ''ஸாரி..

ஸாரி.. என்னை மன்னித்து விடுங்கள்!'' என்றாள் கெஞ்சலாய்.

''பயப்படாதே! ரொம்பவும் பதறாதே!'' என்றபடி மறுபடியும் அவள் முதுகில் கை வைத்து தோளோடு அணைத்தான்.

பின் குனிந்து முணங்கலாய் ''எனது குணம், சுபாவம், அப்படித்தான். கொஞ்சம் முரட்டுத்தனம்தான்!'' என்றான்.

அவன் சொன்ன முரட்டுத்தனம் என்ன என்பது கொஞ்ச நிமிடங்களில், அவனது கைகளுக்குள் இரும்புப்பிடியாய் அவள் சிறைபட்டபோது அவளுக்கு அதிர்வாகவே புரிந்தது.



3

மறுநாள் விடிந்ததும் அவள் கொஞ்சமும் யோசிக்க விடாதபடி மற்ற சடங்குகள், தடபுடலான விருந்துகள்.

அன்றுதான் மாமியார், நாத்தனார் என எல்லோரையும் கவனித்து கணித்து மெல்ல மெல்ல பழக ஆரம்பித்தாள் காஞ்சனை.

சாந்த சொரூபமாய் மாமியார் கல்யாணி அம்மாள். மெல்லிய குரலில் அதிர்ந்து பேசத் தெரியாத அவர்களைப் பார்த்தது காஞ்சனைக்குப் பிடித்து போயிற்று.

அடுத்தாற்போல் இரண்டு நாத்தனார்கள். மூத்தவள் உதயா. இளையவள் மாலதி. உதயா டிகிரி முடித்து விட்டு தனியார் அலுவலகம் ஒன்றில் வேலை. அவளுக்குத் திருமணம் செய்து விட்டுத்தான் உதயசந்திரனுக்கு பண்ணுவதாய் இருந்ததாம்.



அவள் இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்... என்றெல்லாம் உறுதியாய் கூறி விட்டதால் அவளை விட்டு விட்டு உதயசந்திரனுக்கு பண்ணி வைத்தார்களாம்.

மாலதி.. கல்லூரிக்குப் போகும் கடைக்குட்டி. கடைசி சுட்டிப் பெண். காஞ்சனையை வெகுவாய் கவர்ந்ததும் தோழி போல் பாவித்து உரிமையாய் பேச ஆரம்பித்தவளும் அவள்தான்.

''வாங்க.. நீங்க..'' என உரிமையாய் அழைத்துப் போய் வீட்டின் ஒவ்வொரு பகுதியாய் காட்டினாள். சிறு தோட்டத்தில் அவள் ஆசையாய் வளர்க்கும் மணி பிளாண்ட், கீரை, அவரைச் செடிகளை ஆர்வமாய் காட்டினாள்.

காஞ்சனைக்கும் அவள் வீட்டில் அப்படி சிறு தோட்டம் வைத்து செடிகளை அழகு பட வளர்த்த அனுபவம் இருந்ததால் அவளும் ஆர்வமாய் பேசினாள். தனக்குத் தெரிந்தவைகளைச் சொல்லி அவளை சந்தோஷப்படுத்தினாள்.

பதிலுக்கு அவள் நினைத்தது போலவே காஞ்சனை எதிர்பார்த்த அந்த விஷயத்தையும் மாலதி கூறினாள். என்ன? போட்டுக் கொடுத்தாள்... என்றுதான் சொல்ல வேண்டும்.

''அண்ணன் சுபாவம் பற்றி இப்பவே சொல்லிர்றேன் மன்னி... அண்ணன் கலகல டைப் இல்லை. சிடுமூஞ்சி சுபாவம்தான். நீங்க கீச்சு மூச்சு காட்டினாக் கூட சிரிக்க மாட்டார். அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க!''

சாதாரணமாக பேசுவதுபோல் எல்லாவற்றையும் உளறிக் கொட்டி விட்டாள் மாலதி.

எதை நினைத்து அப்படி உதயசந்திரனின் சுபாவம் இருந்து விடக் கூடாது.. என்று காஞ்சனை பயந்தாளோ... அது பயந்தபடியே ஆயிற்று!

ஐயையோ! என உள்ளுக்குள் பதறி காஞ்சனையின் முகம் சற்று கலவரமாகுவதை கவனித்த மாலதி, அவள் கைகளை அழுத்திப் பிடித்து ''அட அண்ணனை விடுங்கள். நாம் சிரித்துப் பேசி, பழகி, ஜாலியாய் இருப்போம்..'' என்றபோது இறுக்கம் தளர்வது போல் உணர்ந்தாள் காஞ்சனை.

அன்றே மாலை தாய் தந்தை இருவரும் அவளுக்கு பிரியாவிடை கொடுத்து கண் கலங்க ஊருக்கு கிளம்பினர்.

காஞ்சனைக்கும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஓடிப் போய் அவர்களது காரில் தொற்றிக் கொண்டு 'நானும் வந்து விடுகிறேனே!' என கத்த வேண்டும் போல் இருந்தது.

'ஆனால் உதயசந்திரன் அவள் பக்கத்தில் நின்று தனது கரங்களால் அவளது தோள்களை அழுந்தப் பற்றியிருந் தான். அது ஆறுதலான பிடிப்பா.. இல்லை... இனி நீ எனக்குத்தான் சொந்தம்.. என்கிற ஆணவமா? என அவளால் உணர முடியாமல் இருந்தது.

ஒருவாறு இரண்டு மூன்று நாட்கள் எவ்வித சலனமுமில்லாமல் சென்றது. பகலில் அதிகம் பேசாது ஓரிரு வார்த்தைகளே அவன் முத்து உதிர்த்தான்.

இரவானதும் வழக்கம்போல் உரிமையுடன் அந்த முரட்டுத்தனத்தை காட்டினான்.

முதலில் அவன் போக்கு கண்டு கொஞ்சம் பயந்தவள் போகப் போக சரியாகி விடும் என்று நினைத்து சமாதானமும் ஆனாள்.



ஆனால் உள்ளபடியே அவளால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இலக்கியம் படிக்கிறேன் என இரவு கண் விழித்து ஒரு வண்டி புத்தகங்களை தன் முன் பரப்பி வைத்திருப்பான். அதுபோன்ற சமயங்களில், பால் கொண்டு வரும் அவளிடம் அக்கறையாய், ''நீ தூங்கு. நான் படுத்துக் கொள்கிறேன்'' என்பான்.

அப்படி அவள் படுத்தபோது, சில நேரம் பக்கத்தில் வந்து அவள் கன்னங்களைத் தட்டி ''குட்நைட்!'' என அவன் கூறும்போது அதிசயிப்பாள்.

ஆனால் மறுநாள் காலை எப்போதும் ஐந்தரைக்கு தானாக விழித்து விடுபவள் ஓரிரு நிமிடம் அசந்து தூங்கினாலும், ''எழுந்திரு சோம்பேறி! இன்னும் என்ன தூக்கம்?'' என அவள் தலையில் ஒரு தட்டு தட்டுவான்.

அது செல்லமான தட்டா இல்லை சிறிய அடியா என கேள்வி எழுந்து அவளுள் பட்டிமன்றமே நடக்கும்.

விறுவிறுவென புதுமலராய் குளித்து விட்டு நுழைபவளை வேண்டுமென்றே பக்கத்தில் அழைத்துச் சீண்டுவான்.

இப்படித்தான் ஒருநாள் குளித்து புது ஸேரியில் அழகுபட நுழைந்தவளை பக்கத்தில் அழைத்தான்.

''அட.. உன் அழகு மின்னுகிறதே'' என்றான். அவள் பேசாமல் இருந்தாள்.

''இந்த அழகோடு.. அப்படியே.. என்னை... நீ...'' என ஆரம்பித்து நிறுத்தியவன் சட்டென குரலை பதட்ட மாக்கினான். ''ஐயோ! பார்! உன் முதுகில் பல்லி! பல்..ல்.. லி!'' என்றான் பதட்டக் குரலில்.

அப்படியே தட்டி விடுவது போல் கைகளை உயர்த்தி அவன் நிஜமாகவே கத்த.. அவள் உண்மையிலேயே பதறித்தான் போனாள்.

அந்த பதட்டத்தில் ஓடப் போனவளாய் அப்படியே அவன் மேல் தடுமாறி விழுந்தாள். தன் மேல் விழுந்தவளை இழுத்து அணைத்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

''சரியான பயந்தாங்கொள்ளி! உன்னை இப்படி என்னை கட்டிப் பிடித்து, அணைக்க வைக்க ஐயா செய்த ட்ரிக்தான் இது!'' என்றான். சிரிப்பினிடையே எகத்தாளமாய்!

அவள் முகம் சிவந்துதான் போனாள்.

இப்படியும் அப்படியுமாய் ஒரு வழியாய் அவள் அவன் மனைவியாகி இருபது நாட்கள் ஓடி விட்டது.

இன்னும் ஒரு வார்த்தை அவன் அவளைப் பற்றி கேட்கவில்லை. அதுபற்றி தெரிந்து கொள்ளவும் ஆர்வம் காட்டவில்லை. மாமியார் கல்யாணி அம்மாளிடம் இருந்து நாத்தனார், கொழுந்தன், தூரத்து மாமா, ஒன்று விட்ட அத்தை, என வீட்டு வேலைக்காரி கனகம் வரை அவளிடம் நன்கு பேசினர். அவள் குடும்பம் சொந்த ஊர் பற்றிய விபரங்கள் என எல்லாம் தெரிந்து கொண்டனர்.

ஆனால் இடித்தபுளியாய் இருந்தது உதயசந்திரன் மட்டும்தான்!

அவள், அவள் குடும்பம் பற்றித்தான் கேட்க வேண்டாம். அட்லீஸ்ட் அவளது விருப்பு வெறுப்புகள்.. ம்கூம்.. அதுகூட வேண்டாம். வேறு ஏதாவது விஷயங்கள்.. என அவள் கூட பேசவாவது செய்யலாமே?



இதுவரை அவன் அவளிடம் பேசிய வார்த்தைகளை எண்ணி விடலாம்.

அவன் சிரிக்கும்போது அழகாய் தெரிகிறான் என அவள் கண்டுபிடித்ததும் அவன் அப்படிச் சிரிப்பது கூட அபூர்வமாயிற்று.

அதையும் கவனித்தவள் அடக்க முடியாமல் சொல்லத் தான் செய்தாள். ''நீங்கள் சிரிக்கும் போது அந்த முத்துப்பல் வரிசை பார்க்கவே அழகாய் இருக்கிறது'' என்றாள்.

அதற்கும் அவன் சிரிக்காமல் ''அப்படியா?'' என்றுதான் சொன்னான்.

அவளும் விடாமல் ''எனக்காவது கொஞ்சம் அடிக்கடி சிரியுங்களேன். நீங்களும் அப்படிச் சிரிக்கும்போது ரொம்பவும் அழகாக இருக்கிறீர்கள்'' என்றாள்.

பதிலுக்கு ''ஓஹோ! அப்படியானால் சிரிக்காதபோது அசிங்கமாக இருக்கிறேனாக்கும்!'' என்றான் குத்தலாய் அடிப்பது போல் கையை ஓங்கிக் கொண்டு.

''ஐயோ சாமி! நீங்கள் சிரிக்கவே வேணாம்..'' என கும்பிடு போடாத குறையாய் அவள் ஓடித்தான் போனாள்.

அவளுக்கு திடும்மென அந்த சந்தேகமும் உதித்தது. ஒருவேளை உதயசந்திரனுக்கு யாரையும் காதலித்து காதல் தோல்வி ஏற்பட்டு அதனால் பெண்களைப் பிடிக்காத குணமாய் இப்படி வெறுப்பாய் அலைகிறானோ? என நினைத்தாள்.

அதை தயங்கியபடியே நாத்தனார் மாலதியிடம் கேட்ட போது சுட்டிப் பெண்ணான மாலதி குலுங்காத குறையாய் சிரி சிரியென சிரித்தாள்.

''ஐயோ! அண்ணி! இந்த சிடுமூஞ்சியைப் போய் யாராவது காதலிப்பார்களா?'' என்றாள்.

''பின் என்னதான் மாலதி? பெண்கள் என்றாலே ஒருவித வெறுப்பாகவே உன் அண்ணன் இருப்பது போல் தெரிகிறதே?'' என்றாள்.

மாலதி மறுபடியும் சிரித்தவள், ''அது ஒன்றும் காதல் கீதலினால் வந்த வெறுப்பு இல்லை அண்ணி. எதையும் சட்டை செய்யாத அண்ணனுடைய அந்த சுபாவம், அதுதான் காரணம்!'' என்றாள்.

''அந்த சுபாவமா? என்ன சொல்கிறாய் மாலதி?'' என்றாள் காஞ்சனை கண்களை அகல விரித்து.

''புரியவில்லை? அண்ணன் ஒரு காட்டான்!'' என்றாள் மாலதி பெரும் சிரிப்புடன்.

★ ★ ★

மறுநாள் காலை விழித்தவளுக்கு இதுவரை நடந்ததெல்லாம் பயங்கர கனவு போலவே இருந்தது. ஒரே மாதத்தில் எத்தனை விஷயங்களில் எத்தனை உணர்வுகளில் அவள் அலைக்கழிக்கப்பட்டு விட்டாள்.

ரூமை விட்டு வெளி வந்து குளிர்ந்த நீரில் முகம் கழுவினாள். உதயசந்திரனைக் காணவில்லை. சீக்கிரமாக குளித்து முடித்து அலுவலகத்திற்குச் சென்று விட்டான்.

முன்புறம் கல்யாணி அம்மாளும் மாலதியும் டி.வி. பார்த்தவாறு சளசளத்துக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. அங்கு போகப் பிடிக்காதவளாய் உள்புற ரூமிற்கு திரும்பியபோது தொலைபேசி ஒலித்தது.



எவ்வித உணர்வுமில்லாமல் எடுத்தாள். மறுமுனையில் அப்பாவும் அம்மாவும். ''ஒரு வாரம் ஆயிற்றே எப்படி இருக்கிறாய் கண்மணி?'' என ஆவலாய் விசாரிக்க குபீரென பொங்கிய சந்தோஷத்துடன் உற்சாகமாய் பேசினாள்.

அக்கறையாய் நலம் விசாரித்தவர்களிடம் சொல்ல ஓராயிரம் விஷயங்கள் இருந்தும் அவர்கள் மனதை நோகடிக்க விரும்பாமல் பேசினாள். நலமுடன் இருப்பதாய் எல்லாம் நல்லபடியாய் நடப்பதாய் பேசி அவர்கள் மனம் குளிர வைத்தாள்.

கனத்த மனதுடன் பேசி முடித்துவிட்டு ரிசீவரை கீழே வைத்தாள். முகத்தில் எழுந்த வேதனை கண்களில் நீர்த்துளியாய் வெளிப்பட்டது. ஒரு கணம் கலங்கியவள் மறுகணமே சிலிர்ப்புடன் நிமிர்ந்து கொண்டாள்.

இப்போது என்னாயிற்று? எதற்கு கலங்க வேண்டும்? என வீராப்பாய் நினைத்தாள். அப்போது ஒரு விஷயம் அவளுக்கு உரைத்தது. இது எல்லாவற்றுக்கும் காரணம் அவள் மனதுதான்!

மனதில் தனக்கு கணவனாக வரப் போகிறவன் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று முன்பே அவள் கனவுக் கோட்டை கட்டி வைத்திருந்தாள். தனக்கு வரப் போகிறவன் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். மலர் போல் தன்னை வைத்து தாங்க வேண்டும் என்றெல்லாம் அவளுக்கு ஆசைதான். அப்படி அவன் அவளைத் தாங்கும்போது பதிலுக்கு அவளும் அவன் மீது அளவு கடந்த பிரியம் வைத்து குடும்பம் நடத்துவாள்.

அவனுக்கு ஒன்றென்றால் துடித்துப் போவாள். தன்னை முழுவதுமாய் அவனிடம் ஒப்படைத்து விட்டு அவன்

காலடியே சரணம் என்று கிடப்பாள். தனது சிந்தனைகள் விருப்பு வெறுப்புகளை எல்லாம் அழித்து விட்டு அவனது விருப்பு வெறுப்புகளை தனதாக்கிக் நினைப்புகளை விருப்பு வெறுப்புகளை தனதாக்கிக் கொள்வாள்.

இப்படியெல்லாம் கற்பனை செய்து மனதில் நினைத்து ஆசை ஆசையாய் கணவன் பற்றிய உருவம் ஒன்றை உருவாக்கியிருந்தாள். ஆனால் இப்போது...

அவள் கற்பனை செய்த ஆசைப்பட்ட உருவத்திற்கும் நிஜத்திற்கும் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாமல் அல்லவா கணவன் அமைந்து விட்டான்!

அவளைப் பற்றியோ அவளது உணர்வுகள் பற்றியோ அவனுக்கு கொஞ்சமும் கவலையோ அக்கறையோ இல்லையே!

என்ன செய்வது? என்றபடி ரொம்ப நேரம் தலையில் கைவைத்தபடி உட்கார்ந்திருந்தவள் எழுந்து சமையற் கட்டுப் பக்கம் போனாள்.

காலை டிபனாக இட்லியும் வெண்பொங்கலும் செய்து வைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் மாமியார் கல்யாணி அம்மாளை சும்மா சொல்லக் கூடாது. கொஞ்சமும் அதிகாரம் செய்யாமல் அன்பையே பொழிந்தாள். இரண்டாவது நாத்தரான மாலதியும் நல்ல டைப்தான். எப்போதும் கலகலவென ஏதாவது பேசி சிரித்தபடி இருந்தாள். ஆக.. கடுகடு வென எப்போதும் சிடுமூஞ்சியாய் இருப்பது அவளது அருமைக் கணவனான உதயசந்திரன் மட்டும்தான்!



மூன்று நாள் முன்பு கூட பேச்சுவாக்கில் உதயசந்திரன் பேசிய விஷயம் ஒன்று அவளை ஸ்தம்பிக்கத்தான் செய்தது.

''இதோ பார் காஞ்சனை எனது சுபாவம் இதுதான். இப்படித்தான் இருப்பேன். நடந்து கொள்வேன். உனக்கு இது பிடிக்கவில்லை என்றால் நீ விலகிக் கொள்ளலாம். இந்த திருமண பந்தத்தை முறித்துக் கொள்ளலாம்..'' வெகு சாதாரணமாய் பழத்தில் ஊசியேற்றுவது போல் அவன் சொல்ல அவள் துடித்துப் போனாள்.

''என்ன.. என்ன சொல்கிறீர்கள்? உங்கள் வாயிலிருந்து இப்படி வரலாமா? நீங்கள் இப்படி பேசலாமா?'' என்றெல் லாம் பரிதவித்து போனவளாய் துடிப்பு அடங்காமல் அவள் கேட்க பெருஞ்சிரிப்புடன் அவன் விளக்கினான்.

''அதாவது காஞ்சனை நீ கணவன் என்றால் கட்டுப்பெட்டியாய் ஏதோ உன் முந்தானையை பிடித்துக் கொண்டு நீ சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டு நான் இருக்க மாட்டேன். என் இஷ்டப்படி நான் இருப்பேன். எனக்குத் தோணுகிற விஷயங்களை செய்வேன். எதிர்பார்ப்பு என்பது எனக்குத்தான் இருக்க வேண்டும். உனக்கு இருக்கக் கூடாது..'' அவன் கடும் குரலில் மிரட்டாத குறையாய் சொல்ல அவள் தலையாட்டத்தான் செய்தாள்.

'அவசரப்பட்டு இவரை பிடித்திருக்கிறது, கட்டிக் கொள்ள சம்மதம்' என்று சொல்லி விட்டோமே.. என்ற நினைப்பே ஓடியது.



# 4

உதயசந்திரனிடம் ஏதோ கோபம், ஏதோ அசட்டுப் பிடிவாதம், எப்படியோ ஒட்டிக் கொண்ட சில பழக்கங்கள், அதை எப்போதும் விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கும் விசித்திர மனது, அதை அவள் மாற்ற முயற்சிப்பதால் அவனுக்கு அவள் மீது வரும் ஆத்திரம், வெறுப்பு, கோபம்... என கொஞ்ச நாட்களிலே காஞ்சனை அவனைப் பற்றி முழுவதுமாய் புரிந்து கொண்டாள். ஆனால் அவன்தான் அவளை கொஞ்சமும் புரிந்த மாதிரியோ, புரிந்து கொள்ள முயற்சி எடுக்கிற மாதிரியோ காட்டிக் கொள்ளவில்லை.

இது அவனது சுபாவமா அல்லது தனக்காக அவன் போடும் நடிப்பா? என்ற சந்தேகமும் அடிக்கடி அவளுள் எழுந்தது.

ஏனெனில் இரவில் தனிமையில் அவனுடன் இருக்கும் சமயங்களில் ''மனம் விட்டு கொஞ்சம் பேசுவோமா?'' என்பாள்.

''பேசுவதற்கு என்ன இருக்கிறது?'' என்பான் அவன் வெடுக்கென.

''ஏதோ இருப்பதால்தானே பேச வேண்டும் என்கிறேன்'' என்பாள் அவள் கெஞ்சும் பிரயாசையுடன்.

முகம் வெட்டுவான் அவன்.

''அப்படி எதுவும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை'' என்றதும் இவள் விடாமல் ''இருக்கிறது சொல்லட்டுமா?'' என்பாள்.



''ம்ம்.. சொல்லு.''

''மனம் விட்டுப் பேசினால்... ஒருவித நெருக்கம் வரும். அது கணவன் மனைவிக்கு நல்லது.. என புத்தகத்தில் படித்திருக்கிறேன்.''

''ஓ அப்படியா?'' பெரிய ஹாஸ்யம் போல் புருவம் உயர்த்தி சிரித்தான். ''இது கூட புத்தகம் மூலமாகத்தான் தெரிந்து கொண்டாயா? உன் சொந்த மூளைக்குப் பதில் அங்கு இருப்பது என்ன களிமண்தானா?''

அவனது அதீத கிண்டலைக் கண்டு அவள் கோபப்படவில்லை.

''களிமண்தான்! நான் ஒத்துக் கொள்கிறேன். அப்படியாவது பேச வாருங்கள். நாம் பேசுவோம்..''

அவள் பிடிவாதம் கொடுக்கும் எரிச்சலில் எழுந்து அதே வேகத்தில் பக்கத்தில் வந்து உட்காருவான்.

''ம்ம்... பேச வந்து விட்டேன் சொல்லு!'' என்று சொல்லிக் கொண்டே அவன் கைகள் அலைந்து புது சிகரெட் பாக்கெட் ஒன்றை உரிக்க ஆரம்பிக்கும்.''

''கொஞ்ச நேரம் கழித்து குடிக்கலாமே.''

''புகைக்காமல் என்னால் இருக்க முடியாது. நீ சொல்ல வந்ததைச் சொல்லு!''

குரலில் லேசான விரட்டல் ஒன்று தென்பட்டு அவளை சிறிது அச்சப்பட வைக்கும்.

இருந்தும் நம்பிக்கையோடு சொல்வாள்.

''எனக்கும் மனது என்ற ஒன்று இருக்கிறது. அதில் ஆசா பாசங்கள், விருப்பு, வெறுப்புகள் உண்டு. அதை நீங்கள் கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து நடந்து கொள்ள வேண்டும். உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீங்கள் மட்டும் நான் எதிர்பார்ப்பது போல் சில விஷயங்களில் என் உணர்வுகளைப் புரிந்து நடந்து கொண்டால், உங்களை இன்னும் ரொம்ப மிக மிக அதிகமாகப் பிடித்து விடும். அப்போது இந்த உலகத் திலேயே அதிக மகிழ்ச்சிக்குரியவளாய் நான் ஆகி விடுவேன். நான் அப்படி ஆகி விட்டால், அந்த சந்தோஷம் உங்களிடமும் பிரதிபலிக்கும். ஆனந்தமான வாழ்க்கை ஒன்று அமைந்து விடும்...!'' ரொம்பவும் கவனமான வார்த்தைகளை தேர்ந்தெடுத்து மணிகள் போல கோர்த்து அவள் பேசினாள்.

அவள் முடிப்பதற்குள் அடக்க முடியாமல் சிரித்து விட்டான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''டி.வி. நாடகத்தில் கதாநாயகி பேசும் வசனம். அச்சுப் பிசகாமல் பேசுகிறாய். நான் வேண்டுமானால் கைதட் டட்டுமா? அல்லது உதடு குவித்து விசில் அடிக்கட்டுமா?'' என்றான் எகத்தாளமாய்.

''நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்ளவே போவதில்லையா?''

அவன் மீண்டும் சிரித்து கைகளை விட்டேற்றியாய் வீசிக் காட்டினான்.



''நன்கு தெளிவாய் புரிந்து கொண்டேன், கண்ட கண்ட சினிமாக்கள், டி.வி. டிராமாக்கள் பார்த்து நீ ரொம்பவும் கெட்டிருக்கிறாய்! அதில் வரும் கதாநாயக மாப்பிள்ளைகள் புருஷன்மார்கள் போல் என்னை எதிர்பார்க்கிறாய். ஏமாறுகிறாய்... அவ்வளவுதான்!''

அவளுக்கு அவன் சொன்னதைக் கேட்டு மிகுந்த ஆத்திரமே மூண்டது.

''அந்த அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை.''

''முட்டாள்களுக்கு தாங்கள் முட்டாள்கள் என ஒருபோதும் தெரியப் போவதில்லை'' என்றான் அதற்கும் ஏளனமாக.

இவனிடம் என்ன பேசுவது? எதை புரிய வைப்பது?

அவள் சலித்துப் போனாள்.

எல்லாப் பெண்களுக்கும் இப்படித்தானோ? இதைத் தான் தலைவிதி என்று சொல்கிறார்களோ... என்பது போல் நினைப்புகளை ஒதுக்கி நடமாடினாள்.

இரண்டு மூன்று நாட்கள் எவ்வித பிரச்சினையு மில்லாமல் நகன்றது.

மூன்றாம் நாள் திரும்பவும் பிரச்சினை எழுந்தது. தனது குரங்குத்தனத்தை காட்டினான் உதயசந்திரன்.

அன்று அளவுக்கதிகமாக சிகரெட் பாக்கெட்டுகளை காலி செய்து புகை விட்டுக் கொண்டிருந்தவன் இரவானதும் கொண்டு வந்திருந்த கைப்பையில் இருந்து அதை வெளியே எடுத்து வைத்தான்.

விஸ்கி பாட்டில் அது.

கடவுளே! இந்தப் பழக்கம் வேறு உண்டா?

அவள் திகைக்க, "எப்பவாவது குடிப்பேன். அதிலொன்றும் தப்பில்லை" என்றான்.

"தப்பில்லையா?"

அவள் திடுக்கிட்டு கேட்க பெரிதாய் அவனது கட்கட சிரிப்பை சிரித்தான்.

"இன்னும் எந்த நூற்றாண்டில் இருக்கிறாய் நீ? இப்போதெல்லாம் காபி குடிப்பது போல் மது அருந்துவது வழக்கமாய் போயிற்று. நம் நாடு அவ்வளவு முன்னேறியிருக்கிறது. அது புரியாமல் இன்னும் ஏதோ பெரிய கெட்ட பழக்கத்தை கொண்டிருப்பது போல் முறைத்து முறைத்து பார்க்கிறாய்? போ.. போ..! டோண்ட் டிஸ்டர்ப்!"

அவன் கைகளை அசைத்து அவளை அந்த ரூமை விட்டு வெளியேறும்படி சொல்லிவிட்டு குடிப்பதில் கவனம் செலுத்தினான்.

அவள் தலையில் அடித்துக் கொண்டு வெளியில் வந்தாள். அதை சட்டெனை திரும்பிப் பார்த்தவன் கைகளைச் சுண்டி நிறுத்தினான்.

"ஹலோ, ஏதோ நான் குடிப்பதைப் பார்த்ததும், குடித்துவிட்டு வாந்தியெடுப்பேன்... கண்டபடி வாய் கிழியப் பேசி ரகளை செய்வேன் என்றெல்லாம் நினைத்து பயப்படாதே! இது நிறை குடம். என்ன குடித்தாலும் தளும்பாது.. என்னுடைய 'டிஸன்சி' அப்படியே இருக்கும். புரிந்து கொள்!"



தலையைத் தொங்க போட்டபடி வெளியே வந்தாள் காஞ்சனை.

உதயசந்திரன் தனது சுபாவத்தையோ போக்கையோ கொஞ்சமும் மாற்றிக் கொள்வதாக தெரியவில்லை.

தினம் தினம் நாட்கள் நகர்வது காஞ்சனைக்கு ரணமாய்த்தான் வலித்தது. உதயசந்திரன் தன்னை ஒரு டி.வி., ப்ரிட்ஜ், சோபா செட் போல போகப் பொருளாய் தேவைப்படும் போது உபயோகப்படுத்திக் கொள்ளும் வஸ்துவாய் நினைக்கிறானோ என்ற சந்தேகம் தான் ஓடியது.

அவனது நடவடிக்கையும் கிட்டத்தட்ட அவளது நினைப்பு போலவே அமைந்தது. அவன் அவளிடம் பேசுவதே ரொம்பக் குறைச்சல்தான்.

ஏய் அதை எடுத்து வா! இதைக் கொண்டு வா! என்ன செய்து கொண்டிருக்கிறாய்? சீக்கிரம்! சீக்கிரம்! என பணியாளைப் போல அழைத்து ஒரே உருட்டல்தான்! விரட்டல்தான்! அன்பாய் என்ன இயல்பான ஒரு பேச்சே அவனிடமிருந்து வராதது காஞ்சனைக்கு பெரும் ஏமாற்றத்தையே கொடுத்தது.

இரவில் படுக்கையில் கூட அவளை ஒரு போகப் பொருளாகத்தான் பார்த்தான். அவள் எந்த மனநிலையில் இருந்தாலும் அவனது வலுவான கரங்கள் அவளை மூர்க்கமாய் இழுக்கும். தன் இச்சை தீரும் வரை அவனுக்கு இரும்புப் பிடிதான். 'மிஸ்டர் காட்டான்' என தங்கை மாலதி அவனுக்கு பெயர் வைத்திருப்பது எவ்வளவு பொருத்தம் என பொருமியபடியே நினைப்பாள்.

இதை மட்டும் புருஷன் என்கிற உரிமையில் செய்யத் தெரிந்தவனுக்கு ஏன் மற்ற விஷயங்கள் புரிய மறுக்கிறது? அவளும் ஒரு ஜீவன்தானே? அவளிடமும் பேசி அவளுக்கும் ஒரு மனது.. அதில் ஆசைகள் எதிர்பார்ப்புகள் என்றெல்லாம் உண்டு என்று அவனால் தெரிந்து கொள்ள முடியாதா?

அவனது விருப்புகள் மட்டும் போதும். முக்கியம் என்று நினைக்கிறானே!

அவன் விருப்பப்பட்டால் நடு இரவு ஒரு மணிக்கு லைட்டைப் போட்டு இலக்கிய புத்தகம் ஏதோ ஒன்றை விழுந்து விழுந்து படிப்பான். அவன் ஆசைப்பட்டால் உடனே சினிமா! அவள் ''நானும் வருகிறேனே'' என பிரயாசையாய் கேட்டால், ''நீ எதற்கு? பேசாமல் தங்கைகள் போகும்போது கூடப் போ!'' என விரட்டி விடுவான்.

சொல்லப் போனால் அவளை வெளியே ஷாப்பிங் அது இதுவென அழைத்துச் செல்வதே இல்லை. அதை அவன் விரும்புவதும் இல்லை! அதுதான் உண்மை! கவலை பொங்க தலையை பிடித்துக் கொண்டாள் காஞ்சனை.



5

அடுத்து வந்த இரண்டு வாரங்களில் காஞ்சனை உதயசந்திரனை முழுமையாய் புரிந்து கொண்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

மாலதி சொன்ன 'காட்டான்' என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தமும் அவளுக்குப் புரிந்தது.



உதயசந்திரன் தனது நினைப்பு, தனது தேவைகளிலே குறியாய் இருந்தான். அவனுக்கு காலையில் காபி, டிபன், உபசரிப்பு, மதியத்திற்கு ரெடியாய் கேரியர், மாலை நொறுக்குத் தீனி, இரவு சாப்பிட்டு விட்டு இலக்கிய புத்தகங்களை மேய்வான். அது போரடித்தால் தூங்கிக் கொண்டிருக்கும் அவளை எழுப்பி தன்னோடு அணைப்பான். தனது முரட்டுத்தனத்தைக் காண்பிப்பான்.

அதாவது அவன் எண்ணம் அவன் விருப்பம் மட்டும் தான் முக்கியம். வா, போ, எடுத்து வை, ம்ம்... சீக்கிரம்.. போன்ற அவனது ஒற்றை வார்த்தைகள் கூட சில சமயங்களில் சூடாகி, ''தடிமாடு மாதிரி நிற்கிறாய்? உனக்கு அறிவே கிடையாதா? சரியான முட்டாள் நீ! உன்னைப் போய் ஏன் தலையில் பெரிய அழகி என கட்டி வைத்து விட்டார்களே..!'' என அனலாய் வெடிக்கும்.

அந்த எரிச்சலில் கூட அவளது அழகை அப்படி மட்டம் தட்டி மகிழ்கிறானோ என்று எண்ணத் தோன்றும்.

பொதுவாக அழகு விஷயத்தில் கல்லூரி காலத்தில் இருந்தே அவளுக்கு தெளிவான ஒரு மனநிலை உண்டு. சக தோழிகள் அவள் அழகு பற்றி புகழும்போது 'அழகு என்பது உண்மையில் மனதை பொறுத்தது. அதுதான் நிலையானது. நீங்கள் நினைக்கிற இந்த சரும அழகெல்லாம் வயது ஏற ஏற... அழிந்து இருந்த இடம் தெரியாமல் போய்விடும்!' என்றெல்லாம் லெக்சர் கொடுத்து அவர்களை அடக்குவாள்.

ஆனால் இப்போது அந்த தன்னுடைய அழகே உதயசந்திரனுக்கு 'ஏதோ தன்னை மயக்கி முந்தானையில்

முடிந்து கொள்ள வந்த சாகசக்காரி...' என்ற உறுத்தலான உணர்வை ஏற்படுத்துவது கண்டு எரிச்சலானாள்.

பேசாமல் கல்யாணமே செய்யாமல் இருந்திருக்க லாமோ? என்ற நினைப்பும் ஓடியது.

அவன் மேல் உள்ள கோபதாபங்கள் எல்லாவற்றையும் மறந்து மன்னித்து சில சமயம் ஆவலாய் அவனிடம் பேசப் போனாள்.

ஆனால் அவன்? அவள் அப்படிப் பேசிக் கொண்டிருக் கும்போதே கடந்து சென்று விடுவான். அவள் திடுக்கிட்டு கேட்டால், ''ஒன்றுக்கத்த விஷயங்களை பெரிய கதை போல் அளக்க வந்து விட்டாய் போ.. போ..!'' என விரட்டுவான்.

என்ன இது வாழ்க்கை என காஞ்சனையின் உள்ளம் சலிப்படையலாயிற்று.

அன்று அப்படித்தான் சுவரோரம் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தவள் மாமியார் விசாரிக்க ஆரம்பித்து விட்டாள்.

காஞ்சனை அதுவரை முகத்தை குனிய வைத்திருந் தவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். பின் உண்மையை சொல்ல மனமில்லாமல் ''இதுவரை இப்படி அப்பா அம்மாவை பிரிந்து இருந்ததில்லை. ஒரே ஒரு தடவை பத்து நாட்கள் டூர் சென்று தவித்துப் போயிருக்கிறேன்'' என்றாள் பேச்சை மாற்றும் விதமாக.

அவள் கூறிய விதமும் கண்களில் நீர் திரையிட்ட அவள் முகக் கோலமும் கல்யாணி அம்மாளை என்னவோ செய்தது. 'பாசக்கார பெண்தான்' என உள்ளூர நெகிழ்ந்தவள்,



''எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுவதுதான் உனக்கும் ஏற்பட்டு இருக்கிறது. அதனால் வருத்தப்படாமல் மனதை திருப்பி வேறு விஷயங்களில் செலுத்து. எல்லாம் சரியாகப் போய்விடும். இன்று மாலதி வந்ததும் எல்லோரும் கோயிலுக்குப் போகலாம். ஊரில் பெரிய சிவன் கோவில். நீ பார்த்திருக்க மாட்டாய்!' என்றதும் சம்மதிப்பது போல் தலையை ஆட்டத்தான் செய்தாள் காஞ்சனை.

அன்று மாலை சொன்னாற்போல் எல்லோரும் கிளம்பி னார்கள். உதயசந்திரன் கூட வீட்டில்தான் இருந்தான். இவள் போய் அழைத்ததும் 'கோவிலுக்கா? நானா?' என்றான்.

அவளுக்குப் புரிந்தது. இலக்கியம் படித்தவன், பகுத்தறிவாதி, தலையில் கொம்பு முளைக்காத குறைதான்! என அவன் தங்கை மாலதி கிண்டலடித்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

அவள் விழிகள் விரிய திகைத்து நிற்பதைப் பார்த்ததும், ''என்ன முதல் முறையாய் கூப்பிடுகிறோம்... வர மறுக்கிறானே... என்று நினைக்கிறாயா?'' என்றபடி எழுந்து அவள் பக்கம் வந்தவன் அழுந்த அவளது தோள்களைப் பற்றிக் கொண்டு, ''நோ... சென்டிமெண்ட்ஸ். காஞ்சனை.. வேண்டுமானால் நீ எனக்கும் சேர்த்து கும்பிட்டு வா... இரவுப் பொழுது இனிமையாக சுகமாக கழிய வேண்டும்... என்று..'' கண்ணடித்தபடி சொல்லியபோது முகம் சிவக்கத்தான் செய்தாள் அவள்.

அதற்குப் பின் பரபரவென அவளை அவசரப்படுத்தி மாலதி கூட்டிச் சென்று விட்டாள். வீட்டிலிருந்து கோவில் பக்கமாக இரண்டு தெருக்கள் தாண்டும் தூரமாய் இருந்தது.

கல்யாணி அம்மாள் பின்னால் நடந்துவர மாலதி காஞ்சனையின் கைகளைப் பிடித்துக் கொண்டு இழுக்காத குறையாய் முன் நடத்தி சென்று கொண்டிருந்தாள்.

மாலதியிடம் மடை திறந்தாற்போல் ஒரே சளசள பேச்சுத்தான். அவள் கல்லூரிக் கதைகள் தோழிமார்களின் அடாவடிப் பேச்சுகள் என ஒன்று விடாமல் சொல்லி அறுத்துக் கொண்டிருந்தாள்.

காஞ்சனைக்கோ, தன் வீட்டு அக்ரஹாரத் தெருவில் இருந்து தினமும், அதிகாலை குளித்து முடித்து தந்தை யுடன் சென்று பக்கத்திலிருக்கும் பசுபதி நாதரை தரிசித்து கோவிலுக்கு சென்று வந்த அனுபவமே ஞாபகத்திற்கு வந்தது.

அப்படி கிளம்பும்போது தந்தை வாயில் விரல் வைத்தபடி ''கோவிலுக்குச் செல்கிறோம். வீண் கதைகள் பேசக் கூடாது.. மனதை ஒருநிலைப்படுத்திச் செல்ல வேண்டும். இறைவனிடம் மனமுருக வேண்ட வேண்டும்'' எனச் சொல்லி கூட்டிச் செல்வார்.

சிறு வயது முதல் ஏற்பட்ட பழக்கமானதால் கோவிலுக்கு செல்வதென்றால் கண்களை மூடாத குறையாய் யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் விறுவிறுவென நடப்பாள். மனமுருக வேண்டுவாள். வந்து விடுவாள்.

இப்போது அதற்கு நேர் மாறாய் கோவில் பிரகாரத்தில் நுழைந்த பிறகும் மாலதி பேச்சை நிறுத்தாதது ஆச்சரிய மாகவே இருந்தது. அன்று விசேஷ நாள் என்பதால் கோவிலில் ஒரே கூட்ட நெரிசல்... வரிசையில் நின்று தரிசித்தார்கள்.



வெளிவந்ததும் கோவில் வீதியை நோக்கி இழுத்தாள் மாலதி.

மாலதி ஒரு ஜடை தலைமாட்டிப் பைத்தியம். விதவிதமாய் தலைமாட்டிகள், ஜடைப் பின்னல்கள் வாங்குவதில் அவளுக்கு அலாதிப் பிரியம். ஒவ்வொரு நாளும் அவளது நீள கூந்தலை வாரி வாரி அரை மணி நேரம் பின்னும் போதே அவள் ஆர்வத்தை காஞ்சனை உணர்ந்திருந்தாள்.

அதேபோல் கடைக்காரரை விரட்டி குடைந்து விதவித மான கலர் மாட்டிகளை பொறுக்கிக் கொண்டிருந்தாள். கல்யாணி அம்மாள், ''நீயும் ஏதாவது வாங்கிக் கொள் காஞ்சனை..'' என்றபோது, ''இல்லை, அத்தை...'' என வேகமாய் தலையசைக்கத்தான் செய்தாள்.

ஆனாலும் மாலதியும் கல்யாணியும் தொடர்ந்து வற்புறுத்தவே ஏதாவது வாங்கிக் கொள்ள நினைத்து கடையில் பார்வையை ஓட்டினாள். அவள் மனதில் திடும்மென அந்த ஆசைதான் ஓடியது.

உதயசந்திரனுக்கு ஏதாவது வாங்கி சர்ப்பரைசாக பரிசளித்தால் எப்படி இருக்கும்? என யோசித்து அப்படியே செய்ய நினைத்தாள். பெண்களுக்கான பேன்ஸி ஸ்டோரில் அவனுக்காக எதை வாங்க முடியும்? என அவள் திகைத்த போது அவள் கண்களில் அந்த பொம்மைகள் தென்பட்டது.

மைவிழிகளை விரித்து பார்த்தபோது கையில் துப்பாக்கியுடன் விரைப்பான போர் வீரன் பொம்மை ஒன்று தென்பட... உற்சாகமாய் அதை எடுத்தாள்.

தொப்பி வைத்தபடி கம்பீரமாய் இருந்தாலும் ஒருவித அசாத்திய விறைப்புடன் நின்ற அந்த போர் வீரன் அவளுக்கு உதயசந்திரனை ஞாபகப்படுத்துவதாய் உணர்த்த ரொம்பவும் சந்தோஷமானாள். கடைக்காரர், ''அது மிலிட்டரி பொம்மைம்மா... ஐம்பது ரூபாய்'' என்றபோது மாலதி திரும்பி ''என்ன அண்ணி... பொம்மையைப் போய் வாங்கியிருக்கிறீர்கள்?'' என்றாள்.

''எனக்குப் பிடித்திருக்கிறது. வாங்கிக் கொள்ளட்டுமா?'' என்று பிரயாசையாய் கேட்டபோது மாலதி துடுக்காய், ''அண்ணி, கடையில் சிறு சட்டி பானை எல்லாம் கூட வைத்திருக்கிறார்கள். வீட்டில் போய் சோறு பொங்கி விளையாடும் விளையாட்டு விளையாடலாம். வாங்கு வோமா?'' என்று கிண்டலடித்தபோது கூட சிரிக்கவே செய்தாள்.

ஒரு வழியாய் ஒரு மணி நேரத்திற்குப் பின் வீடு திரும்பியபோது உதயசந்திரன் வீட்டில் இல்லை. சாவியை பக்கத்து வீட்டில் கொடுத்து விட்டு எங்கோ சென்றி ருந்தான்.

அவள் விழிப்பதைப் பார்த்து 'எங்கோ செல்லவில்லை. கல்லூரிப் பேராசிரியரான லாசர் சாரை பார்க்கத்தான் அண்ணா சென்றிருப்பார். இருவரும் பால்ய நண்பர்கள். உலக நடப்புகளை தினமும் ஒரு அலசு அலசா விட்டால் இருவருக்கும் தூக்கம் வராது...' என விளக்கினாள்.

மாலதி சொன்ன மாதிரியே உதயசந்திரன் திரும்ப வீடு வரும்போது மணி பத்து. அவனுக்காக சாப்பிடாமல் ரூமின் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தவள் பைக் சப்தம் கேட்டு வெளிவந்தாள்.



பைக்கை ஸ்டாண்ட் செய்து சாவியை தூக்கிப் பிடித்து விளையாடியபடியே உள்ளே நுழைந்தான். அவளைப் பார்த்ததும் ''ஹாய், சுவிட்டி, கோவிலுக்குப் போனாயா? தரிசனம் செய்தாயா? சாமியை கும்பிட்டாயா?' என்றான்.

அவள் வெறும் 'ம்ம்' என்ற அழுத்தத்துடன் அவன் பக்கம் வந்து கையில் வைத்திருந்த கணத்த புத்தகங்களை வாங்கினாள்.

''புத்தகங்களை வாங்கினால் மட்டும் போதாது. அட்டையைப் பார். படித்துப் பார்..'' என்றான்.

அவள் பார்வையை ஓட்டினாள்.

''சர்ரியலிஸம்' என்ற புத்தக தலைப்பில் எழுதியவர் 'சால்வேடார் டாலி' என பிரசுரிக்கப்பட்டிருந்தது. அட்டைப் படமாக நிலையான கடிகாரம் ஒன்று உருகி வழிவது போன்ற விசித்திரமான படமும் இருந்தது.

அவள் திகைப்பதைப் பார்த்து உதயசந்திரன் விளக்கி னான். ''இதுதான் சர்ரியலிசம் என்பது. எதையும் அதன் நிலையற்ற தன்மையில் பார்க்கும் முறை. அருமையான புத்தகம். லாசர் சாரிடம் இருந்து வாங்கி வந்திருக்கிறேன். படிக்கிறாயா?' என்றான்.

அவன் முகத்தில் தெரிந்த ஆர்வத்தைப் பார்த்து, ''நேரம் கிடைக்கும்போது படிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, ''டிபன் ரெடியாக இருக்கிறது. எடுத்து வைக்கிறேன்'' என்றபடி அகலப் போனாள்.

டக்கென அவள் கைகளைப் பிடித்து இழுத்தவன், லேசான தொந்தியை தட்டிக் காட்டினான். ''ஆல்ரெடி புல்... ஹோட்டலில் சாப்பிட்டு விட்டேன். நீ சாப்பிடு..'' என்றபடி

கன்னங்களை தட்டி விட்டு உள்ளே உடை மாற்ற சென்று விட்டான்.

அவனுக்காக ஒரு மணி நேரம் அரக்கப் பரக்க சப்பாத்தியையும் சுவையான பட்டாணி குருமாவையும் ஆசையாய் செய்து வைத்தவளுக்கு மனதில் ஏற்படும் சலிப்பான ஏமாற்றத்தை ஜீரணிக்க கஷ்டமாகவே இருந்தது. நேரமாகி விட்டதால் மாலதி, கல்யாணி அம்மாள் எல்லோரும் அவரவர் ரூமிற்குச் சென்று கதவை சாத்திக் கொண்டாயிற்று.

பசி வயிற்றைக் கிள்ளினாலும் தான் முதன் முதலாய் ஆசையாய் சமைத்த உணவை அவன் சாப்பிடாதது எரிச்சலையே கிளப்பியது. அந்த எரிச்சல் கோபமாக பாத்திரங்களில் அப்படியே தண்ணீர் ஊற்றி விட்டு சாப்பிடப் பிடிக்காமல் அகன்றாள்.

ரூமிற்குள் நுழைந்தபோது அதற்குள் கைலி பனியனுக்கு மாறியிருந்தவன் உட்கார்ந்து சிடி பிளேயரை குடைந்துக் கொண்டிருந்தான்.

இனி ஒரு மணி நேரத்திற்கு அவனுக்கு பாட்டுக் கேட்க வேண்டும். டம் டம் என ஸ்பீக்கர்களை அலற விட்டு கேட்பதில் அவனுக்கு அலாதி சுகம்.

பின்னால் கட்டிலில் வந்து உட்கார்ந்தவளை அவன் கவனித்த மாதிரியும் தெரியவில்லை. அவளிடம் இரண் டொரு வார்த்தைகள் பேசுவது மாதிரியும் தெரியவில்லை.

அவள் அப்படி சாப்பிடாததைக் கூட அவன் உணரப் போவதில்லை என்று தோணிற்று. அப்படியே அவளை உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.



ஐந்து நிமிடத்தில் பிளேயரை ஓட விட்டபடி யதேச்சை யாய் திரும்பியவன் கட்டிலில் சலனமில்லாமல் அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விட்டு "ஹாய் பியூட்டி வந்து விட்டாயா?" என்றபடி பக்கம் வந்து உட்கார்ந்தான்.

அவளுக்கு இயல்பாக அவனிடம் பேசிப் பார்க்கும் எண்ணத்தில் "கோவில் கடை வீதியில் உங்களுக்கு ஒரு பரிசுப் பொருள் வாங்கினேன்" என்றாள் கண்கள் நாண.

"பரிசுப் பொருளா? எனக்கா? கொடு! கொடு!" என அவன் பரபரத்த போது சட்டென கை மறைவிலிருந்த அந்த சிறிய மிலிட்டரி பொம்மையை வெளிப்படுத்திக் காட்டினாள்.

"என்ன.. இது பொம்மை?" என்று வாங்கிப் பார்த்தவன், "அடடா.. மிலிட்டரி சோல்ஜர்.. இதுவா நீ சொன்ன பரிசு?" என கேலி பொங்கப் பார்த்தவன் மறுகணமே "ஒரு வகையில் இது கூட எனக்குப் பிடித்ததுதான் ஏன் தெரியுமா?" என கேள்வியாய் நிறுத்தினான்.

பின் அவனே பதிலாய், "மிலிட்டரியில் சேர ரொம்பவும் முயற்சித்தேன். சிறு வயது முதலே அப்படி ஒரு ஆசை எனக்கு. ஆனால் கடைசி வரை தேர்வுகளில் செலக்ட் ஆகாததால் சேர முடியாமல் போயிற்று" என முடித்தான்.

"அப்படியானால் இது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்றாள் பிரயாசையாய்.

"பிடித்திருக்கிறது. பதிலுக்கு நானும் ஒரு பரிசு தரப் போகிறேன்.." என்றான் பூடகமாய்.

"என்ன பரிசு?" என ஆவலாக அவள் முகம் பக்கத்தில் வேகமாய் வந்தவன், 'வேறென்ன? அந்த இரண்டு

எழுத்துப் பரிசுதான்!'' என்றபடி அவள் இதழ்களில் அழுத்தமான முத்திரை ஒன்று பதித்தான்.

எதிர்பார்க்காததால் சிவந்து விலகப் போனவளை வாரிக் கொண்டான். கைகளால் இறுக்கமான சிறைப் பிடிப்பும் பிடிக்க ஆரம்பித்தான்.

அதனாலே இனிமையாக உணரப்பட வேண்டிய நெருக்கம் அந்த அவனது முரட்டுப் பிடியால் அவஸ்தை யாய் இருந்தது. ''ஐயோ விடுங்கள்..!'' என அவள் கூவியபோது ''விடுவதாவது? இனிதான் ஆரம்பம்..'' என்றபடி வேகத்தையும் பலத்தையும் பிரயோகிக்க.. திணறித்தான் போனாள் அவள்.

தங்கை மாலதி சொன்ன ''அண்ணன் சரியான காட்டான்'' என்ற வாசகம் காஞ்சனை மனதில் தோன்றி முதல் முறையாய் உறுத்த ஆரம்பித்தது.



6

**அ**வன் உதயசந்திரன் முன் இரவு காட்டிய முரட்டுத்தனத்தில் ஒடுங்கிப் போய் படுக்கையில் சுருண்டிருந்தாள் காஞ்சனை.

காலை எழும்போது அவள் முகத்தை தன் பக்கம் திருப்பி வேண்டுமென்றே அவள் கன்னங்களைத் தட்டியவன், ''ஹாய் பேபி, என்ன இப்படி விழிக்கிறாய்? இப்போது என் குணம், சுபாவம் புரிந்து விட்டதா? அதற்கு ஏற்ப உன்னை மாற்றிக் கொள். நடந்து கொள். ஓகே?'' என்றான்.

அவள் பேசாது அவனையே முறைப்பது போல பார்க்கவும், ''ஓகேயா.. ஸ்வீட்டி?'' என மறுபடியும் கேட்டு



பெரிய மன்மதன் போல் அவள் நெற்றியில் தன் உதடு களைப் பதித்து அவளை மேலும் எரிச்சல் படுத்தியவாறு அகன்றான்.

காஞ்சனைக்கு குபுக்கென விழித்திரைகளில் நீர்தான் பொத்துக் கொண்டு வந்தது.

பொதுவாக காஞ்சனை எதற்குமே அழுகிறவள் இல்லை.

அழுவது கோழைத்தனம்... அழுது ஒன்றும் ஆகப் போவதில்லை. பெண்கள் என்றாலே கண்ணை கசக்கிக் கொண்டு நிற்பது ஒன்றே வேலை என்றெல்லாம் இகழ்வாய் பரிகாசம் செய்யும் அளவுக்கு தான் ஒருபோதும் ஆகி விடக் கூடாது என்ற பிடிவாதமும் அவளுள் உண்டு.

அதனாலே உதடுகள் அழுந்த பற்களால் கடித்து குமிழியிட்ட நீர்த் துளிகளை நிறுத்தி அடக்கினாள்.

ஆனாலும் உதயசந்திரனை நினைத்தால் அவளால் உணர்வுகளை அடக்க முடியாமல் சிரமப்படத்தான் வேண்டியிருந்தது.

எவ்வளவு பெரிய தோல்வி இது!

அவளைத் தொட்டுத் தாலி கட்டியவன் அவளை வெறும் ஒரு போகப் பொருளாய்த்தான் எண்ணுகிறான். உபயோகிக்கிறான்.

கேட்டால், அதுதான் அவனது குணமாம். சுபாவமாம். அவள் பழகிக் கொள்ள வேண்டுமாம்.

மற்றபடி அவளுக்கென்று ஒரு மனம், ஒரு உணர்வு என்று ஒன்றையும் அவள் வைத்திருக்கக் கூடாது. அதை அனுமதிக்கவும் மாட்டான் அவன்.,

அருவருப்பு தோன்ற படுக்கையில் இருந்து எழுந்தவள் உடைகளைச் சரி செய்தாள். மென்மையாய் மலர் போல் முகர்ந்து செய்ய வேண்டியவைகளை கடித்துக் குதறும் புலியாய் அவன் செய்வது பெரும் ஆத்திரத்தையும் அவளுள் கிளப்பியது.

பேசுவதற்கு, உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு எல்லாம் தேவைப்படாத அவள் இதற்கு மட்டும் அவனுக்கு வேண்டும். என்ன ஒரு கையாலாகாத்தனம் இது?

இது இப்போது மட்டுமல்ல... ஒவ்வொரு இரவும் கூட தொடருமே?

அவன் மாறுவான் என்பதை விட மாற மாட்டான் என்பதுதானே நிச்சயம்!

இதை நிறுத்த வேண்டும்? இந்த அடிமைத்தனமான சித்திரவதையில் இருந்து தப்பிக்க வேண்டும். எப்படி? எப்படி தப்புவது?

நைட்டியின் முழங்கால்களை கட்டிக் கொண்டு ரொம்ப நேரம் சிந்தித்தாள் அவள்.

டக்கென்று தலையில் யாரோ தட்டுவது போல உணர்ந்து உணர்வுக்கு வந்தாள்.

அவன்தான் தட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

அவள் திடுக்கிட்டுப் பார்க்க டூத் பேஸ்ட் விளம்பரச் சிரிப்பை பெரிதாய் சிரித்தான். இப்படித் தேவையில்லாத நேரத்தில் அவளுக்கு பிடிக்காத பொழுதுகளில், வன்மத்துக் காக இப்படிச் சிரிக்கிறானே... என அவளுள் எரிச்சல் கூடியது.



"என்ன இரவு நடந்தவைகள்.. கனவுகளாய் படர்ந்து விலக மறுக்கிறதா? ஸ்வீட் ட்ரீம்ஸ் போல் மூளையில் உட்கார்ந்து... படுக்கையை விட்டு எழும்ப மனமில் லையா?" என நாடக பாணி டயலாக் போல் கேட்டு அவளது முகத்தைப் பார்த்ததும் படபடவென எழுந்து விட்டாள் அவள்.

இவனிடம் இன்னமும் ஏதாவது பேசினால் குதர்க்கமாய் பேசுவது.. என்ன கடிக்கவே செய்வான் என பயந்து ஓடத்தான் செய்தாள் அவள்.

"அது..! அந்த பயம் இருந்தால் சரி!"

அவள் விரைந்து அகல்வதைப் பார்த்து கெக்கலிப்புடன் அவள் பின்னால் உதிர்த்த வார்த்தைகளைக் கேட்டபோது அவளுக்கு சுரீரென்றது.

பயம்..! அடிமை..!

இடையில் ஒரு நாள் அவன் இதுபற்றி பேசி பெரிய லெக்சர் ஒன்று அடித்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

அதாவது, "உலகிலேயே கொடுத்து வைத்த ஆண்கள் அரபு நாட்டு ஷேக்குகள்தானாம். அவர்கள் பெண்களை கரெக்ட்டாக வைத்திருக்கிறார்களாம். நடத்துகிறார்களாம்.." என்றான்.

அவள் "எப்படி?" என்றபோது விளக்கமும் கொடுத்தான்.

"அதாவது அரபு ஷேக்குகள் மனைவிமார்களை கிட்டத்தட்ட ஒரு அடிமை போல்தான் நடத்துவார்களாம். அவர்கள் நினைத்தால் எத்தனை பேரை வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளலாம். யாரையும் பிடிக்காவிட்டால் உடனே

தள்ளி வைத்து விலக்கியும் கொள்ளலாம். மேலும் அந்த அரபு பெண்கள் வெளியே எங்கும் செல்லக் கூடாது. யாரையும் பார்க்கக் கூடாது. வீட்டுக்குள்ளே அடைந்து அவர்களது கணவன்மார்களுக்கு பணிவிடை மட்டும் செய்ய வேண்டும். அப்படி ஒரு எழுதப்படாத சட்டத்தை அந்த ஷேக்குகளை உருவாக்கி பெண்களை தங்களது முழு கட்டுப்பாட்டில் அடிமை போல வைத்திருக்கிறார்கள். கொடுத்து வைத்தவர்கள்..!'' என உதயசந்திரன் பொறாமையாய் சொல்லி முடித்தபோது அவளுக்கு திக்கென்றுதான் இருந்தது.

கூடவே அவன் சொன்ன விதம் சொல்லியதற்கான நோக்கம் புரிந்து திடுக்கிடவே செய்தாள்.

அப்படியானால்... இவன் என்னை அடிமை போல இருக்க வேண்டும் என்று நினைக்கிறானா?

அவள் சந்தேகத்தை உடனே அவனே நிவர்த்தியும் செய்தான். ''என்ன புரியவில்லையா? அப்படி அடிமைகள் போல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? ஏனென்றால் நீங்கள் பெண்கள் அனைவரும் சுத்த குமுட்டைகள்!'' என்றான் மொத்த பெண் குலத்தையும் இழிவுபடுத்துபவன் போல்.

''குமுட்டைகளா?''

''ம்ம்... பின் உங்களுக்கு என்று எப்போது எந்த வயதில் சொந்த புத்தி இருந்திருக்கிறது? சொந்தமாய் யோசித்திருக் கிறீர்கள்? என்று பூப்பெய்தி வயதுக்கு வந்துவிட்டீர்களோ... அன்றே உங்களை எவன் தலையிலாவது கட்டி விட வேண்டும் என் பொறுப்பு பெற்றவர்களுக்கு வந்து



விடுகிறது. உடனே அவர்கள் தேடுகிற ஒரு இளிச்சவாய மாப்பிள்ளைக்கு தலையாட்டி மனைவியாயும் ஆகிவிடு வீர்கள். பின் என்ன அடுப்பங்கரையில்... சமையல் செய்து... பிள்ளை பெற்று வளர்ப்பது என உங்களது மொத்த வாழ்வே அதில் முடிந்து விடும். சுயமாய் எதுவும் உங்களுக்கு சிந்திக்கத் தெரியாது. எப்போதும் யாரையாவது நாடி வாழ்க்கையை ஓட்ட வேண்டும் என்பதே உங்களது தலைவிதி. முதலில் பெற்றவர்கள்... பின் கல்யாண மானதும்... அருமைப் புருஷன்மார்கள்... இப்படியே வண்டியை ஓட்டுவதுதான் உங்களுடைய பிழைப்பும் கூட..''

எதையோ ஆரம்பித்து எப்படியோ பேசி இகழ்ச்சியாய் முடித்தான் உதயசந்திரன். அவன் பேசுவது முரண்பாடாய் இருந்தாலும் சொல்லிய விஷயத்தில் இருக்கும் உண்மை புரிந்தது. காலங்காலமாய் பெண்களுக்கு நடக்கும் பிரச்சினைதானே இது?

இதையெல்லாம் இவ்வளவு தெளிவாய் யோசித்து புரிந்து கொள்கிறவன் அவளை புரிந்து கொள்ள மறுக்கிறானே? அவள் உணர்வுகளை சட்டை செய்யாதவன் போல் நடமாடுகிறானே? இவனை என்ன செய்வது?

மறுபடியும் அவனது சுபாவத்தை நினைத்து குழம்ப ஆரம்பித்தாள் காஞ்சனை.

அவள் அப்படி சிலை போல் நிற்பதைப் பார்த்தவன் அவசரமாய் அவள் பக்கம் வந்தான்.

டக்கென கைகளால் பின்புறமாய் வளைத்து அணைத்தான். மறுபடியும் ஒரு இறுக்கமான பிடி.

அவள் எரிச்சல் ததும்ப திரும்ப அத்தனை பற்களையும் காட்டி அவளை மேலும் எரிச்சலாக்கியவன், "ஆனால் பார், இதுபோன்ற சில்லரை விஷயங்களுக்கு கணவன்மார்களை குஷிப்படுத்த நீங்கள் தேவைப்படுவீர்கள்தான்... சரியான குமுட்டைகள்! அழகான குமுட்டைகள்!"

சொல்லி மறுபடி அவளை இறுக அணைத்தான். கன்னங்களில் முத்தமிட்டு விடுவித்தான்.

சே! என்ன மனிதன் இவன்? என நொந்து போகத்தான் செய்தாள் காஞ்சனை.



7

**ம**றுவாரம் இன்னொரு நாத்தனாரான உதயா வந்து குதித்தபோது காஞ்சனைக்கு வேறுவிதமான அனுபவமே ஏற்பட்டது.

உதயாவை கல்யாணத்தில் பார்த்தது.. மறுநாளே அவள் புதுசாய் சேர்ந்திருக்கும் வேலையில் ட்ரெயினிங்கிற்காக செல்ல வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவினால் உடனே பெங்களூர் சென்று விட்டாள். இன்றுதான் திரும்பி வந்திருக்கிறாள்.

உதயா மாலதிக்கு, மூத்தவள். அவளுக்கு கல்யாணம் செய்து விட்டுத்தான் தனக்கு என்று உதயசந்திரன் உறுதியாய் இருந்தானாம். ஆனால் வருகிற மாப்பிள்ளை வரன்களை எல்லாம் பிடிக்கவில்லை... பிடிக்கவில்லை.. என்று கூறியே.,.. முப்பதைத் தாண்டி விட்டாள் உதயா.

முப்பத்திமூன்று வந்ததும் 'இனி கல்யாணம் எனக்கு வேண்டாம். இப்படியே இருந்து விட்டுப் போகிறேன்' என



உறுதியாய் அறிவித்த பிறகுதான் வேறு வழியில்லாது உதயசந்திரனுக்கு திருமண ஏற்பாடுகளை தொடங்கினார்களாம்.

உதயா தங்கை மாலதிக்கு நேர் எதிராய் சிடுசிடு சுபாவம் என வந்த முதல் நாளே தெரிந்து விட்டது. காஞ்சனை முக மலர்ச்சியுடன் வழியப் போய் பேச்சு கொடுத்தாலும் அளவாகவே பேசினாள்.

காஞ்சனை அவளது அலுவலகம் வேலை பற்றியெல்லாம் வெகு அக்கறையாய் கேட்டும் பதிலுக்கு அவள் காஞ்சனை பற்றி எதுவும் கேட்காதது ஏமாற்றமாகவே இருந்தது. சிரிக்கக் கூட யோசித்தவளாய் அரைப் புன்னகையையே சிந்தினாள்.

மாலதி மதியம் வந்தவள், சுட்டித்தனமாக "உதயாக்கா.. பார்த்தாயா? நம் அண்ணி எவ்வளவு அழகு? அப்படியே... ஏதோ சினிமா ஸ்டார் போல் அல்லவா ஜொலிக்கிறார்கள்?" என்றாள். முகம் சிவந்த காஞ்சனையைப் பார்த்து கண்டித்தவாறு.

பதிலுக்கு உதயாவோ, "அழகுதான்! ஆனால் என்னை விடவா?" என்றாள்.

மாலதி அதற்கு முகம் வெட்டினாள். "நீயும் அழகு.. அழகாய்த்தான் இருந்தாய். ஆனால் உன் வயதுதான் எகிறி விட்டதே... என்ன இந்த ஜூன் பிறந்தால்... உனக்கு முப்பத்தி நாலுதானே?" எனவும் உதயாவின் முகம் அப்படியே கறுத்து கூம்பிப் போய்விட்டது.

கூடவே கோபமாய் மாலதியை முறைத்தவள், "அடுத்த மூன்றாம் நபர் முன் இப்படி என் வயதைச் சொல்லி குத்தி

குத்தி பேசாதே என எத்தனை முறை உன்னிடம் சொல்லி யிருக்கிறேன்... உன் மூளை மட்டும் ஏன் இப்படி அடிக்கடி பிசகி விடுகிறதோ தெரியவில்லை!'' என்றாள் எரிச்சலுடன்.

''ஐயோ அக்கா! காஞ்சனை ஒன்றும் மூன்றாம் நபரில்லை. நம் மன்னி! அண்ணனின் அன்பு மனைவி..!'' என்றபடி காஞ்சனையின் பக்கம் வந்து கழுத்தைக் கட்டியபடி உதயாவின் கோபம் புரியாமல் கொஞ்சத்தான் செய்தாள்.

உதயாவால் கொண்டிருந்த எரிச்சல் தீராமல், ''ஆமாம்.. அன்பு மனைவிதான்! இந்த அழகை வைத்து அண்ணனை மயக்கினால் சரிதான்!'' எனவும் வீணாக அவளது கோபத்திற்கு தானும் ஆளாகுவது கண்டு காஞ்சனை திடுக்கிட்டாள்.

''ஐயோ! மாலதி விளையாட்டுக்காக சொல்கிறாள். நிஜமாகவே நீ.. நீ.. நீங்கள் அழகுதான்!'' என்றாள் திக்கித் திணறி.

காஞ்சனை அப்படி முடிப்பதற்குள் கடகடவென மாலதி சிரித்தாள். 'இருவரும் காரணம் புரியாமல் விழிக்க மாலதியோ, ''பார், அண்ணி கூட உன் வயதைக் காட்டி 'நீங்கள்' என அழைக்க ஆரம்பித்தாயிற்று. இனி சூப்பர்... சூப்பர்தான்! உதயாம்மா! உதயா.. மேடம்! எனறெல்லாம் அழைத்தால் கேட்கவே ரொம்பவும் நன்றாக இருக்கிறதே!'' என மேலும் கிண்டலடிக்க காஞ்சனை பயந்தே போனாள்.

உதயாவோ எரிமலையாகி இருவரையும் மாறி மாறி முறைத்தவள், காஞ்சனையை கடுமையாக நோக்கி, ''நான் உன்னை விட வயது குறைந்தவள்தான். சின்னவள்தான்.



பெரும் மரியாதை கொடுப்பது போல் கொடுத்து என்னைக் கேவலப்படுத்தாதே!'' என்றாள்.

பின் விருட்டென முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அங்கிருந்து அகன்றாள்.

காஞ்சனை நிஜமாகவே வருந்தியவளாய் மாலதியைப் பார்த்தவள், ''என்ன மாலதி... இப்படிப் பண்ணிவிட்டாய்?'' என சோகமாக, மாலதி அவள் தோள்களைத் தட்டி, ''அவளை விடுங்கள்! அவள் எப்பவும் இப்படித்தான். சரியான சிடுமூஞ்சி! அதான் கலாட்டா பண்ணினேன்!'' என்றவாறு அதே சிரிப்பு சிரித்தபடி காஞ்சனையின் ஜடையைப் பிடித்து ஆட்டியவாறு ஓடினாள்.

காஞ்சனை வியப்பாகி மலைத்துதான் நின்றாள். இருவரும் அக்கா தங்கைகள். ஆனால் என்ன ஒரு மாறுபட்ட குணம். இவள் சுட்டிப் பெண். அவள் சிடுசிடு. ஆனாலும் உதயாவை இப்படியே விடக் கூடாது. தன் அன்பை உணர்த்தி அவளை சமாதானப்படுத்தி விட வேண்டும் என நினைத்தாள்.

ஆனால் அதற்குள் அன்று மாலையே உதயா கல்யாணி அம்மாளிடம் அவள் முன்னிலையிலேயே புகார் பட்டியல் வாசிக்க ஆரம்பித்து விட்டாள்.

''பாரம்மா, இந்த மன்னியும் மாலதியுடன் சேர்ந்து என்னை கிண்டலடிக்கிறார்கள்..'' எனவும் காஞ்சனை பதறித்தான் போனாள்.

''ஐயோ.. உதயா! அப்படியெல்லாம் இல்லை. நீ என்னை தவறாக நினைத்து விடாதே..'' என ஓடிப் போய் கெஞ்சுவது போல் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

அதனாலோ என்னவோ கல்யாணி அம்மாள் முகத்திலும் சட்டென பரவிய ஒருவித இறுக்கம் தளர்ந்தது.

"உதயா, காஞ்சனை நல்ல பெண்தான்! உன் மனம் புரிந்து நடந்து கொள்வாள்!" என்றாள்.

காஞ்சனை அவள் உதயாவை பின்புற தோட்டத்துப் பக்கம் இழுத்துக் கொண்டு போய் பேசினாள். இயல்பான பேச்சு கொடுத்து அவளை தன் வசப்படுத்த முயன்றாள்.

உதயாவோ அவளை ஏதோ எதிரி போல பாவித்து கைகளைத் தட்டினாள்.

"என்னை ஒன்றும் தாஜா செய்ய வேண்டாம். உன் அழகைக் காட்டி அண்ணனை தாஜா செய்து மயக்கு. அதுபோதும்!" என்றாள்.

அவளுக்கு இந்த அழகு விஷயமே பெரும் எரிச்சலாய் உறுத்தல் போல் எழுந்து விட்டதை காஞ்சனா உணர்ந்தாள்.

அதை மட்டுப்படுத்தும் விதமாக, "உதயா நிஜமாகவே சொல்கிறேன். நீ கொள்ளை அழகுதான். எலுமிச்சை நிறத்தில் கன்னக் கதுப்புகள் பளபளக்க... இன்னமும் நீ அழகாய்த்தான் ஜொலிக்கிறாய்.." என்றாள் வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன்.

ஆனால் அதற்கும் சலிக்கவே செய்தாள் உதயா. "என்ன அழகு இருந்து என்ன பயன்? நீ.. என் அண்ணனை மயக்குவது போல் எனக்கு மயக்க ஆள் இல்லை. எனக்கென்று ஒரு வாழ்க்கையும் அமையவில்லை" என்றாள் வெறுப்பான குரலில்.

அவள் சொல்லியதற்கு சிறிதும் கோபப்படாமல் அவள் மீது பரிதாபமே கொண்டாள் காஞ்சனை.



சின்னப் பெண். கல்லூரிப் பருவம் முதல் எவ்வளவு ஆசைகள் வைத்திருப்பாள்? எதிர்காலம் பற்றி எவ்வளவு கனவுகளில் மிதந்திருப்பாள்? எல்லாவற்றையும் நொறுக்கு வது போல் சூழ்நிலைகளால் தடம் புரண்டு கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு முதிர் கன்னியாய் அல்லவா ஆகப் பார்க்கிறாள்?

இவளுக்கு பொருத்தமான ஒரு மாப்பிள்ளையைத் தேடிக் கட்டி வைத்தால் எல்லாம் சரியாகி விடும் தானே? எனவும் அவளுள் யோசனை ஓடியது.

ஆனால் கல்யாண விஷயத்தில் உதயா ஏன் மறுக்கிறாள்? உண்மையான காரணம் என்ன இருக்கக் கூடும்? எனவும் கண்டுபிடிக்க நினைத்தாள்.

மாலதியிடம் பேச்சுக் கொடுத்து ஓரளவு விஷயத்தை கிரகிக்க முடிந்தது. ஒரே வரியில் 'காதல் தோல்வி' என்று சொல்லி விட்டாள் அவள். உதயா வேலைக்குச் சேர்ந்த புதியதில் உடன் வேலை பார்க்கும் ஆள் ஒருவரை காதலித்தாளாம்.

இருவரும் உயிருக்குயிராய் காதலித்தும் ஒருநாள் நடந்த சின்ன பிரச்சினை ஒன்றுக்காக சண்டை போட்டு பிரிந்து விட்டார்களாம். அந்தக் கோபத்தில் அந்தக் காதலன் உடனடியாக உதயா முன்னிலையிலேயே வேறொரு பெண்ணை மணந்து கொண்டு டிரான்ஸ்பர் வாங்கிச் சென்று விட்டானாம். அதனாலே மனதில் நொந்து நூலாகி விரக்தியாகி விட்டாளாம் உதயா.

விஷயத்தைக் கேட்ட காஞ்சனைக்கு இப்போது அவளது எதற்கெடுத்தாலும் கோபப்படும் சிடுமூஞ்சித்தனம் கூட நியாயமானதுதான் போல என்றும் தோன்றியது.

தான் வேலை பார்த்து சுயமாய் சம்பாதிப்பதால் யாருடைய தயவும் வேண்டாம். சொந்தக் காலிலே நின்று விடுவோம் என்கிற தைரியம் வந்து இப்படி கல்யாணமே வேண்டாம் என முடிவு பண்ணி விட்டாள் என்பதையும் புரிந்து கொண்டாள்.

கல்யாணி அம்மாளிடம் இதுபற்றி பேச நினைத்து ஒருநாள் பேசவும் செய்தாள். ''நன்றாகச் சொன்னாய் காஞ்சனை. நானும் இதை எத்தனையோ முறை சொல்லி பயம் காட்டிப் பார்த்து விட்டேன். எதிர்காலம் என ஒன்று இருக்கிறது. நீ எப்படி வாழ்க்கை முழுவதும் இப்படி ஒற்றை ஆளாய் சமாளிப்பாய்? என்றெல்லாம் கேட்டுப் பார்த்து விட்டேன். ஆனால், ஆனால் அவள் பிடிவாதம் பிடிக்கிறாள். இப்படியே இருந்து விடுகிறேன் என்று சாதிக்கிறாள்!''

கண்ணீர் விடாத குறையாய் கல்யாணி அம்மாள் சொன்னபோது காஞ்சனைக்கே சங்கடமாய் இருந்தது.

அந்த விஷயத்தை வெகு அக்கறையுடன் அன்று கணவன் உதயசந்திரனிடம் பேசப் போக கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், ''இதோபார், நீ எதற்காக இப்போது தேவையில்லாமல் உதயாவின் பிரச்சினையை எடுக்கிறாய்? அவள் ஒருத்தி கல்யாணம் கட்டிக் கொண்டாலும் சரி, கொள்ளாவிட்டாலும் சரி, யாருடைய குடியும் மூழ்கிப் போவதில்லை. அதனால் வீண் கவலையை விடு!'' என்றான் அசால்டாக.

காஞ்சனை அந்த பதிலில் திடுக்கிடவே செய்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்? உதயா உங்களது தங்கை.''

''அதற்காக என்ன செய்யச் சொல்கிறாய்?''



''அவளது வாழ்க்கை... அவளுக்கென்ற ஒரு வாழ்க்கை அமைய வேண்டும் அல்லவா? அதற்காக நாம் முயற்சி எடுக்க வேண்டாமா?''

''முயற்சி எடுத்து என்ன ஆகப் போகிறது? எல்லாம் அவளது விதி! அவளது விதியை அவளே தேடிக் கொண்டாள்... அவளே எழுதிக் கொள்கிறாள்..''

''அதற்காக அப்படியே விட்டுவிட முடியுமா? நாம் ஏதாவது...'' என மறுபடியும் காஞ்சனை ஆரம்பித்து முடிப்பதற்குள் கோபமாய் கையை உயர்த்தினான் உதயசந்திரன்.

''முதலில் வாயை மூடு!'' என்று அதிகாரமாய்ச் சொன்னவன், ''நேற்று முளைத்து மருமகளாய் வந்தவள்... அதற்குள் என் குடும்பத்து மேல் இவ்வளவு உறுத்து வந்து விட்டதோ உனக்கு? என் தங்கையைப் பற்றி கவலைப்பட எனக்குத் தெரியும். நான் இருக்கிறேன். நீ உன் வேலையை பார்த்துக் கொண்டு போ!'' என்றான் எகத்தாளமாய்.

இம்முறை காஞ்சனை அதிர்ந்தே போய்விட்டாள். என்ன இது? தங்கையைப் பற்றி இரண்டு வார்த்தை அக்கறையாய்ச் சொன்னால்... இந்த வரத்து வருகிறான். என்னாயிற்று இவனுக்கு?

அதே திகைப்பில், ''இல்லை... நீங்கள் இவ்வளவு கோபப்படுவீர்கள் என்றால் நான் நான்.. சொல்லியிருக்கவே மாட்டேன்..'' என்றாள் தடுமாறிய குரலில்.

''புரிந்து கொள்! இதுபோன்று 'அட்வைஸ்' ஏதாவது எனக்கு பண்ண நினைத்தால்.. அவ்வளவுதான் தொலைத்து விடுவேன்!''

என ஏதோ தண்ணியடித்தவன் போல் கண்களை உருட்டி மிரட்டி சொல்ல அப்படியே ஆடிப் போய்விட்டாள் காஞ்சனை.

★ ★ ★

**கா**ஞ்சனை பயந்த மாதிரி உதயா ஆகிவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். கிட்டதட்ட அவளை ஒரு எதிரி போலவே நினைக்க ஆரம்பித்து விட்டாள்.

முதலில் காஞ்சனையின் அழகு விஷயம் அவளுக்கு உறுத்தலாக இருக்கவே, பேஸ்க்ரீம், லோஷன், செண்ட் வகையறாக்கள், பர்ப்யூம்கள் என ஒரு வண்டி வாங்கி குவித்து விட்டாள்.

கண்ணாடி முன் அமர்ந்து ஒரு மணி நேர வெள்ளை அடிக்காத குறையாய் மேக்கப்புகளை செய்ய ஆரம்பித்தாள். வேலைக்கு கிளம்பும் போது எல்லோரையும் முக்கியமாய் காஞ்சனையிடம் தனது ஒப்பனைகளை தெரியும்படி காட்டி விட்டு கிளம்பினாள்.

மாலதிதான், ''மிஸ் குயின், மிஸ் யூனிவர்ஸ்... வீட்டில் இருந்து கிளம்பியாயிற்று... பராக்.. பராக்..! வழிவிடுங்கள், பராக்.. பராக்!'' எனக் கூறி கிண்டலடித்துக் கொண்டிருந்தாள்.

மேலும் ஒவ்வொரு நாளும் பீரோவைக் குடைந்து விலையுயர்ந்த சேலைகளை 'பளிச்' ரகங்களை தேடிப் பிடித்து உடுத்தினாள். மாலதி அதைக் கண்டு அதிசயித்து, ''எவ்வளவு அழகான கலர்கள் சூப்பரான புடவைகள்.. எனக்கு ஒருமுறை உடுத்த குடேன்,'' என்று கேட்டதற்கு பிடிவாதமாய் மறுத்தாள்.



அதனால் வெகுண்ட மாலதி, ''என்னதான்... செய்தாலும் காக்கை, குருவி ஆக முடியாது.. குருவி... கிளி ஆக முடியாது.. அண்ணியின் சிவப்பு நிறம் முன் உன் கறுப்பு நிறம் அம்பேல்தான்!'' என பழமொழியாய் நக்கலடித்து வேறு வெறுப்பேற்றினாள்.

அதனால் உதயாவின் கோபம் காஞ்சனையின் மீது பன்மடங்காகியது. அவள் எது கேட்கப் போனாலும் என்ன பேசப் போனாலும் எரிந்து எரிந்து விழுந்தாள். அவளை எதுவோ பார்க்கக் கூடாத எதிரியைப் பார்த்து விட்டதைப் போல் முறைத்தாள்.

உதயா அத்தோடு தன் எரிச்சலை நிறுத்தவில்லை. தினம் தாய் கல்யாணி அம்மாளிடம் போய் காஞ்சனை பற்றி குறை கூறிக் கொண்டிருந்தாள்.

அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பது போல் கல்யாணி அம்மாள் அதை நம்பினாளோ என்னவோ என்றுமில்லாததாய் பேச்சில் காஞ்சனையிடம் கடுமை காட்ட ஆரம்பித்தாள்.

அன்று புது ஷிபான் சேலை ஒன்று ஆசையாய் உடுத்தி அவள் அழகு பார்க்க ''எதற்கு நல்ல புடவைகளை உடுத்தி பாழ்படுத்துகிறாய். சாதாரண புடவைகளை உடுத்து!'' என்றாள்.

இன்னொரு நாள், ''எங்கும் வெளியில் செல்லவா போகிறாய்? வீட்டிற்குள்ளேதான் அடைந்து கிடக்க வேண்டும்... அதற்கு ஏன் இப்படி கண்ணாடி முன் நின்று சிங்காரித்தனமாய் அலங்கரிக்கிறாய்!'' என்றாள்.

காஞ்சனை எதற்கும் பதில் பேசவே இல்லை. பவ்யமாய் தலையை குனிய வைத்தபடி கேட்டுக் கொண்டு பேசா மடந்தையாய் அகன்றாள். அவளுக்கு நன்கு தெரியும். அவள் போடுவது பவுடர் சிறிய தலைப்பின்னல் என்ற ஒரு சாதாரண மேக்கப்தான். கண்ணாடி முன் மணிக் கணக்காய் நின்று சீவிச் சிங்காரிப்பது உதயாதான்!

இது கல்யாணி அம்மாளுக்கு நன்கு தெரிந்தும் உதயாவின் திருப்திக்காக இப்படி தனக்கு ஒரு வசவு. அப்படித்தானே?

காஞ்சனை பொறுத்துக் கொண்டாள். சில சமயங்களில் கல்யாணி அம்மாள் வேறு மாதிரியாகவும் கொள்கைகளை கடைப்பிடிக்க ஆரம்பித்தாள்.

அதாவது சோபாவில் கல்யாணி அம்மாள் உட்கார்ந் திருக்கும்போது பக்கத்தில் காஞ்சனை உட்காரப் போனால், ''தப்பாக நினைத்துக் கொள்ளாதே காஞ்சனை. மாமியார் பக்கத்தில் சரிக்கு சமமாய் மருமகள் உட்கார்ந்திருந்தால், பார்க்கிறவர்கள் யாரும் தப்பாக நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்!'' என்றாள் புதுப் பழக்கமாய்.

''அட இது வேறா?' என காஞ்சனை அப்படி சரிக்கு சரி அமர்வதை தவிர்த்து நடமாடினாள். ஒரு விஷயம் அவளுக்கு நன்கு புரிந்தது.

கல்யாணி அம்மாளுக்கு இயல்பில் நல்ல குணம்தான். எல்லாம் மகள் உதயாவின் காஞ்சனையை பிடிக்காத சுபாவம் அவளை மாற்றி இப்படியெல்லாம் செய்ய வைக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டாள்.



உதயாவை மாற்றி அவள் அன்பை பெறாவிட்டால் இது பெரும் ஆபத்தில் கொண்டு போய்விட்டு விடும் என பயந்தாள். துடுக்குப் பெண்ணான மாலதி தான் எல்லா வற்றிலும் இடையே புகுந்து கிண்டலடித்து உதயாவின் காஞ்சனை கோபத்தை கிளறிக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

**அ**ன்றும் இப்படித்தான் அத்திப் பூத்தாற்போல் எல்லோரும் கிளம்பி சினிமா செல்வது என முடிவாயிற்று.

வழக்கம் போல் உதயசந்திரன் ''நான் வரவில்லை. நீங்கள் சென்று வாருங்கள்'' என கழன்று கொண்டான். மாலதி, உதயா, கல்யாணி அம்மாள், காஞ்சனை என எல்லோரும் கிளம்பினர்.

ஒரு ஆட்டோ பிடித்து அனைவரும் தியேட்டரில் போய் இறங்கினர். கிளம்பினது முதல் மாலதி அக்கா உதயாவைப் பார்த்து ஒரு வினோத சிரிப்புதான் சிரித்துக் கொண்டிருந் தாள். காஞ்சனைக்குத்தான் அவள் எதற்காக அப்படிச் சிரிக்கிறாள் என புரியவில்லை.

குழம்பியவளாய் ஜாடையாகவே மாலதியிடம் கேட்டபோது அவள் ஒரு குறும்புச் சிரிப்பை அடக்கிக் கொண்டு ''ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!'' என்றாள்.

அவள் சொல்லிய விதத்திலேயே காஞ்சனைக்கு என்னவோ இருக்கிறது என புரிந்து விட்டது. அவளும் உதயாவை உற்று உற்றுப் பார்த்தாள். ஒன்றும் வித்தியாச மாக அவளுக்குப் படவில்லை.

பின் என்னவாக இருக்கும்? என குழம்பியவள் தற்செயலாய் உதயாவின் கண்களைப் பார்த்ததும் திகைத்தாள். உடனே புரிந்து கொண்டாள்.

வேறொன்றுமில்லை. உதயா தன் இரண்டு கண் களிலும் மைதீட்டியிருந்தாள். ஆனால் அவள் அளவுக்கு மீறி மைகளை அப்புவது போல் இமையோரங்களில் வைத்திருந்தது கண்களுக்கு மைவிழிகளாய் மாறி அழகு ஏற்படுத்துவதற்கு பதில் பார்ப்பதற்கு பயத்தையே ஏற்படுத்தியது.

அந்த கண்களை வைத்துக் கொண்டு உதயா வேறு அடிக்கடி திரும்பி கண்களை படபடத்து பார்ப்பவர்களுக்கு போஸ் வேறு கொடுத்துக் கொண்டிருக்க... பார்த்த காஞ்சனைக்கே சிரிப்பை அடக்க முடியவில்லை.

கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டுதான் அவள் பக்கம் போனாள். "உதயா, உன் கண்களில் மை.. அதீதமாக இருக்கிறது. கர்ச்சீப்பால் லேசாக துடைத்து விடட்டுமா?" என்றாள் ஒருவித பரிவுடன்.

அவ்வளவுதான்! ஏதோ எதிரியைக் கண்டது போல் அவள் கைகளைத் தட்டி "ம்ம்.. தூரப்போ!" என விரட்டியவள், அத்தோடு விடாது, "ஏன்.. நீ மட்டும்தான் கண்களுக்கு மையிடுவாயோ? நான் மை தீட்டக் கூடாதோ? இல்லை.. எனக்குத்தான் என் கண்களுக்கு எப்படி மையிட வேண்டும் என தெரியாதா? பெரிதாய் வந்து விட்டாள்.. போ.. போ..!" என பொரிந்து தள்ள திகைத்துத்தான் போனாள் காஞ்சனை.



"ஐயோ! உதயா நான் உண்மையாக நிஜமான அக்கறை யில்தான் சொல்கிறேன். உன் கண்களில் மை தீட்டி யிருப்பது நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் அது அதீதமாக இருப்பது கண்களையே விகாரமாக காட்டு கிறது.." என்றும் பதட்டத்தில் அப்படியே உண்மையைச் சொல்லி விட்டாள் காஞ்சனை.

அது போதாதா? உதயாவிற்கு வந்ததே கோபம்!

"என்ன விகாரமா? அதுவும் என் கண்களா? உனக்கு என்ன துணிச்சல்? என்னிடமே சொல்ல வந்து விட்டாய்?" என சண்டையிடுவது போல் வரிந்து கட்ட.. குறுக்கே புகுந்தாள் மாலதி.

"அமைதி! அமைதி..!" என பெரிய சமாதானம் பண்ணுவது போல் கைகளைத் தூக்கிக் கொண்டு அவர்கள் இருவருக்கும் இடையில் நுழைந்தாள் அவள்.

பின் அப்படியே திரும்பி உதயாவை உற்றுப் பார்த்து விட்டு காஞ்சனை பக்கம் திரும்பினாள். "என்ன மன்னி நீங்கள்? உங்களுக்கு ரசனையே இல்லையே.. நம் உதயாக்கா எவ்வளவு அழகாக கண்களுக்கு மை தீட்டி ஜொலிக்கிறார்கள். அவர்கள் அழகை, அந்த கம்பீரத்தை பாராட்டி, முண்டக் கண்ணு, முட்டைக் கண்ணு, கோழி உருட்டி போன்று ஏதாவது நல்ல பட்டம் கொடுப்பதை விட்டு விட்டு அவளுக்கு உபதேசம் செய்து கொண்டிருக் கிறீர்களே? உங்களுக்கு ஏதாவது இருக்கிறதா? சொல்லுங்கள்!" என காஞ்சனையை விரட்டுவது போல் அவ்வளவையும் போட்டு உடைக்க.. அப்படியே தகதகத்து எரிமலையாகிக் கொண்டிருந்தாள் உதயா.

அந்த கோபத்தில் நிற்பது பொது இடம் என்று கூட பாராமல் டக்கென காஞ்சனை பக்கம் வந்து நின்றாள். பின் உதயாவைப் பார்த்து முறைத்தவாறு, ''இப்போது சொல்! என் கண்களிலும், அவள் கண்களிலும் மை இருக்கிறது. யாருடைய கண் நிஜமாகவே உண்மையாக அழகாக இருக்கிறது?'' என்றாள் அதே கோபத்துடன்.

மாலதியோ அதை மேலும் ரசித்தவாறு, ''சபாஷ்! சரியான போட்டி!'' என கைகளைத் தட்டியவள், ''அதுவும் சரிதான்! நானே நடுவராக இருந்து தீர்ப்பு சொல்லி விடுகிறேன். ஓகே தானா?'' என இருவரையும் பார்த்து தலையை வெட்டி வெட்டி கேட்க காஞ்சனை பயமாகவே நழுவினாள்.

''வேண்டாம்.. இந்த போட்டியெல்லாம் வேண்டாம்.. உதயாதான் அழகு'' என நழுவப் போனாள்.

ஆனால் அவள் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் உதயா. ''எங்கே ஓடுகிறாய்? அப்படியே நில்லு! இன்று இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம். யார்தான் அப்படி அழகு என்பது புரிந்து விடும்!'' என்றாள் விரட்டும் தொனியில்.

காஞ்சனை தவிப்பாய் நிற்க.. மாலதியோ இருவரையும் கணித்து மார்க் போடுவது போல் உற்று உற்றுப் பார்த்தாள். புருவங்களை உயர்த்தி எதையோ கண்டுபிடித்து விட்டது போல் பிரகாசமான முகத்துடன் நிமிர்ந்தாள்.

''போட்டி முடிந்து விட்டது. நடுவர் தீர்ப்பு எழுதியாயிற்று. சொல்லி விடலாமா?'' என்றாள் பெரும் ரகசியத்தை உடைப்பது போல்.

''ம்ம்... சீக்கிரமாகச் சொல்லு.''



பரபரத்தாள் உதயா.

''உதயாதான்... வெற்றி பெற்றவள். உதயாவிற்குத்தான் முதலிடம்!'' என உரத்த குரலில் சொல்லி நிறுத்தியவள் அடுத்தாற் போல், குரலைத் தாழ்த்தி, ''ஏனெனில் உதயாவிற்குத் தான் பெரிய சைஸில் முட்டைக் கண்கள்... பிறர் கேலி செய்வது போல் முண்டக் கண் விழிகள்... ஆகையால் வெற்றிப் பரிசு, வெற்றி மாலை உதயாவிற்கே!'' என வஞ்சிப் புகழ்ச்சியுடன் முடித்தாள்.

பொங்கிய சிரிப்பை அடக்க முடியாமல் கடகடவென சிரித்தாள்.

உதயா அப்போதுதான் மாலதி வசமாய் தன் கண்களை மட்டம் தட்டி வெகுவாய் இகழ்வதை உணர்ந்தாள்.

அதனாலே மிகவும் எரிச்சலாகி, ''நான் ஒன்றும் சினிமாவுக்கு வரவில்லை. நீங்களே போய்க் கொள்ளுங்கள்!'' என விருட்டென கிளம்பி விட்டாள்.

நடப்பதையெல்லாம் பார்த்து திகைத்துதான் போனாள் கல்யாணி அம்மாள்.



## 8

ஒவ்வொரு முறையும் காஞ்சனை உதயசந்திரன் விஷயத்தில் அன்பாய் நடந்து பாசத்தை கொட்டி நடந்து கொண்டு அவனிடம் எதுவும் மாற்றம் தெரிகிறதா என ஆராய்வாள்.

தனது நடவடிக்கையால் அவனுள் எதுவும் சலனம் ஏற்படுகிறதோ என கவனித்தாள்.

உதயசந்திரனிடம் எவ்வித மாற்றமும் இல்லை. அவன் பாட்டுக்கு இடித்த புளி போல் நடமாடிக் கொண்டிருந்தான்.

அவளுக்கு அதனாலே ஒரு விஷயத்தில் பெரும் சந்தேகமும் வந்தது.

என்னதான் இருந்தாலும் ஒரு பெண் எப்போதும் பல்லைக் காட்டிக் கொண்டு சுற்றி வருவதை அவன் மனம் உணராமலா போய்விடும்? அந்த அன்பு அவனுக்கு புரியாமலா இருந்து விடும்!

பின் எப்படி இவன் இருக்கிறான்? எதையுமே உணர்ந்து கொள்ளாதவன் போல் எப்படி இவனால் இருக்க முடிகிறது? என குழம்பத்தான் செய்தாள்.

ஆனால் கூடவே இன்னொரு விஷயத்தையும் கண்டுபிடித்தாள். அவள் அப்படி அன்பை பாசத்தைக் காட்டி நடந்து கொள்கிறபோது அவனால் அவளிடம் கடுமையாக நடந்து கொள்ள முடியவில்லை. முன்பு போல் டக்கென எரிந்து விழ முடியவில்லை.

எரிச்சலை அடக்கிக் கொள்பவன் போல் எதுவும் சொல்லாது முகத்தை திருப்பிக் கொள்வதை கவனித்தாள்.

அதுபோன்ற சமயங்களில் வேண்டுமென்றே அவனது மனநிலையை முழுவதும் தெரிந்து கொள்ளும் விதமாக, "உங்களுக்கு என் மீது கோபமோ.. எரிச்சலோ.. வந்தால் தாராளமாக என் மீது கோபப்படுங்கள். என்னிடம் எரிச்சலைக் காட்டுங்கள். அந்த உரிமை உங்களுக்கு உண்டு" என்றாள்.

அவளின் அந்தப் பேச்சு அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியதோ என்னவோ அவனும் தலையாட்டியபடி,



"ஆமாம்... ஆமாம்.. உரிமை அதற்கு மட்டுமல்ல. தேவைப்பட்டால் உன்னை அடிப்பதற்கு கூட இந்தக் கைகளுக்கு உரிமை இருக்கிறது!" என தன் கைகளைத் தூக்கி அவளுக்குக் காட்டினான்.

ம்ஹூம்! இவனது மனநிலையை தெரிந்து கொள்ள முயல்வது பாறாங் கல்லில் முட்டுவதற்குச் சமம்... என்ற முணுமுணுப்புடன் ஓடுவாள் அவள்.

சில சமயங்களில் அவனே அவளை நிறுத்தி கேள்விகளைக் கேட்டிருக்கிறான்.

"என்னாயிற்று உனக்கு?" என்பான் கடுமையாய்.

"ஒன்றும்.. ஒன்றும் இல்லை!" என்றபடி அவள் கைகளை விரித்து தலையை ஆட்டினாள்.

"பின் ஏன் இப்படி லூசுத்தனமாய் அலைகிறாய்?" என்றான் வெடுக்கென.

"லூசுத்தனமாகவா?"

"ம்ம்... எப்போதும் பல்லைக் காட்டி இளித்துக் கொண்டு நடமாடுகிறாய். நான் வீட்டினுள் நுழைந்தாலே, என்னை மாடு சுற்றுவது போல் சுற்றிச் சுற்றி வருகிறாய். என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ?"

அவள் இம்முறை வெட்கத்தில் நெளிவது போல் நெளிந்தாள்.

"ஒன்றுமில்லை.. அன்பு!" என்றாள்.

"அன்பா?"

"ஆமாம். நான் உங்கள் மீது வைத்திருக்கும் அபரீதமான அன்பை பாசத்தை வெளிப்படுத்த இப்படியெல்லாம் முயல்கிறேன்... முயற்சிக்கிறேன்.."

"ஓஹோ!" என்றவன் அதே கோபத்துடன் "இதை யார் சொல்லிக் கொடுத்தார்கள்?" என்றான்.

"ஒருத்தரும் சொல்லவில்லை! எனக்கு நானே உங்கள் மீது உள்ள ஆசையினால், பிரியத்தினால் முயற்சி செய்கிறேன்."

"உன் ஆசையை குப்பையில் கொண்டு போய் போடு!"

எரிச்சல் பொங்கக் கத்தினான் அவன்.

பின் அதே சீற்றத்துடன் "இனி இப்படி லூசுத்தனமாய் என்னைச் சுற்றி வந்தால் அடிதான் உனக்கு விழும். புரிகிறதா?" என்றபடி கைகளைத் தூக்கி காண்பித்தான். மிரட்டினான். ஒடுங்கிப் போனாள் அவள்.

அவள் தன் அன்பை வெளிப்படுத்துவதற்கு அதை அவனுக்கு ஆசையாய் புரிய வைப்பதற்கு, அப்படி அதற்காக அவள் எடுக்கும் முயற்சிகளுக்கு இப்படி பொட்டிலடித்தாற் போல் தடை போடுவான் என அவள் கொஞ்சமும் எண்ணவில்லை.

ஆனால் அதற்காக, அப்படி உதயசந்திரன் மிரட்டியதற்காக அவள் பயப்படவும் இல்லை. தன்னை மாற்றிக் கொள்ளவும் இல்லை.

அதேபோல்தான் அவனைச் சுற்றி வந்தாள். அன்பு பொழிய நடமாடினாள். இன்முகமாய் அவன் சொன்ன 'இளிச்சவாய்த்தனத்துடனே' எப்போதும் இருந்தாள்.

உதயசந்திரன் அவள் திருந்தாததைக் கவனித்து இரண்டு மூன்று முறை அவள் முன்னாலேயே தலையிலடித்துக் கொண்டு "நீயெல்லாம் திருந்தாத கேஸ்!" என்றபடி அகன்றான்.



மாலதி அதைக் கவனித்தவள் காஞ்சனையிடம் கேட்காமலேயே "அது என்ன விஷயம்?" என்று புரிந்து கொண்டாள். "ஐயோ மன்னி! நாய் வாலை நிமிர்த்த முடியுமா? அண்ணனை மாற்ற முடியுமா? இதுவெல்லாம் தேறாத கேஸ்! தலையிலடித்துக் கொள்ள வேண்டியது அண்ணன் இல்லை நீங்கள்தான்!" என நிஜமும் கேலியும் பொங்கச் சொன்னாள்.

காஞ்சனைக்கு முதல் முறையாய் உண்மையிலேயே உதயசந்திரனை இனி திருத்த முடியாதோ என்ற பயமும் கிலியாய் எட்டிப் பார்த்தது.



## 9

அன்று பலவாறாய் சிந்தித்து ஒரு முடிவெடுத்தாள் காஞ்சனை. மூன்று மாதமாயிற்று. கொஞ்ச நாட்கள் பிறந்தகத்தில் போய் இருந்து வருவோம் என்று.

ஒவ்வொரு வாரமும் போனில் தாய் தந்தையுடன் பேசும்போது "என்ன காஞ்சனை.. எப்படி இருக்கிறாய்? உன்னை ரொம்பவும் தேடுகிறதே?" என அவர்கள் விளிக்கும்போது அவளுக்கும் அவர்களைப் பார்க்கும் ஆசை வந்து விட்டது.

முதலில் இந்த விஷயத்தை உதயசந்திரனிடம் பேசி சம்மதம் வாங்குவது என்றுதான் நினைத்தாள். பின் அந்த 'காட்டானிடம்' கேட்டு அவன் பிடிவாதமாய் மறுத்து விட்டால் என்று பயந்து கல்யாணி அம்மாளிடமே விஷயத்தை கொண்டு போனாள்.

கல்யாணி அம்மாள் கொஞ்சமும் புன்னகை மாறாமல், "அதற்கென்ன? போய் ஒரு வாரம் இருந்து விட்டு வா!" என்றாள் முகம் மலர்ச்சியோடு.

அதையே உதயசந்திரனிடம் சொல்லும்போது அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பே, "இப்போது எதற்கு தேவையில்லாமல்? பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் விட்டேற்றியாய்.

"இல்லை.. அம்மாவிடம் கேட்டு விட்டேன். போய் வா என்று சொல்லி விட்டார்கள். எனக்கும் ரொம்பவும் தேடுகிறது" என்றாள் குரல் கம்ம.

"அப்படியா? அம்மா சரி என்று சொல்லி விட்டார்களா?" என நெற்றி சுருங்க யோசித்தவன், அதே தலை வெட்டலோடு, "ம்ம்.. சரி.. போய் வா!" என்றான்.

"நீங்கள்தான் அழைத்துச் சென்று விட வேண்டும்."

அவன் மறுபடியும் முகம் சுருக்கினான்.

"உனக்காக அலுவலகத்தில் லீவு எல்லாம் போட முடியாது. ஞாயிற்றுக்கிழமை பார்ப்போம்" என்றான்.

காஞ்சனை மனதில் வேறொரு திட்டமும் அதற்குள் தோன்றியிருந்தது.

என்ன மனிதன் இவன்? அவள் உணர்வுகள் எதையும் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கிறானே?

அதை இவனுக்கு எப்படி புரிய வைப்பது உணர வைப்பது எப்படி?

யோசித்தவள் பேசாமல் பிறந்தகத்தில் ஒருமாதம் இருந்து விடுவோம். இவனை விட்டு விலகி இருப்போம். நம்மைத்



தேடுகிறானா? தனது அப்படிப்பட்ட பிரிவு அவனை உணர வைக்குமா? என்றெல்லாம் நினைத்து முடிவு செய்தாள் அவள்.

விஷயத்தை இங்கேயே அவனிடம் சொல்லி விடலாமா? என நினைத்தவள், அவன் அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டான் என பயந்து சொல்லாமல் தவிர்த்தாள்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது.

உடைமைகளை பாக் செய்து தயாராகி விட்டாள். உதயாவிடம் சொல்லியபோது வெறும் தலையாட்டலுடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

மாலதிக்குத்தான் ஒரே கவலையாய் போயிற்று. "என்ன ஒரு வாரமா?" என மலைத்தாள். "நீங்கள் இல்லாமல் எனக்கு எப்படி அண்ணி நேரம் போகும்? யாருடன் சீண்டி விளையாடுவேன்?" என அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு சொன்னபோது அவளுக்கும் மாலதியை பிரிந்து இருப்பது கஷ்டமாகவே தோன்றியது.

"பேசாமல் நானும் உங்களுடன் வந்து விடுகிறேனே? திருச்சிப் பக்கம் ஏதோ ஒரு கிராமம்... சின்ன ஊர்தானே? சுற்றிப் பார்க்கிறேனே?" என்றபோது தன் திட்டம் ஞாபகம் வர அவசரமாய் மறுத்து, "அடுத்த முறை உன்னைக் கண்டிப்பாக அழைத்துச் செல்கிறேன்" என்றாள்.

தலையை சோகமாய் அவளைப் பிரிய மனமில்லாத வளாய்த்தான் விடை கொடுத்தாள் மாலதி.

நாத்தனாரான இவளுக்கு இருக்கும் அன்பு பாசம் கூட கணவனான உதயசந்திரனிடம் இல்லையே... என்ற ஏக்கம்தான் அவளுள் பரவியது.

ஒரு வழியாய் பஸ்சில் உதயசந்திரனுடன் கிளம்பினாள்.

பஸ் பிரயாணத்தின்போதும் அவன் பாட்டுக்கு வெளியே பார்த்தவாறு சிகரெட்டுகளை ஊதுவதில் கவனம் செலுத்தி னானே தவிர அவளிடம் இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டும் என துளியும் அவன் நினைக்கவில்லை.

அவள்தான் பொறுக்காமல் இடையிடையே கொண்டு வந்திருந்த பழங்களை பிஸ்கட்டுகளை கொடுத்து பேசினாள். அதற்கும் வெறும் தலையாட்டல் பதிலோடு நிறுத்திக் கொண்டான். அதையும் மீறி அவள் கேட்டால், "என் சுபாவமே இப்படித்தான். வீணாய் தொணதொணக் காதே" என்று சொல்லி விடுவான்.

ஒரு வழியாய் ஆறு மணி நேர அலுப்பான பயணத்திற் குப் பின் ஊர் வந்தது. பிறந்தகத்தின் பிறந்த மண்ணில் கால் வைத்ததும் அவளுக்கு தனி குஷிதான்!

கவலைகளை மறந்து குதி போடாத குறையாய்த்தான் பெட்டியுடன் இறங்கினாள். ஆட்டோ பிடித்து ஊரின் புறநகர்ப் பகுதியான லயன்ஸ் காலனியை அடைந்தனர்.

சிறுசிறு பிளாட் வீடுகள் உள்ள அந்தக் காலனியில் முதல் தெருவிலே அவளது வீடு. உற்சாகமாய் இறங்கி வீட்டு பஸ்ஸரில் கை வைத்து அழுத்தினாள்.

திறந்தது அம்மா. கனகம்தான்!

பின்னால் கையில் தின பேப்பருடன் அப்பா குருநாதர் ஓய்வு பெற்ற தமிழாசிரியர்.

இருவரும் அவர்களைப் பார்த்து சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போயினர்.



"வாங்க! வாங்க மாப்பிள்ளை!! வாங்க."

உதயசந்திரனை தடபுடலாய் வரவேற்று உள்ளே அழைத்துப் போக காஞ்சனை தன் கணவனின் முகத்தை ஓரக்கண்ணால் கவனித்துப் பார்த்தாள்.

ப்ச்! அப்போது கூட அவன் சிரிக்கவில்லை. அவனால் சிரிக்க முடியவில்லை. முகத்தை மட்டும் ஆட்டி தலையசைப்புடன் நடந்து கொண்டிருந்தான்.

ம்ஹூம்! இவனைத் திருத்த முடியாது! என்ற அலுப்பை வெளிக்காட்டாது உள்ளே போனாள்.

தடபுடல் உபசரிப்புகள். மாப்பிள்ளை தங்குவதற்கென தனி பெட்ரூமான அறையை பெட்ஷீட்டெல்லாம் விரித்து அம்மா உடனடியாய் தயார் செய்ய.. அதில் போய் ஹாய்யாய் உட்கார்ந்து கொண்டான் அவன் உதயசந்திரன்.

அம்மாவும் அவளும் சமையற்கட்டில் உட்கார்ந்து மணிக் கணக்காய் பேசினார்கள். அம்மாவிடமும் அப்பாவிடமும் தான் ரொம்ப மகிழ்ச்சியாய் சந்தோஷமாய் இருப்பது போல் சிரமப்பட்டு காட்டினாள் காஞ்சனை.

தன் பிரச்சினைகளை தானே சரி செய்ய வேண்டும். வீணாய் அவர்களிடம் சொல்லி அவர்களைக் கஷ்டப் படுத்தக் கூடாது என்பது அவளது எண்ணம்.

ஒருவாறு மதிய உணவு விருந்தாய் உதயசந்திரனுக்கு பரிமாறப்பட்டது.

எல்லாவற்றையும் ஒரு பிடி பிடித்து விட்டு எழுந்தான்.

அவன் தனியறையில் ஓய்வெடுத்தபோது தன் திட்டப்படி அந்த விஷயத்தை மெல்ல மெல்ல சொன்னாள் காஞ்சனை.

தனது திட்டத்தை திறமையாய் செயல்படுத்த விரும்பிய வளாய் தனது பேச்சிலும் ஒருவித உறுதியைக் கூட்டினாள்.

அவள் சொன்ன வார்த்தையைக் கேட்டு சட்டென உடல் விறைப்பாக நின்றான் அவன்.

"என்ன சொன்னாய் ஒரு மாதமா? ஒரு மாதம் உன் வீட்டில் இருக்கப் போகிறாயா?" என்றான் கோபமாய்.

"ம்ம்.. ஒரு மாதம்... அதற்கு மேல்.. கூட ஆகலாம்.." வேண்டுமென்றே நிதானமாய் ஆனால் ஒருவித அலட்சியத்துடன் பதில் சொன்னாள்.

"இது என்ன புதுக் கதை?"

"புதுக் கதையில்லை.. நன்கு யோசித்துத்தான் சொல்கிறேன்."

"இதை அங்கு வீட்டில் கிளம்பும்போதே என்னிடம் சொல்லியிருக்கலாமே?"

"சொல்லியிருக்கலாம். ஆனால்.." அவள் இழுத்தவாறு அவன் முகத்தை தயக்கமாய்ப் பார்த்தாள்.

"சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டேன்... என்று சொல்லாமல் மறைத்து விட்டாய்.. அப்படித்தானே?"

அவன் ஏதோ பெரிய தவறைக் கண்டு பிடித்து விட்டது போல் சொல்ல அவளுக்கும் கோபம் புரண்டது.

"அப்படி வைத்துக் கொண்டால் அது உங்கள் இஷ்டம்.."

"இஷ்டமில்லை.. அதான் உண்மை.."

"அப்படியே வைத்துக் கொள்ளுங்கள்."



அவன் ஒரு நிமிடம் அவளை உற்றுப் பார்த்து விட்டு கடகடவென சிரித்தான்.

"இந்த பூச்சாண்டிக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்.."

"பின் என்ன செய்வீர்களாம்?" கேட்ட அவளுக்கும் கண்கள் சிவந்தது.

"தலை முடியை பிடித்து தரதரவென இழுத்துச் சென்று விடுவேன்!"

அவனது பேச்சு அவளுள் கொதிப்பை இன்னும் அதிகமாக்கியது. பட்டென திரும்பி அவனை முறைத்தாள்.

"இது என் வீடு. இங்கு என்னை மீறி எதுவும் நடந்துவிட முடியாது."

அவன் அதை எதிர்பார்த்தவன் போல் சொடுக்கிட்டான்.

"அந்தத் திமிரில்தானே இவ்வளவையும் பேசுகிறாய்? ஆனால்.. எனக்கு இடம் முக்கியமில்லை. பெரிதாய் ரகளை பண்ணி விடுவேன்.. ரகளை! தெரிந்து கொள்!"

முதல் முறையாய் பய உணர்வுடன் அவள் அதிர்ந்தாள்.

"ரகளையா?"

"ம்.. எப்படி என்று கேட்கிறாயா? சொல்கிறேன். முதலில் உன் தந்தை அதான் அந்த ரிடையர்டு தமிழாசிரியர் அவருடன் சண்டை.. அப்படியே பயந்து வெடவெடக்கும் உன் தாய்..பின் அப்படியே வெளிவந்து ஊரைக் கூட்டுவேன். இது சின்னக் காலனி. நான் கத்தினால் எப்படியும் ஒரு பத்து பதினைந்து வீடுகளில் இருந்து

ஆட்கள் எட்டிப் பார்க்கும். அப்புறம் இரண்டு தெரு தாண்டி டர்னிங்கில் போலீஸ் ஸ்டேஷன் கூட ஒன்று இருப்பதைப் பார்த்தேன். அங்கு போய் ஒரு சின்ன கம்ப்ளைண்ட்.. என்னுடைய பிரியமான மனைவியை எனது அருமை மாமனார் உடன் அனுப்ப மறுக்கிறார்... என்று ஒரு புகார்.. போதுமா? செய்யட்டுமா? செய்து காட்டட்டுமா?''

அவன் விலாவாரியாய் விவரித்து நிறுத்தியபோது அவளுக்கு மூச்சே அடைத்தது. பாவி, இவன் நிஜமாகவே செய்தாலும் செய்வான்! என அதிர்ந்து கண்கள் தெறிக்க அவனைப் பார்த்தாள்.

அவளது பார்வை கூட அவனுக்கு எரிச்சலையே கொடுத்தது.

''சும்மாவாக அப்படி முறைத்து முறைத்துப் பார்க்காதே! நான் ஒன்றும் பொசுங்கிவிட மாட்டேன்.''

அவள் சட்டென தலையை தாழ்த்திக் குனிந்தாள்.

''என்ன சொல்கிறாய்?''

''ம்ம்.. அது..''

''சீக்கிரமாகப் பதிலைச் சொல்.''

''பத்து நாட்களில் ஊருக்கு வந்து விடுகிறேன்!'' சரணாகதி அடைந்தவளாய் வார்த்தைகளை உதறினாள்.

''அது...!'' என்றபடி மறுபடியும் கையை வேகமாய் சுண்டிக் காட்டினான்.

கூடவே குனிந்து அவள் முகம் அருகில் வந்தவன் அதே விறைப்புடன், ''என்னிடம் இந்த விளையாட்டை எல்லாம்



வைத்துக் கொண்டால் அப்புறம் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன், புரிந்ததா?'' சொல்லியபடி நிமிர்ந்தான். விடுவிடுவென சென்று விட்டான்.

திகைப்பு விலகாமல் அப்படியே ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாள் அவள்.

ஒரு இரண்டு மணி நேரம் கழித்து சர்வ சாதாரணமாய் திரும்பி வந்தாள் அவள்.

அவன் முகத்தில் எந்த உணர்வும் இல்லை. கொஞ்ச நேரத்திற்கு முன் இவனா இந்த வரத்து வந்து மிரட்டினான் என பார்க்கிறவர்கள் அதிசயிப்பார்கள். அப்படி ஒரு இயல்பு அவனுக்கு!

ம்ஹூம்! அதைத்தானே 'காட்டான்' என்று நிக் நேம் வைத்து சொல்கிறார்கள்!

அவள் பக்கத்தில் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டு ''ஹாய் பேபி? வாட் இஸ் ராங்? என்ன அப்படியே உட்கார்ந்து விட்டாய்?'' என்றான் விசாரிப்பவன் போல்.

''ஒன்றுமில்லை'' என்றாள் அவள் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு.

''இதோ பார், நீ அப்படி முரண்டு பிடித்து பேசினதினால் தான் நானும் அப்படிப் பேசினேன். அதாவது டிட் ஃபார் டாட்! நல்லவனுக்கு நல்லவன்... கெட்டவனுக்கு கெட்டவன்!''

''இது புளித்துப் போன சினிமா டயலாக்!'' என்றாள் அவள் எரிச்சலுடன்.

“ஆனால் எனக்கு மட்டுந்தான் பொருந்தும்!” என்றான் விடாமல்.

“ஏன் என்னுடைய பிறந்தகத்தில் நான் ஒரு மாதம் இருந்தால் குறைந்தா போய்விடும்?”

“ம்ம்.. குறையாதுதான்! ஆனால் எனக்கு காரணம் தெரிந்தாகணுமே?”

அவன் ஊடுருவுவது போல ஒரு பார்வை பார்த்து கேட்க அவளுக்கு மீண்டும் எரிச்சல்.

“உண்மையான காரணத்தைச் சொல்லட்டுமா?”

“சொல்லு..”

“நீங்கள் என்னை.. என் மனதை கொஞ்சமும் புரிந்து கொள்ளவில்லை! நான் எதிர்பார்ப்பது போல் நடந்து கொள்ளவில்லை!”

“ஓஹோ” என்றான் அவன் அலட்சியமாய்.

“என்ன ஓஹோ? நான் சொல்வது உண்மைதானே?”

“உண்மைதான்! புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.”

“இப்படிச் சொன்னால் எப்படி?”

“எப்படியா?” என்றபடி அவன் அவள் பக்கம் வந்து அவள் சற்றும் எதிர்பாராத வகையில் தோளோடு பிடித்து அழுத்தினான். அணைத்துப் பிடித்தான்.

“புரியவில்லை? இப்படி.. இப்படித்தான்! எல்லாமே என் இஷ்டப்படிதான்! உனக்கென்று உணர்வோ மனமோ இருக்கத் தேவையில்லை புரிந்ததா?”



சொல்லியவன் அதோடு நிறுத்தாமல் தனது உதடுகளை அவளது கன்னங்களில் ஒற்றியும் எடுத்தான். தீயாய் எரிந்தது அவளுக்கு.



10

**கா**ஞ்சனை பிறந்தகம் வந்து மூன்று நாட்களாயிற்று. உதயசந்திரன் அவளை விட்டு அன்றே கிளம்பிச் சென்று விட்டாலும் அவன் செய்த செயல்களின் வலி விடாது அவளை பயமுறுத்திக் கொண்டிருந்தது.

எதிலும் மனதை லயிக்க முடியாதவளாய் விட்டம் பார்த்து வெறித்தாள். மொட்டை மாடியில் போய் உட்கார்ந்தாள். தூங்குவது போல் போர்வைக்குள் சுருண்டாள். வழக்கம் போல் அவளால் வீட்டில் கலகலத்து இருக்க முடியவில்லை.

அதை உற்றுக் கவனித்த தந்தை குருநாதர் விஷயம் ஏதோ இருக்கிறதென்று புரிந்து கொண்டார். அவளாக சொல்லட்டும் என இரண்டு மூன்று நாள் பொறுத்தவர் காஞ்சனை வாய் திறக்காது இருக்கவும் அவரே புரிந்தவர் போல் காஞ்சனையை உட்கார்த்தி வைத்து பேசலானார்.

“காஞ்சனை என்னால் ஓரளவு விஷயத்தை யூகித்துக் கொள்ள முடிகிறது..” என ஆரம்பித்தவர், “என்ன மாப்பிள்ளை, நீ நினைப்பது போல் சில விஷயங்களில் நடந்து கொள்ளவில்லை. அப்படித்தானே?” என்றதும் எப்படி தந்தை சரியாக கண்டுபிடித்தார் என காஞ்சனை திகைக்கவே செய்தாள்.

கூடவே தன்னையறியாமல் தலையசைக்கவும் செய்தாள்.

குருநாதர் மெலிதாய் புன்னகைக்க ஆரம்பித்து பெரிதாக்கினார்.

"அதை விடும்மா. அதற்காகவா இவ்வளவு கவலைப் படுகிறாய். என்ன பெண் நீ?" செல்லமாய் கோபிப்பது போல் பார்த்தவர் பக்கத்தில் வந்து குனிந்திருந்தவளின் தலைக் கேசத்தை வாஞ்சையுடன் நீவினார்.

"உனக்குத் தெரியுமா காஞ்சனை? உன் அம்மாவிடம் கேட்டுப் பார். ஆரம்பத்தில் கல்யாணம் ஆன புதியதில் நான் கூட ரொம்ப பிடிவாதக்காரனாய் எதற்கெடுத்தாலும் கோபம் கொண்டு மாப்பிள்ளை முறுக்குடன் ரொம்ப நாள் இருந்ததால் உன் அம்மா அடிக்கடி கூறுவாள். அந்தக் காலத்தில் நானே அப்படி இருந்திருக்கிறேன் என்றால் இந்தக் காலத்தில் கேட்கவா வேண்டும்? ஆனால் ஒன்று காஞ்சனை எதுவும் அப்படியே இருந்துவிடப் போவ தில்லை. மாறும். மாறிக் கொண்டே இருக்கும். மாப்பிள்ளையும் அப்படித்தான். கொஞ்சம் கொஞ்சமாய் உன்னைப் புரிந்து கொண்டு மாறி விடுவார். என்ன அதுவரை நீ பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். என்ன நான் சொல்கிறது புரிகிறதா காஞ்சனை?" என நீண்ட உரையை முடித்து விட்டு குருநாதர் கேட்டபோதும் காஞ்சனை தலையசைக்கவே செய்தாள்.

ஒரு விஷயம் அவளுக்குப் புரிந்தது. அப்பா சொல் வதைப் பார்த்தால் இது ஒன்றும் புதிதாய் அவளுக்கு ஏற்படும் பிரச்சினை இல்லை. காலங்காலமாய் எல்லா பெண்களுக்கும் ஏற்படும் பிரச்சினைதான்!



பிறகு எதற்கு வருந்த வேண்டும்? எதையோ இழந்து விட்டது போல் கலங்க வேண்டும்? யோசித்த காஞ்சனை வீறு கொண்டதுபோல் நிமிர்ந்து கொண்டாள்.

முகத்தை துடைத்துக் கொண்டு நடமாட ஆரம்பித்தாள். அப்பா சொன்னது போல் உதயசந்திரன் விஷயத்திலும் அப்படித்தானோ? ஆரம்பத்தில் அப்படி முரட்டுத்தனமாய் காட்டான் போல் நடந்து கொள்கிறவன்... போகப் போக சரியாகி விடுவானோ? அவளை அவள் காட்டும் அன்பைப் புரிந்து கொண்டு அவள் நினைப்பது போல் பாசமழை பொழிய ஆரம்பித்து விடுவானோ?

ஏன் நடக்காது? நம்புவோம்... கண்டிப்பாக நடக்கும்! என மனதை தேற்றிக் கொண்டு உறுதி பெற்றாள் காஞ்சனை.

ஏனோ அந்தப் பிரிவில் காஞ்சனைக்கு உதயசந்திரனை விட நாத்தனாரான மாலதியை அதிகம் தேடியது. சுட்டிப் பெண். அவளையே சிரிக்க சிரிக்க சுற்றி வருபவள். அவள் பேச்சிலும் சரி கிண்டலிலும் சரி.. அப்படியே மனம் லயித்து நேரம் போவதே தெரியாது என ஒரு கணம் நெகிழ்ந்தவள் அவள் மாலதியைப் போல துருதுருவென நகைச்சுவை பொங்க உதயசந்திரனின் குணமும் இருந்தால் எப்படி இருக்கும்? என நினைத்துப் பார்த்தாள்.

அந்த சிடுமூஞ்சியாவது அப்படி கலகலவென சிரிப்பதாவது? என மற்றொரு எண்ணம் விரைவாய் எழுந்து விரட்டியது.

உண்மைதானே? முத்துக்கள் போல் அழகான பல் வரிசை இருந்தும் உதயசந்திரன் சிரிக்க மறுக்கிறானே! கொஞ்சம் சிரித்துப் பேசுங்கள் அழகாக இருக்கும் என்றால், 'அப்படியானால் சிரிக்காதபோது நான் அசிங்கமாகவா

இருக்கிறேன்?' என குதர்க்கமாக அவனிடம் கேட்டு சண்டைக்கு கூட வந்தானே?

காஞ்சனை திகைப்பாய் யோசித்தவளுக்கு ஒரு விஷயம் நெருடலாகவே உறுத்தியது. உண்மையில் இந்த உதயசந்திரனுக்கு மனைவியாய் வந்த அவளை பிடித்திருக்கிறதா இல்லையா? என்ற நினைப்பு எழுந்தது.

அவன் அவள் மீது சிறிதும் ஆர்வமோ அக்கறையோ காட்டாததைப் பார்த்தால், அவளுக்கு பெரும் சந்தேகத்தை அல்லவா உண்டு பண்ணுகிறது.

நன்றாக யோசித்துப் பார்த்தால் அவன் நேருக்கு நேர் காஞ்சனையின் முகம் பார்த்து பேசும் சந்தர்ப்பங்கள் கூட குறைவே.. எப்போதும் முகத்தை திருப்பி எங்கோ பார்த்தவாறுதான் கூறக் கண்டிருக்கிறாள்.

ஒருவேளை அப்படி அவள் முகம் பார்த்து பேச முடியாத அளவுக்கு அவள் மீது வெறுப்பா.. இல்லை அவளைப் பிடிக்கவில்லையா? அவள் சின்னதாய் செய்யும் அழகு விஷயங்களைக் கூட குத்தலாய் பேசி என்னவெல்லாம் பேசினான்?

முதலிரவில் மைதீட்டிய கண்களை பிடிக்காது கொஞ்சமும் யோசிக்காமல் அழி என்றானே? அப்படி யானால் அப்படியானால் அவனுக்கு நிஜமாகவே அவளைப் பிடிக்கவில்லையா? இல்லை அவளது அழகை ரசிக்கத் தெரியவில்லையா?

அப்படி வேறு கோணத்தில் நினைத்துப் பார்த்தவளுக்கு இரவுப் பொழுதில் அவன் காட்டும் வேகம், முரட்டுத்தனம் ஞாபகத்திற்கு வந்தது.



இல்லையே.. அவனுக்கு அவள் மீது ஆசை இருக்கத் தான் செய்கிறது. இல்லையென்றால் இரவில் அவள் மீது அப்படி முரட்டுத்தனத்தை காண்பிப்பானா? ஆசையில் லாமல் எப்படி அவனால் அப்படி நடந்து கொள்ள முடியும்? ஆக... அவனுக்குள் அவன் உள் மனதில் அவள் மீது ஆசை இருக்கிறது. இருக்கத்தான் செய்யும். என்ன அதை வெளிக்காட்டாமல் நடமாடுகிறான். மிக மோசமாக நடந்து நம்மை நோகடிக்கிறான்... அப்படி.. அப்படித்தான் இருக்க வேண்டும்!

தனக்குத்தானே பேசிக் கொண்டு சமாதானமானாள் காஞ்சனை.

அப்படி சமாதானமானவள் குழப்புவது போல் போன வாரம் நடந்த சம்பவம் ஒன்று அவள் முன் காட்சிகளாய் ஓடியது.

போன வாரம்... அவள் அங்கு இருந்தபோது ஒருநாள் மாலை நடந்த சம்பவம் அது.

அன்று வழக்கம் போல் உதயசந்திரன் அலுவலகம் முடிந்து வீட்டிற்குள் வந்தவன் அவளை அவசரப்படுத்திய வாறு ''கிளம்பு! கிளம்பு'' என்றான்.

புரியாமல் விழிக்கத்தான் செய்தாள்.

அவன் திரும்பவும் பரபரக்க அதே திகைப்புடன், ''நானா? என்னையா சொல்கிறீர்கள்?'' என்றாள் நம்ப முடியாமல்.

அவள் உதயசந்திரன் லேசாய் தன் தலையிலே தட்டிக் கொண்டு, ''அட அசடே..! உன்னைத்தான் சொல்கிறேன்'' என்றான்.

அசடா? அவளா அசடு?

அவள் மறுபடியும் விழிப்பதைப் பார்த்து, "இந்த ரூமில் உன்னைத் தவிர வேறு யாரும் இருக்கிறீர்களா? அல்லது சுவரைப் பார்த்து பேசிப் பழகுகிறேன் என்று நினைத்தாயா? சரியான முட்டாளாய் இருக்கிறாயே? கிளம்பு!" என்றான் மறுபடியும்.

'சரியான முட்டாள்' ம்ம்... அடுத்த வார்த்தை.. அவள் தலைக்கு மற்றொரு கிரீடம்!

"இல்லை.. என்னை ஒருபோதும் வெளியே நீங்கள் அழைத்துச் செல்வது இல்லையே?" வாய் வரை வந்து விட்ட வார்த்தைகளை விடாமல் கொட்டினாள்.

ஆனால் அவனாவது அசறுவதாவது?

திரும்பி அவளை ஒரு கெக்கலிப்பு பார்வை பார்த்தவன், "உண்மைதான்! உன்னை வெளியில் கூட்டி நகர்வலம் செல்வது எல்லாம் எனக்குப் பிடிக்காத பாலிஸி. ஆனால் ஒன்று..." என நிறுத்தியவன், "நீ முதலில் கிளம்பு. சொல்கிறேன்" என அத்தோடு நிறுத்தி விட்டான்.

அவளுக்குப் புரியவில்லைதான். ஆனாலும் உற்சாகமாய் கிளம்ப ஆரம்பித்து விட்டாள். இப்படி அவன் அவளை இரண்டொரு இடங்களுக்கு அழைத்துச் சென்றால் போதுமே? ஒருவித நெருக்கம் அவளைப் புரிந்து கொள்ளும் அண்டர்ஸ்டாண்டிங் ஏற்படுமே!

படபடவென பீரோவைத் திறந்து தகதகத்து சரிகைச் சேலை ஒன்றை அவள் கட்டப் போக பின்னோக்கி பார்வையை ஓட்டியவன், "மினுக்குச் சேலையெல்லாம் கட்டாதே... வேறு கட்டு!" என்றான் குரலை உயர்த்தி.



அவள் திடுக்கிடத்தான் செய்தாள்.

"அட என்ன இது? பளபளப்புச் சேலை இவனுக்கு மினுக்குச் சேலையா? என சட்டென நொந்தவள் மனதை தேற்றிக் கொண்டு வேறு ஒரு ஷிபான் சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டு அவசரமாகக் கிளம்பினாள்.

அதற்குள் உதயசந்திரனும் உடை மாற்றி வெளிர் வெள்ளை நிற பேண்ட் ஷர்ட்டிற்கு மாறி இருந்தான். காலில் கறுப்பு ஷூக்கள் பளிச்சிட அவன் விரைப்பாய் நின்ற கோலம் கம்பீரமாகத்தான் இருந்தது.

என்ன கம்பீரம் இருந்து என்ன? அந்த முகம்? அந்த சிரிக்க மறுக்கும் உதடுகள்? சதா சிடுமூஞ்சி போல முகத்தை எப்போதும் உர்ரென வைத்துக் கொண்டு எப்படித்தான் இருக்கிறானோ? என்றுதான் நினைத்தாள்.

பைக்கை எடுத்து ஸ்டார்ட் செய்ததும் ஓடிப் போய் தாவலாய் பின்னால் உட்கார்ந்து கொண்டாள். கொஞ்சம் தாமதித்தால் கூட அவளை விட்டுவிட்டு அவன் பாட்டுக்கு சென்றுவிடக் கூடும்.

உதயசந்திரன் பைக்கை நேராக பெரிய சாலையில் செலுத்தி நகரின் ஒதுக்குப்புறமான காலனி ஒன்றுக்குள் நுழைந்தான். ஒரு பெரிய வீட்டின் முன் நிறுத்தினான்.

"இறங்கு!" அவனது விரட்டலான குரல் வரும் முன்பே இறங்கி விட்டாள்.

அந்த வீட்டில் பந்தல் ஸ்பீக்கர் என ஏதோவொரு நிகழ்ச்சியை உறுதி செய்ய, "அலுவலக நண்பன் மோகனின் மனைவிக்கு இன்று வளைகாப்பு நிகழ்ச்சி. உன்னையும் அவசியம் கூட்டி வரச் சொன்னான். அதான்

வந்தேன்'' என்று விஷயத்தை போட்டு உடைத்ததும் அவளுக்கு எல்லாம் புரிந்தது.

கூடவே அவன் சொன்ன வார்த்தைகளை நெருடி முள்ளாய் குத்தியது. 'அவன் கண்டிப்பாக பேமிலியாய் உன்னைக் கூட்டி வரச் சொன்னான். அதான் கூட்டிப் போகிறேன்' என்றுதானே உதயசந்திரன் சொன்னான்?

அப்படியானால் அந்த ப்ரெண்டு சொன்னதற்காகத்தான் வழியில்லாமல் இப்படி கூட்டி வந்திருக்கிறான்? உண்மையில் இவனுக்கு அப்படி கூட்டிப் போக ஆசையில்லை. அப்படித்தானே? அதுதானே உண்மை? யோசித்துத் திகைத்தாள் காஞ்சனை.



## 11

ஒரு வாரத்தில் சொன்னபடியே பிறந்தகத்தில் இருந்து கிளம்பி வீடு வந்து விட்டாள் காஞ்சனை.

ஆனால் அன்று இரவே உதயசந்திரன் முன்பு நடந்தவைக்காக பிரச்சனையை கிளப்புவான் என்று எதிர்பார்க்கவில்லை.

இரவில் பாலுடன் நுழைந்தவளை படுக்கையில் அமர்ந்தபடி ஏதோ பேப்பரை புரட்டிக் கொண்டிருந்தவன், ''இப்படி வா'' என்றான்.

அவன் முன்னால் போய் நின்றாள்.

''என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ?''

''ஒன்றும் நினைக்கவில்லையே..'' என்றாள்.



''ஒன்றும் நினைக்கவில்லையா? உன் வீட்டில் வைத்து வரமாட்டேன், ஒரு மாதம் இருப்பேன் என்றெல்லாம் கூறி ரகளை பண்ணினாயே... மறந்து விட்டாயா?''

''அது.. அது..''

அவள் திணற அடுத்த கேள்வியை வீசினான்.

''எதனால் அப்படிச் செய்தாய்? காரணத்தைச் சொல்!'' என்றான்.

அவள் திகைத்தாள்.

என்ன காரணத்தைச் சொல்ல முடியும்?

அவளைப் பற்றி கொஞ்சமும் யோசிக்காமல், அவள் மனம் புரியாமல் காட்டான் போல் அவன் நடந்து கொள்வதுதானே காரணம். அவை எப்படி அவனிடமே வெளிப்படையாகச் சொல்ல முடியும்?

''இல்லை.. என் அம்மா வீட்டில் இன்னும் சில நாட்கள் இருக்க வேண்டும் என்ற ஆசை... அதனால்தான்...'' என சமாளிக்கப் பார்த்தாள்.

அவன் விடாமல் பார்வையை சுருக்கிக் கொண்டு, ''ஆசையா? அல்லது என் மேல் உள்ள எரிச்சலா?'' என்றான்.

அவளுக்கு திடும்மென கோபம் மூண்டது. என்ன இவன் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே கேட்கிறான்? தெரியாதது மாதிரியே நடிக்கிறான்?

''இரண்டும்தான்!'' என்றாள் அவள் அழுத்தமாக.

''அதானே பார்த்தேன்..'' என்றபடி அவன் படுக்கையில் இருந்து எழுந்து அவள்முன் வந்து கைகளைக் கட்டிக் கொண்டான்.

''அதாவது என் மீது உனக்கு எரிச்சல் இருக்கிறது?''

''ஆ..ஆமாம்..''

''எரிச்சலுக்கான காரணம்?''

''நீங்கள் நடந்து கொள்ளும் முறை...'' என்றாள் அவள் பட்டென.

''ஓ அப்படியா? எனக்கு நடந்து கொள்ளத் தெரிய வில்லை. நீ கற்றுக் கொடுக்கிறாய். அப்படித்தானே?''

அவள் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தாள்.

''இன்று உனக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன். அப்போது தான் புத்தி வரும்.''

கோபமாய்ச் சொன்னவன் அதே வேகத்தில் அவளை முறைத்துப் பார்த்தான்.

''எப்படித் தெரியுமா?'' என்று கேட்டபடி அவள் பக்கம் மேலும் நெருங்கியவன் அவள் சற்றும் எதிர்பாரா தருணத்தில் ஓங்கி செவிட்டில் அறைந்தாள்.

பொறி கலங்கி விட்டாள் அவள்!

கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ந்தே போய் விட்டாள்.

அவள் கொஞ்சமும் இதை எதிர்பார்க்கவில்லை!

கடைசியில்... கடைசியில்... அவளை கை நீட்டி அடிக்கக் கூட ஆரம்பித்து விட்டான்1

என்ன மனிதன் இவன்?



''இனி என்னிடம் ஏதாவது முரண்டு பிடித்தால் இப்படி அடி உதைதான் விழும். புரிந்து கொள். ஜாக்கிரதை!''

கைகளை வீசி மிரட்டல் போல் சொல்லியவன் அதே வேகத்தில் ரூமிலிருந்து வேகமாய் அகலவும் செய்தான்.

அப்படியே அதிர்ந்து போனவளுக்கு அப்பா சொன்ன அட்வைஸ் வார்த்தைகள்தான் ஞாபகம் வந்தது.

''உன் வாழ்க்கையில் நடக்கும் சோதனையான விஷயங்களை ஒரு பார்வையாளன் போல் நகைச்சுவையாய் பார்க்கப் பழகிக் கொள் என்றாரே.. அப்படியானால் இதற்கு அந்த அடிக்கு என்ன செய்ய?

ஆஹா! கன்னம் பழுக்கும் அளவுக்கு சரியான அடி. நான் கொடுத்து வைத்தவள்தான்! என கைதட்டி ரசிக்கவா?''

நினைத்தவளின் இதழ்களில் வறண்ட சிரிப்புதான் ஓடியது.

எதுவானாலும் சரி இனி இது போன்ற விஷயங்களுக்கு கண்களை மட்டும் கசக்கிக் கொண்டு நிற்கக் கூடாது என தீர்மானமாய் இருந்தாள்.

அதனாலே அவன் அன்று கொடுத்த அந்த அடிக்கு கொஞ்சமும் கவலைப்படாமல் நிம்மதியாய தூங்கினாள்.

பால்கனியில் சிகரெட்டுகளை ஊதித் தள்ளி விட்டு சிறிது நேரம் கழித்து படுக்க வந்த உதயசந்திரன் கூட அடித்ததற்கு பின் விளைவுகள் எதுவுமில்லாமல் அவள் ஆழ்ந்து தூங்குவதை அதிசயமாகத்தான் பார்த்தான்.

மறுநாளும் அவன் எவ்வித சங்கோஜமுமில்லாமல் கூடுதலான உற்சாகத்துடன்தான் நடமாடினான்.

காலையில் எழுந்தவனுக்கு முகமலர்ச்சியுடன் அத்தனை பற்களையும் காட்டியவாறு 'குட் மார்னிங்' சொன்னாள். பெட் காபி கொடுத்து விட்டு அவன் படிக்கும் தின பேப்பரையும் ஆவலாய் எடுத்து வைத்தாள்.

டூத் பிரஷ்ஷில் இருந்து அவனுக்கு பிடித்த டிபனான ஆனியன் தோசை, புதினா சட்டினி வரை சுவைபட தயாரித்து பரிமாறினாள். அலுவலகம் கிளம்பும் போது அவன் கொண்டு செல்ல வேண்டிய பைல்களை கைகளில் இடுக்கிக் கொண்டு ஸ்கூட்டரை எடுத்து வந்தவனிடம் பயபக்தியாய் நீட்டினாள். பள்ளிச் சிறுமியாய் மாறி அவனுக்கு டாட்டா காட்டினாள்.

எல்லாவற்றுக்கும் ஒரே முக மலர்ச்சிதான்! இதழ்கள் விரிந்த பெரிய புன்னகைதான். திரும்ப திரும்பச் சிரித்தாள். உதயசந்திரனே நின்று கண்களைச் சுருக்கி, 'இவளுக்கு என்னாயிற்று?' என்பதுபோல் ஆழமாய் ஒரு பார்வை பார்த்து விட்டுச் சென்றான்.

துடுக்கான மாலதிதான் உடனடியாய் காஞ்சனையின் மாற்றத்தை கவனித்து விட்டாள். ''அண்ணி என்னா யிற்று?'' என்று அதிசயித்தவளை, ''வேறொன்றுமில்லை. நானும் உன்னைப் போல் உஜாலாவுக்கு மாறி விட்டேன்'' எனக் கூறி திகைக்க வைத்தாள்.

அன்று இரவு அதிசயமாய் தன்னைப் பார்த்தவனிடம் விளக்கினாள் காஞ்சனை.

''நான் உங்களை புரிஞ்சுக்கிட்டேன்'' என்றாள் அழுத்தமான குரலில்.



''புரிஞ்சுக்கிட்டாயா? எப்படி?'' என்றபடி அவளை வேண்டுமென்றே வெறுப்பேற்றுவது போல் சிகரெட் ஒன்றையெடுத்து புகையை விட்டான்.

''ஆமா.. உங்கள் மனசை..உங்கள் குணத்தை புரிஞ்சுக்கிட்டேன்..''

''அப்படியா? நான் ஒன்றும் என் மனதை வெளியே கயிற்றில் கட்டித் தொங்க விடலையே..''

சிரிக்காமல் சொன்னவனைப் பார்த்து கலகலவென சிரித்தாள். ''அட.. நகைச்சுவையாய் பேசறீங்க? உங்களுக்கு இப்படி ஜோக்கெல்லாம் அடிக்கத் தெரியுமா?'' விழிகளை விரித்து அதிசயமாகவே கேட்டாள்.

அவனும் கண்களைச் சுருக்கியே அவளைப் பார்த்தான்.

''ஜோக் மட்டுமல்ல... கன்னத்தில் அடிக்கவும் தெரியுமே. நீதான் பார்த்தாயே?'' என்றான் குதர்க்கமாய்.

''அதை விடுங்கள்.. பழைய கதை..'' என்றவள் மீண்டும் முகம் முழுவதும் புன்னகையும் முகமலர்ச்சியையும் கொண்டு வந்தபடி, ''புதுக் கதை ஒன்று நான் சொல லட்டுமா?'' என்றாள்.

''ம்ம்.. சொல்லு.''

''நான் உங்களை மிகச் சரியாக புரிந்து கொண்டேன்.''

''ஓஹோ..''

''இனி உங்கள் நினைப்புப்படியே நான் நடந்து கொள்வேன்..''

''அப்படியா?''

''உங்களை எனக்கு மிக மிகப் பிடித்து இருக்கிறது. அதனால்.. அதனால்.''

அவள் சொல்ல வந்து தடுமாறுவது போல் அப்படியே நிறுத்தினாள்.

''ம்ம்.. சொல்ல வந்ததைச் சொல்லு.''

''நான் உங்களை மிகவும் விரும்புகிறேன்...'' சொல்லிய படி ஓடிச் சென்று கரங்களை மாலையாய் அவன் கழுத்தில் கோர்த்து இறுக அணைத்துக் கொண்டாள். முகம் சிவக்க அவன் மார்பில் புதைந்து கொண்டாள்.



12

**அ**ன்று காலை அவளுக்கு முன்பாகவே எழுந்தான் உதயசந்திரன். மெல்ல கண் விழித்து சோம்பல் விலகிய காஞ்சனையின் அருகில் வந்து குனிந்தான்.

பெரிய மன்மதன் போல் லேசாக முத்த மிட்டு, 'குட்மார்னிங்' சொன்னான்.

'எதற்கு இந்தக் கரிசனம்? இந்தப் பீடிகை?' என்பது போல் அவள் விழித்தாள். ஒற்றை விரலால் அவளது புருவ மத்தியைத் தொட்டு அப்படியே நெற்றியை வருடினான்.

அவளுக்கு நெகிழ்வுக்குப் பதில் விவகாரமாய் ஏதோ ஒன்றைப் பேசப் போகிறானோ? என்ற பயமே அடி வயிற்றில் பரவியது!

அவள் நினைத்தது போலவே, ''உன்னிடம் ஒரு முக்கிய மான விஷயம் பேசப் போகிறேன்'' என ஆரம்பித்தவன்



கூடவே, ''குறுக்கே பேசாமல்... என்ன.. எதுவென்று கேட்காமல் தலையை மட்டும் நீ ஆட்ட வேண்டும் புரிகிறதா?'' என விரட்டவும் செய்தான்.

அவள் மெல்ல தலையசைத்ததும் விஷயத்தைச் சொன்னான். ''என் நண்பன்... அதுவும் எனக்கு மிகவும் நெருக்கமான நண்பன்.. சைடு பிசினசாக வியாபாரம் ஒன்று தொடங்க இருக்கிறான். அதற்காக அவனுக்கு ஐம்பதி னாயிரம் பணம் தேவைப்படுகிறது. நான் தருவதாக வாக்கு கொடுத்து விட்டேன்..'' என்றவன் நிறுத்தி அவளது கண்களை உற்றுப் பார்த்துவிட்டு, ''எல்லாம் உன் நகைகளை நம்பித்தான்!'' என முடிக்கவும் அவளுக்கு பக்கென்றது.

அவளது நகைகளா? அதுவும் யாரோ ஒரு இவனது நண்பன் தொழில் செய்வதற்கா? என்ன ஒரு கோமாளித் தனம்!

மனதுள் கொதிப்பாய் நினைத்தாலும் அவனது மேலும் உயர்ந்த குரல் அவளை ஊமையாக்கியது.

''ஒரு இரட்டை வருட சங்கிலி வைத்திருக்கிறாய் அல்லவா? அதைக் கொடு. அடகு வைத்து பணம் வாங்கிக் கொள்கிறேன். மூன்று மாதத்தில் என் நண்பன் பணத்தை கொடுத்து விடுவான். பின் மீட்டுக் கொள்ளலாம் என்ன?''

சொல்லி அதே விரட்டலோடு அவன் கேட்க மறுக்க திராணியற்றவளாய் தலையை மட்டும் ஆட்டினாள்.

அவன் அத்தோடு நிறுத்தவில்லை.

உதட்டில் விரல் வைத்து எச்சரிப்பது போல் சைகை யுடன் அதையும் சொன்னான். ''விஷயத்தை வேறு

யாரிடமும் குறிப்பாக அவளது தாய் தந்தையிடமோ.. இங்குள்ள மாமியாரிடமோ மூச்சு விடக் கூடாதாம். அப்படித் தெரிந்தால்.. பொண்டாட்டி நகையை அடகு வைக்கிறான்.. என அவனுக்கு இகழ்வாய்ப் போய்விடுமாம்..''

அவள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்தாள். அது அவனுக்கு எரிச்சலை கிளப்பியது போலும்.

''என்ன பேசாமல் இருக்கிறாய்?'' என்றான்.

''எல்லாவற்றையும் நீங்களே பேசி விட்டீர்கள். இனி நான் என்ன பேச வேண்டியிருக்கிறது?'' என எதிர்கேள்வி கேட்டாள்.

அவன் முறைத்தான்.

''என்ன சொல்கிறாய் நீ?''

''உங்கள் நண்பருக்கு பிசினஸ் செய்ய பணம் தேவையென்றால் அதற்கு என் நகையா கிடைத்தது? நீங்களே முடிவு செய்து விட்டீர்கள். நீங்களே அதை யாரிடமும் நான் சொல்லக் கூடாது என கூறி விட்டீர்கள். இனி என்னிடம் என்ன கேள்வி?''

அவள் கேட்டு முடித்ததும் மறுபடி முறைத்தவன், ''அப்படியானால் உன்னிடம் கெஞ்சி அனுமதி கேட்டு பின்தான் நான் செய்ய வேண்டுமோ?'' என்றவன் தொடர்ந்து, ''நான் உன் கணவன். உன் விஷயத்தில் முடிவெடுக்க உன்னை விட எனக்குத்தான் உரிமை உண்டு,'' என்றான்.

''தாராளமாய் எடுங்கள்! என் நகைகள் பீரோவில்தான் இருக்கிறது. எடுத்துக் கொண்டு போய் உங்கள் நண்பரிடம் கொடுங்கள். எனக்கு சந்தோஷம்தான்!''



வேண்டுமென்றே அவள் குரலை மாற்றிச் சொன்னதும் அவன் திகைத்தான். ''நீ எரிச்சலில் சொல்கிறாயா? அல்லது உண்மையாகச் சொல்கிறாயா?'' என்றான்.

''ம்ம்.. உண்மையாகத்தான் சொல்கிறேன். உங்கள் விருப்பம் உங்கள் எண்ணம்தான் எனக்கு முக்கியம். அதன்படி நீங்கள் செயல்படுங்கள்'' என்றாள்.

அவன் உதயசந்திரன் என்ன நினைத்தானோ தோள்களை குலுக்கி தலையை பலமாய் ஆட்டியவன், ''நல்லவேளை நீ தப்பித்தாய்.. இந்த விஷயத்திற்கு நீ பெரிதாய் ரகளை செய்வாய்.. அப்படிச் செய்தால் உன்னிடம் சண்டை போடலாம் என தயாராய் இருந்தேன். நீ.. நீ.. தப்பித்து விட்டாய்..'' சொல்லியபடி பெரிய கணைப்பு ஒன்றுடன் அவன் அகன்றபோது அவள் திடுக்கிடவே செய்தாள்.

'பெரிய சண்டை போட நினைத்தானாமே? நல்ல வேளை! நிஜமாகவே தப்பிக்கத்தான் செய்திருக்கிறோம்!' என நினைத்தாள் காஞ்சனை.

உதயசந்திரன் சொன்னதற்கு மறுநாளே பீரோவைத் திறந்து அந்த நகையை அடகுக் கடைக்கு எடுத்துச் சென்று விட்டான்.

இலையுடன் பூப்போட்ட டாலர் ஒன்றை தாங்கிய செயின் அது. அம்மாவுடன் சென்று நகைக் கடையில் ஆசை ஆசையாய்ப் பார்த்து அவள் வாங்கியது.

அவளே அதை அதிகம் போடாமல் முக்கிய நிகழ்ச்சிகளுக்காக மட்டும் அணிந்து சென்று அழகு பார்த்திருக்கிறாள். ஆனால் இப்போது... நகை அடகுக் கடைக்குச் சென்று விட்டதே!

அதுவும் கணவனின் உபயோகத்திற்கு என்றால் பரவாயில்லை. யாரோ ஒரு நண்பனுக்கு மனைவியின் நகையைப் போய் அடகு வைத்து யாராவது பணத்தைக் கொடுப்பார்களா?

இவ்வளவு அசடாய் முட்டாளாய் உதயசந்திரன் இருக்கிறானே என நினைத்தாள் அவள்.

அதில் விஷயத்தை யாரிடமும் சொல்லக் கூடாது என்ற மிரட்டல் வேறு!

மீறி மாமியாரிடம் சொன்னால் என்ன? இந்த உதய சந்திரன் என்ன செய்துவிட முடியும்? என்ற யோசனையும் ஓடியது.

வேறு என்ன? வழக்கம் போல் பெரும் சண்டை போடுவான். கோபம் உச்சமாகிப் போனால் அவளை அடிக்கக் கூட செய்வான். எது நடந்தாலும் எல்லாவற் றையும் அவள் சகித்துதான் ஆக வேண்டும். வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் வேண்டும். வேறு வழியில்லை!

நினைத்துப் பார்த்தவளுக்கு எரிச்சல் வந்தாலும் இந்த விஷயத்திற்கு என்னவாவது செய்ய வேண்டும். செய்து உதயசந்திரனுக்கு தன் தவறை புரிய வைக்க வேண்டும் என்ற எண்ணமும் ஓடியது.

இரண்டு நாள் கழித்து இரவு படுத்தபோது மெல்ல பேச்சை ஆரம்பித்தாள். ''நீங்களும் ஏதாவது சைடில் பிஸினஸ் செய்யலாம்தானே?'' என்றாள்.

அவன் பேசாமல் இருக்க, ''என்னிடம் இன்னும் கொஞ்சம் நகைகள் இருக்கிறது. அவைகளை அடகு



வைத்து உங்கள் நண்பருடன் சேர்ந்து நீங்களும் தொழில் செய்யலாமே?'' என்றதும் அவன் உதயசந்திரன் சிந்திப்பது போல் முகத்தைக் கொண்டு போனான்.

ஒரு சில நிமிடங்களுக்குப் பின் நிமிர்ந்து, ''நீ சொல்வது கூட நல்ல ஐடியாதான்!'' என்றவன் தொடர்ந்து, ''பரவாயில்லையே... உன் களிமண் மூளை கூட சில சமயங்களில் வேலை செய்கிறதே?'' என்றான்.

பாராட்டில் கூட இப்படியொரு வஞ்சப் புகழ்ச்சியா? என சலித்தவள் அதை வெளிக்காட்டாது ''அப்படியானால் நீங்கள் ஆரம்பிக்கிறீர்களா?'' என்றாள் பிரயாசையாய்.

அவன் உதடுகளை இறுக்கி மறுபடி கண்களை உருட்டி யோசித்தான். பின் நிமிர்ந்து அவளை நேர் பார்வை பார்த்தவன், ''வேண்டாம், அது சரிப்பட்டு வராது. அப்படிச் செய்ய மாட்டேன்'' என்றான்.

அவள் புரியாமல் திகைத்து, ''என்ன சொல்கிறீர்கள்?'' என்றதும் மடமடவென கொட்டினான்.

''இதோ பார்! நகைகளை என் நண்பனுக்காக அடகுக் கடைக்கு கொடுத்ததோடு உன் வேலை முடிந்து விட்டது. அத்தோடு நிறுத்திக் கொள். வீணாய் பெரிய புத்திசாலி போல் எனக்கு யோசனை சொல்லி அட்வைஸ் பண்ணும் வேலை எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதே! பின் நான் பொல்லாதவனாகி விடுவேன்!'' என கைகளை உயர்த்தி ஆட்டியபடி அவன் மிரட்டியபோது, சப்தநாடி ஒடுங்க அரண்டு விட்டாள் அவள்.

திடீரென சுபாவம் மாறி இப்படி பாம்பாய்ச் சீறுகிறானே... என்ன மனிதன் இவன்! என சலித்துப்போனாள் அவள்.



13

அன்று ஞாயிற்றுக்கிழமை! வேறு விருந்தினர் யாரோ வருகிறார்கள் என வீடே அல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

காஞ்சனை மாலதியிடம் விசாரித்தபோது துபாயில் இருக்கும் அத்தை மாமா குடும்பம் வருவதாகச் சொன்னாள். உதயசந்திரனின் கல்யாணத்திற்கு வந்துவிட்டு உடனே சென்று விட்டவர்கள் இப்போதுதான் ஆற அமர பார்க்க பேச வருகிறார்களாம்.

மாலதி உபரியாய் கிசுகிசுத்தவள், ''அண்ணி இதில் முக்கியமான விஷயம் என்ன தெரியுமா? இந்த அத்தையின் மகள் ரேகாவைத்தான் அண்ணனுக்கு கட்டி வைக்க அத்தையின் திட்டம். அண்ணன் ஒரேயடியாக மறுத்து விட்டதால், அத்தை மாமாவிற்கு அதில் வருத்தம் தான்!'' என்றாள்.

அவள் புரியாமல் விழிக்கவும், ''புரியவில்லை? ரேகாவிற்கு கிடைக்காமல் அண்ணன் உங்களுக்கு கிடைத்தது உங்களுக்கு அடித்தது லக்கி பிரைஸ்!'' என சிரித்தாள்.

''ஆமாம்.. ஆமாம்... லக்கி பிரைஸ்தான்... அடித்திருக்கிறது'' என முன்பு உதயசந்திரன் அடித்த கன்னங்களை தடவினாள் காஞ்சனை.

அதன்பின் பதினோரு மணி வாக்கில் ஹார்ன் சத்தத்துடன் கால் டாக்ஸி வர எல்லோரும் முன்புறம் ஓடினார்கள்.

ஜிப்பா வேஷ்டி சகிதம் பெரியவரும் லேசான குண்டு சரீரத்துடன் வயதான பெண்மணியும் இறங்கினார்கள்.



அவர்கள்தான் மாலதி சொன்ன அத்தை மாமா என புரிந்து கொண்டாள்.

எங்கே அந்த அத்தை பெண் ரேகா? என அவள் கண்கள் தேடியபோது, மறு கதவைத் திறந்து இறங்கினாள் அவள். நெடு உயரத்தில் ஒடிசலான தேகத்தில் சுமாரான அழகுடன் தெரிந்தாள். இவளை உதயசந்திரன் நிராகரித்ததில் ஒன்றும் வியப்பில்லை என்ற எண்ணம் காஞ்சனையினுள் ஓடியது.

கூடவே உறவுக்காரர்கள் என மூன்று நான்கு நடுத்தர பெண்மணிகளும் இறங்கினார்கள். எல்லோரையும் நமஸ்கரித்து வரவேற்று உள்ளே கூட்டி போனபோது எல்லோருடைய பார்வையும் தன்னையே துளைப்பதை உணர்ந்தாள் காஞ்சனை.

அதிலும் பெரியவர் ரங்கு மாமா கொஞ்சம் நகைச்சுவை உணர்ச்சி உள்ளவர் போலும். முன்னால் வந்து காஞ்சனையின் தோளில் கை போட்டுக் கொண்டு ''அட என் புது மருமகள் இவள்தானா? தேவதை போல அழகில் ஜொலிக்கிறாளே.. இந்த உதயன் பயல் எப்படி மாட்டினான் என்று இப்போதல்லவா புரிகிறது'' என்றார் பெருங்குரலில்.

அனைவரும் உதயசந்திரனை கேலி பொங்க பார்க்க அவன் வெட்கம் கவ்விய சிரிப்பொன்றை உதிர்த்தான்.

காஞ்சனை விழிப்பதைப் பார்த்து விட்டு குனிந்தவர், ''நான்தான் துபாய் ரங்கு மாமா. நம் உதயன் கல்யாணமே வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தான். உன்னைப் பார்த்ததும் தான் உன் அழகில் மயங்கி சம்சாரக் கடலில் தொம்மென்று விழுந்திருக்கிறான். அதைத்தான் சொல்றேன்'' என விளக்கினார் அவர்.

காஞ்சனையும் தன் பங்கிற்கு அசடாய் சிரித்தவள், ''சரி.. மாமா, நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? கல்யாணத்தில் பார்த்தது'' என்றாள் நினைவுபடுத்துவது போல்.

பெரியவர் முகத்தை சுருக்கி பெரிதாய் அதிசயித்தார். ''அட.. அந்த கல்யாண களேபரத்தில் என்னைக் கூட கவனித்திருக்கிறாயா? பேஷ்.. பேஷ்..! நல்ல புத்திசாலி தான்!'' என்றவர் மறுபடியும் குனிந்து, ''இன்னொரு விஷயம் மருமகளே, நானும் அந்தக் காலத்தில் இளமை வயதில் உதயன் மாதிரிதான் திடகாத்திரமாய் புஜங்கள் தெறிக்க இருப்பேன்,. உன் அத்தை எனது அந்த பாடி லாங்குவேஜைப் பார்த்து மயங்கி விழுந்தவள்தான்... இன்றுவரை எழுந்திருக்கவே இல்லை..'' எனவும் மறுபடியும் கொல் சிரிப்பொலி அங்கு எழுந்து மறைந்தது.

காஞ்சனைக்கு நேற்று கூட உதயசந்திரன் மார்பில் 'உங்களை மிகவும் பிடித்திருக்கிறது..' என ஒண்டியபோது... கிரேக்கப் போர் வீரனைப் போன்ற அவனது திண் தோள்களை, திடமான நெஞ்சு நுதி கொண்ட புஜங்களை கண்டு தான் வியந்தது ஞாபகத்திற்கு வந்து மறைந்தது.

''போதும்.. போதும்... உங்கள் மன்மதப் புராணம்..'' என அந்த வயதிலும் சிணுங்கி வெட்கப்பட்டாள் கனகம் அத்தை. ரேகாதான் ஏதோ எதிரியைப் பார்ப்பது போல் தன்னை உறுத்து உறுத்துப் பார்ப்பதை உணர்ந்தாள் காஞ்சனை.

கூட வந்த உறவுப் பெண்மணிகளும் கல்யாணி அம்மாளிடம் ''மாமா சொல்வது சரிதான். உன் மருமகள் அழகுதான்! நம் சாதி சனத்தில் இப்படி அழகைப் பார்ப்பது



அபூர்வம்தான்!'' என காஞ்சனையை ஒரு கண்ணால் பார்த்தபடி சொல்லிக் கொண்டு நடந்தனர்.

காஞ்சனை திரும்பி உதயசந்திரனை பார்த்தாள். அவனும் அப்போதுதான் எல்லோரும் சொல்வதற்காக தன்னை ஒரு பார்வை திரும்பி பார்ப்பது தெரிந்தது. ரொம்ப ஒன்றும் புகழ வேண்டாம். இதுவரை அவள் அழகைப் பற்றி சாதாரண ஒரு பாராட்டாவது பாராட்டியிருப்பானா? இப்போது மற்றவர் சொன்னதும்தான் இப்படி ஒன்றும் இருப்பதே அவன் அறிவில் படுகிறது போலும்!' என நினைத்தாள்.

அதன் பின் பலவாறாய் பலவித பேச்சுக்கள். குசல விசாரிப்புகள். டைனிங் டேபிளில் தடபுடலாய் வடை பாயாசத்துடன் மதிய விருந்து. முடிந்ததும் வெற்றிலைச் சீவல் பாக்கு வகையறாக்கள்.

வெற்றிலையை குதப்பிக் கொண்டே ரங்கு மாமா, ''நாங்கள் விருந்து சாப்பிட்டது இருக்கட்டும். நீங்கள் மாப்பிள்ளையும் பொண்ணும் துபாய்க்கு வரவேண்டும். எங்கள் வீட்டில் விருந்து சாப்பிட வேண்டும்'' என்றார்.

''அதற்கென்ன வந்தால் போயிற்று..'' என்றான் உதயசந்திரன்.

''நான் உன்னைக் கேட்கவில்லை. என் மருமகளைக் கேட்கிறேன்..'' என்றார் பார்வையை காஞ்சனை பக்கம் திருப்பியவாறு.

''கண்டிப்பாக வருகிறேன் மாமா!'' என்றாள் காஞ்சனை கொஞ்சல் குரலில்.

"ஆஹா பேச்சு கூட முத்து மணிகளாய்த்தான் உதிர்கிறது. இதைப் பொறுக்கிக் கொண்டு போய் கூட துபாயில் விற்று விடலாமே!" என்றார்.

மாமாவின் வார்த்தைகள் எல்லாவற்றையும் முதலில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த உதயாவிற்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. "ஐயோ! மாமா! உங்களுக்கு என்னாயிற்று? காஞ்சனை சின்னப் பெண்.. அவளிடம் போய் இந்த வழி வழிகிறீர்களே?" என்றான் கோபமாய்.

அதற்கும் புன்னகைத்த ரங்கு மாமா விடாமல், "இந்த தள்ளாடும் வயதில் இப்படி ஒரு அழகான பெண்ணிடம் வழிவதுகூட எனக்குப் பெருமைதான்!" என்றவர் கூடவே குரலைத் தாழ்த்தி, "அப்படியாவது உன் பொக்கை வாய் அத்தைக்கு என் மேல் கோபமோ பொறாமையோ வருகிறதா என்று பார்ப்போம்!" என்றார்.

தனது சீரியசான பேச்சை மாமா மீண்டும் ஹாஸ்யமாக ஆக்கி விட்ட எரிச்சலில் உதயா முகத்தை திருப்பிக் கொள்ள மாலதியோ கனகத்தை நோக்கி கைதட்டியவாறு, "பாருங்கள் அத்தை, நீங்கள் பொக்கை வாயாம்" என்று போட்டுக் கொடுத்தாள். கனகம்அத்தையோ கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், "அப்படி என்னைக் கேலி செய்யும் வாய்மட்டும் என்ன? அதுவும் பொக்கைதான்! பொக்கை வாய்தான்!" என மடக்க பெரும் சிரிப்பொலி ஒன்று அங்கு எழுந்து சில நிமிடங்கள் நீடித்தது.

அதை ரொம்பவும் ரசித்து வாய் விட்டுச் சிரித்த கல்யாணி அம்மாளும், "ரொம்ப நாளைக்கு பின் இப்படிச் சிரித்து



வீடே கலகலவென.. எப்படி இருக்கிறது பாரப்பா? இதற்காகவாவது நீ கூட இரண்டு நட்கள் இங்கு தங்கிச் செல்ல வேண்டும்.." என உரிமையுடன் தன் அண்ணனை நோக்கிச் சொல்ல, ரங்கு மாமா தலையசைத்தவர், "கூட இரண்டு நாட்கள் என்ன? மூன்று நாட்களே டேரா போட்டு விடுகிறேன்!" என்றார்.

கல்யாணி அம்மாள் சொல்லியது போலவே ரங்கு மாமா இருந்த அந்த நான்கு நாட்களுமே வீடே கலகலப்பாய் கிண்டல் கேலி கும்மாளத்துடன் இருந்தது.

உதயசந்திரன் கூட மாமா அடிக்கும் நகைச்சுவைக் கூத்தில் அடக்க முடியாமல் இரண்டு மூன்று முறை வாய்விட்டுச் சிரித்ததைக் கண்டு காஞ்சனையே அதிசயிக்கத்தான் செய்தாள்.

மாமா வந்தது பிடிக்காமல் எரிச்சலானது உதயா மட்டுமே! அந்த எரிச்சலும் அவன் காஞ்சனையின் அழகை வானளாவப் புகழ்ந்ததினால் வந்ததே! அதனாலே அவர் உதயாவை செல்லமாய், "உதய் குட்டி! என் செல்லம்.. வாடா இங்கு!" என பக்கத்தில் அழைத்த போதெல்லாம் முகத்தை திருப்பிக் கெண்டு விலகி ஓடினாள்.

ரேகாவும் அடிக்கடி தன்னைக் கண்டதும் வெட்டிப் போவதை உணர்ந்த காஞ்சனை வலியப் போயே அவளிடம் பேச்சுக் கொடுத்தாள். கொஞ்சம் பிகு செய்து கொண்டாலும் பிறகு இயல்பாக பேச ஆரம்பித்து விட்டாள்.



14

அன்று காஞ்சனைக்கு திடும்மென்று அந்த யோசனை புதிராய் ஓடியது. உதய சந்திரனை வழக்கமான மனைவிமார்கள் போல் ‘ஏங்க’ ‘என்னங்க’ என்று அழைக்காமல் செல்லமாய் அவள் வைத்திருக்கும் அன்பை பிரதிபலிக்கும் விதமாய் அழைக்க வேண்டும் என்ற ஆசை ஓடியது.

எப்படி அழைக்கலாம். என்ன பெயர் சொல்லி அழைக்கலாம் என ஒருநாள் முழுக்க யோசிக்கத்தான் செய்தாள்.

‘உதய்..’ ‘சந்திரன்’ என்றெல்லாம் பெயர் சொல்லி அழைக்கலாம். ஆனால் அது உதயசந்திரனுக்கு பிடிக்காது. அவன் கோபப்படுவான் என வேறு விதமாய் சிந்தனையை ஓட்டினாள்.

கெஞ்சலாய் கொஞ்சுவது போல் இருந்தால் நன்றாக இருக்கும் எனவும் அவளுக்குத் தோன்றியது.ஹனி, டார்லிங், ஸ்வீட்டி என்று கூப்பிடுவது ஒருவித பகட்டுத் தன்மையாய் ரொம்பவும் அலட்டுவது போன்ற உணர்வையே ஏற்படுத்தும் என்பது அவளது எண்ணம்.

மாறாக இப்படி கொஞ்சல் வார்த்தைகளால் விளித்தால் அது அன்பை பாசத்தை வெளிப்படுத்தி ஒருவித நெருக்கத்தையும் ஏற்படுத்தும் என்றும் அவளுள் நினைப்பு ஓடியது.

அதனால் யோசித்து தனது அழகான தலையை குழப்பாத குறையாய் தேடினாள். வார்த்தைகளைக் கண்டுபிடித்தாள்.



அவள் அப்படித் தேடி ஆசையாய் கண்டுபிடித்த வார்த்தையை அவள் உச்சரித்துப் பார்த்தபோது அவளுக்கே கூச்சமாய் இருந்தது!

அதைக் கண்ணாடி முன் நின்று சொல்லிப் பார்த்தவளை வெட்கம் பிடுங்கித் தின்றது. தனது ரோஜா உதடுகளை குவித்து மெல்ல ‘அன்பரே’ என சொல்லிப் பார்த்தாள். கேட்பதற்கு இனிமையாகத்தான் இருந்தது. ஆனால் இது உதயசந்திரனுக்குப் பிடிக்க வேண்டுமே?

பிடிக்கிறதோ, இல்லையோ, நாம் கூப்பிட ஆரம்பித்து விடுவோம்.. என முடிவு செய்து விட்டாள் அவள். அன்று மாலையில் இருந்தே ஆரம்பித்தும் விட்டாள்.

“அன்பரே.. இதோ சுவையான தேநீர் உங்களுக்கு!.. அன்பரே.. இதோ நீங்கள் விரும்பிப் படிக்கும் இலக்கியப் புத்தகம். அன்பரே.. இதோ நீங்கள் விரும்பிக் கேட்கும் மியூசிக் சிடி.... என அவனது தேவையை அறிந்து அவன் கேட்கும் முன்னரே ஒவ்வொன்றாய் எடுத்து நீட்டத்தான் செய்தாள்.

உதயசந்திரன் பொதுவாக அவள் சொல்லும் எதையும் அவ்வளவு காது கொடுத்து கேட்பதில்லை. அதனாலே அவள் சொன்ன ஆசை வார்த்தையான ‘அன்பரே’யும் அவன் செவிகளில் பதியவில்லை.

ஆனால் காஞ்சனை திரும்பத் திரும்ப அதைக் கொஞ்சாத குறையாய் உச்சரித்து சொன்னபோது அவனுக்கு உரைத்தது.

டக்கென நின்று திரும்பினான். “என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்?” என்றான் முகம் விரிய.

அதற்கும் காஞ்சனை அதே கொஞ்சலுடன், ''வேறு ஒன்றுமில்லை அன்பரே.. உங்களை அன்பாக பாசமாக அழைத்துப் பேச 'அன்பரே' என ஆசையாய் விளித்துப் பேச ஆரம்பித்திருக்கிறேன்'' என்றவள் அவள் முகம் இறுக்கமாய் போன போக்கைப் பார்த்து, அதற்கு எனக்கு அனுமதி உண்டா? தயவு செய்து அனுமதிப்பீர்களா?'' என்றாள் கெஞ்சுவது போல்.

உதயசந்திரன் அவள் கண்களையே ஊடுருவுவது போல் பார்த்துவிட்டு மறுநிமிடமே முகத்தை திருப்பிக் கொண் டான். ''என்னமும் பண்ணித் தொலை! நீ பேசும் எதுவும் என் காதுகளில் விழாது. இது மட்டும் என்ன விழுந்து விடவாப் போகிறது?'' என வழக்கமான அவனது விட்டேற்றி யான பாணியில் சொல்லிவிட்டு அகன்று நடந்தான்.

அதற்கும் காஞ்சனை விடாமல், ''அனுமதித்ததற்கு ரொம்பவும் நன்றி அன்பரே!'' என்று சொல்லி கொஞ்சத் தான் செய்தாள்.

இப்படி ஒரு ஒருவாரம் 'அன்பரே' கொஞ்சலில் காஞ்சனைக்குப் போனது. அப்படி அழைக்கும்போது ஒருவித கேலி போல் வெளியில் தோன்றினாலும் உள்ளுக்குள் மனதில் ஒருவித பாசமும், அன்பான சூழ்நிலையும் ஏற்படுவதை உணர்ந்தாள் காஞ்சனை.

அவள் அப்படி உதயசந்திரனை கூப்பிடுவதை கவனித்த மாலதிதான், அதே துடுக்குத்தனத்துடன் 'என்ன அன்பரே..யா? அப்படியானால் இனி என்னையும் அப்படியே அன்பரே.. போட்டு கூப்பிடுங்கள்..,. அன்பரே! ப்ளீஸ்.. அன்பரே!'' என காஞ்சனையை சுற்றி வந்து கிண்டலடித்துக் கொண்டிருந்தாள்.



ஆனால் தொடர்ந்து காஞ்சனை செய்தபோதும், பாசமாய் உதயசந்திரனை விளித்த போதும் அவனிடம் எந்தவித மாற்றமும் இல்லை. அப்படியொரு வார்த்தையை அன்பாய் அவள் அழைப்பதை அவன் கொஞ்சமும் உணரவில்லை. எருமை மாட்டின் மீது மழை பெய்தாற் போல் சொரணை யில்லாமல் தான் நடந்து கொண்டான்.

அதேநேரம் அவள் அப்படி அழைப்பதை காதுகளில் நன்கு உணர்ந்திருந்தான் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் சில சமயங்களில் அவளை எரிச்சல்படுத்துவது போல் அவனது செய்கை இருக்கும்.

இரவு கண் விழித்து இலக்கிய புத்தகங்களை படிக்கும் அவன் நடு இரவில் அவளைத் தட்டி எழுப்பி, ''இந்த அன்பருக்கு சூடாக ஒரு கப் காபி போட்டுக் கொண்டு வருகிறாயா?'' என அவன் கூப்பிடுவதை கிண்டலடிப்பது போல் பேசிக் காட்டுவான்.

அதற்கும் அவள் ஒன்றும் எதிர்ப்புக் காட்டாமல், புன்முறுவலுடன் ''சரி அன்பரே! இதோ கொண்டு வருகிறேன்'' என்றுதான் அகல்வாள்.

ஆக.. அவள் இப்படி அழைப்பது அவனுக்குப் புரியத் தான் செய்கிறது. அதை ரசிக்காமல் கிண்டலடிக்கும்படி வழக்கம் போல் அவனது வினோத மனம் எண்ணுகிறது. இவ்வாறு தனக்குத்தானே சமாதானம் சொல்லி நிம்மதி கொண்டாள் காஞ்சனை.

அதனாலே கொஞ்சமும் தளராமல் உதயசந்திரனின் மனநிலையை மாற்ற தான் அவன் மீது கொண்டிருக்கும் அன்பை புரிய வைக்க என்ன செய்ய? என்பது பற்றியே எண்ணிக் கொண்டிருந்தாள்.

அதனாலே வெகுவாய் யோசித்து ஒரு பட்டியலையும் போட்டாள். உதயசந்திரனை கவருவதற்கு முதலில் அவனுக்குப் பிடிக்காததை எல்லாம் செய்யாமல் நடந்து கொள்ள வேண்டும் என முடிவெடுத்தாள்.

அப்படி அவள் முடிவெடுத்து அவனுக்குப் பிடிக்காதவைகளை எல்லாம் வரிசையாய் அவள் கணித்துப் பட்டியலிட்ட போது திகைப்பும் அதிர்ச்சியும் அவளுள் உண்டானது.

ஏனெனில் அப்படி அவள் கணித்த பட்டியலில் உதயசந்திரனுக்கு அவளைப் பார்ப்பது பேசுவது, அவளிடம் சிரிப்பது என எல்லாமே பிடிக்காதவைகளாய் வேறு வழியில்லாமல் வேண்டா வெறுப்பாய் அவன் செய்வது போலவே இருந்தது.

ஒருவேளை நம்மை சுத்தமாய் இவனுக்குப் பிடிக்காமல் போயிற்றா? என அவள் நினைத்தால் அன்று இரவு அவன் காட்டும் முரட்டுத்தனம் 'அப்படி இல்லை' என்பதை அவளுக்கு உணர்த்தத்தான் செய்தது. என்ன மனிதன் இவன்? இவனை எப்படித்தான் திருத்துவது? என திகைக்கத்தான் செய்தாள் காஞ்சனை.



## 15

**கா**ஞ்சனைக்கு அன்று ஒரே ஆச்சரியம்! அன்று அவளைப் பார்க்க புகுந்த வீடு தேடி ஒரு விருந்தாளி!

மாலதி சொன்னபோது, ''என்னைத் தேடியா இருக்காதே'' என்றபடி எட்டிப் பார்த்தாள். மகிழ்வாய் அதிர்ந்தாள்.



'நெட்டைக் குச்சி' என அவளால் ரசித்து அழைக்கப்படும் மோகன்!

மோகன் அவளது தந்தையின் ஒன்றுவிட்ட சகோதரனின் மகன். டெல்லியில் மிலிட்டரியில் வேலை. காஞ்சனையின் கல்யாணத்திற்குக் கூட லீவு கிடைக்காததால் அவனால் வர முடியவில்லை. லீவு கிடைத்ததும் வரும் வழியில் அவளது ஊர் இருக்க.. காஞ்சனையின் தந்தையிடம் அட்ரஸ் கேட்டு ஓடி வந்துவிட்டான்.

மோகன் அவளை விட ஓரிரு வயதே மூத்தவன். நகைச்சுவையாய் சிரிக்க சிரிக்க பேசுவதில் கைதேர்ந்தவன். அவனது அந்த சுபாவத்திற்காகவே காஞ்சனையும் விரும்பி அவனுடன் பேசுவாள். அவனைப் போலவே கேலி செய்து கிண்டலடித்து பேசுவதில் அவளுக்கு அலாதிப் பிரியம்.

அதனாலே அவனைப் பார்த்ததும், ''யார் மோகனா? வா.. வா.. மோகன்.. இப்போதுதான் இந்த ஏழையைப் பார்க்க வழி தெரிந்ததா?'' என்றாள் துடுக்காய்.

பதிலுக்கு தன் பற்கள் அத்தனையும் காட்டி சிரித்த மோகன், ''வழி.. எனக்குக் கூட தெரியவில்லை. ஆனால் எனது பெரியப்பா மகள் சரியான அழகி. அழகு ராணி என்றதும் ஆட்டோக்காரன் விழுந்தடித்து என்னை கூட்டி வந்து விட்டான் தெரியுமா?'' என்றான்.

''ஓஹோ! அப்படியா?' என பழிப்பு காட்டிய காஞ்சனை, என் அழகு பட்டம் இருக்கட்டும். அங்கு மிலிட்டரியில் நீ துப்பாக்கி பிடிக்கப் போய்... பெரும் மழை வந்து.. அந்த மழை வெள்ளமாகி.. அந்த வெள்ளத்தில் எதிரி நாட்டுப் போர் வீரர்கள் எல்லாம் அடித்துச் சென்று விட்டதாக

கேள்விப்பட்டேனே உண்மையா?'' என்றாள் சீரியசான முகத்துடன்.

மோகனோ பதிலுக்கு அலட்டாமல் சிரித்தபடி ''பின் இருக்காதா? நான் யார்? மேஜர் ஜெனரல் கர்னல் நார்த் விங் கமாண்டர்... தி.. கிரேட்.. கிரேட்.. மோகன்.. மோகன் அல்லவா?'' எனவும் சிரித்தாள் காஞ்சனை.

''சரியான நெட்டைக் குச்சி! துப்பாக்கி பிடிக்கும் நெட்டைக் குச்சி!'' மறுபடியும் கலகலவென நகைத்தாள் அவள்.

''நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் நெட்டைக் குச்சிதான். சரி இந்த நெட்டைக் குச்சி இல்லாமல் எப்படி கல்யாணத்திற்கு சம்மதித்தாய்? நான் வரும்வரை காத்திருந்து பின் நான் வந்த உடன் உதயம் அத்தானை கட்டுங்கள் தாலியை என்று சொல்லியிருக்கலாம் அல்லவா?''

''சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்குள் நான் கிழவியாக அல்லவா ஆகியிருப்பேன்'' என்ற காஞ்சனை முகத்தை உயர்த்தி ''ஆமாம் அது என்ன உதயம் அத்தான்? யார் அது?'' என்றாள் வேண்டுமென்றே தெரியாதது போல்.

கைகளைத் தட்டினான் மோகன். ''அட.. அட... தொட்டுத் தாலி கட்டியவரை அதற்குள் மறந்து விட்டாயா? உன் அருமைக் கணவர். ஆசைக் கணவர் உதயசந்திரன்.. உதயசந்திரன் அத்தான்..'' என ராகமாய் இழுத்து முடித்தவன், ''அப்படியே உன் பெயரைக் கூட காஞ்சனை என்பதற்குப் பதில் கணை.. கணை.. என்று சுருக்கி விடலாமா என்று பார்க்கிறேன்... என்ன சொல்கிறாய் கணை?'' என்றான்.



அவன் கேட்க, ''அப்படியே செய்... கன்..!'' என்றாள்.

''என்ன சொன்னாய்? கன்.. னா?''

''ம்ம்.. நானும் உன் பெயரை மோகனைச் சுருக்கி கன் ஆக்கி விட்டேன்..'' என சிரித்தாள் அவள்.

''கன் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அதையே இழுத்து 'கண்ணா..' என்று ராகமாய் கூப்பிட்டால் நன்றாய் இருக்குமே?''

''அவ்வளவுதானே... கூப்பிட்டால் போச்சு... கண்ணா... மோகன் கண்ணா.. வா... வந்து இந்த செப்பு சாமான்களை பானை சட்டியெல்லாம் வைத்து விளையாடு!'' என சிறு பிள்ளையை அழைப்பது போல் விளிக்க, கலகலவென இருவரும் சிரித்தார்கள்.

பின் காஞ்சனை அவனை உள்ளே கூட்டிப் போய் மாமியார், நாத்தனார் என எல்லோரையும் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''அத்தான் நிஜமாகவே வீட்டில் இல்லையா?'' என்றான் மோகன்.

''அலுவலகம் சென்றிருக்கிறார். மாலைதான் வருவார்'' என்றாள்.

''ஐயோடா! அதுவரை இருக்க முடியாதே.. கிளம்பியாக வேண்டுமே..'' என்றவன், ''சரி காஞ்சனை... உன் கல்யாண ஆல்பத்தை எடுத்து போட்டோவையாவது காட்டு. அத்தானின் முக தரிசனத்தை பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன்'' என்றான்.

காஞ்சனை சிரிப்புடன் அவனை சோபாவில் உட்கார வைத்து, டிபன் காபி என உபசரித்தாள். பின் தன் பெரிய திருமண ஆல்பத்தை எடுத்துக் காட்டினாள்.

ஆவலாய் ஒவ்வொரு பக்கங்களாய் புரட்டிப் பார்த்தான் மோகன்.

"உதயசந்திரன் அத்தான் ஆள் பர்சனாலிட்டி எல்லாம் சூப்பர்தான்.." என ஆரம்பித்து நிறுத்தியவன், "என்ன ஆள்.. சிரிக்க யோசிக்கிறாரே? ஒருவேளை காஞ்சனை நீ தினம் கிச்சு மூச்சு மூட்டினால்தான் சிரிப்பாரோ?" என்றான்.

'அட கரெக்ட்டாக கண்டு பிடித்து விட்டானே இந்த மோகன்?' என உள்ளுக்குள் வியந்த காஞ்சனை அதைக் கொஞ்சமும் வெளிக் காட்டாமல் "அது வேறொன்றுமில்லை.. மோகன்.. இந்த மிலிட்டரி மச்சான் மோகன்.. மொய் என்ற பெயரில் ஏதாவது பெரிய பரிசுப் பொருள் கொடுத்தால் சிரிக்கலாம்.. இல்லையெனில் சிரிக்காமலே இருந்து விடலாம்..' என நினைத்திருக்கலாம்.." என குறும்பாய் முடித்தாள் காஞ்சனை.

மோகனும் கைகளைக் கட்டிக் கொண்டு எழுந்து நடந்தான்.

"அட.. அதற்கு நீ அடி போடுகிறாயா? பரிசுதானே.. கொடுத்து விடலாம்" என்றவன் தொடர்ந்து "என்னுடைய மிலிட்டரி லெதர் பேக்கில் நிறைய காஞ்சி போன ரொட்டித் துண்டுகளை பத்திரப்படுத்தி கொண்டு வந்திருக்கிறேன்... அதை இப்போதே கொடுத்து விடட்டுமா?" என்றபடி கொண்டு வந்திருந்த பேக்கை குடைய ஆரம்பித்தான்.



"உதைப்பேன்! நன்றாக உதை படுவாய்!" கைகளை ஆட்டி மிரட்டுவது போல் கண்களை உருட்டினாள் காஞ்சனை.

ஆனால் லெதர் பேக்கிலிருந்து மோகன் ஒரு சிறு நகைப் பெட்டியொன்றை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"திறந்து பார்! அசந்து போவாய்!" என்றான்.

காஞ்சனையும் வியந்தவள், "அட.. தங்க நகைப் பரிசா? நிஜமாகவே நான் அசந்து மயங்கித்தான் விழுந்து விடுவேன். நீயே திறந்து காட்டு!" என்றாள்.

படக்கென பெட்டியைத் திறந்து டாலர் வைத்த மெல்லிய தங்கச் செயின் ஒன்றை வெளியிலெடுத்தான் மோகன்.

"நகை.. என் நண்பன் ஒருவன் மூலம் துபாயில் வாங்கியது. சுத்தத் தங்கம். இருபத்தி நாலு காரட்.. நீ கழுத்தில் போட்டால் அந்த மினுமினுப்பிலேயே அத்தான் உன் பக்கம் கிறங்குவார்" என்றான்.

காஞ்சனையும் அதை ஆசையாய் வாங்கி கழுத்தில் வைத்து கண்ணாடியில் அழகு பார்த்தாள்.

"டிசைன் நன்றாக இருக்கிறது. செலக்ஷன் சூப்பர்!" என்றாள்.

மோகன் காலரை தூக்கி விட்டு சிலுப்பிக் கொண்டான். "பின் இருக்காதா? செலக்ட் செய்தது யார்? இந்த மோகனா.. பெரிய கொக்கா...?" என்றான்.

காஞ்சனை சிரித்தாள்.

“சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நீ கொக்குதான்.. நெட்டைக் கொக்கு!”

“இந்த நெட்டை கொக்குதான் உனக்கு விலை உயர்ந்த தங்க நகை பரிசு வாங்கி வந்து கொடுத்திருக்கிறது, புரிகிறதா?”

“புரிகிறது! புரிகிறது!” பெரிதாய் தலையை வளைத்து ஆட்டினாள் காஞ்சனை. “அதற்காக ஆயிரம் பத்தாயிரம் ஒரு லட்சம் ஏன் ஒரு கோடி நன்றிகள்.. நன்றிகள்.. போதுமா? போதுமா?” என்றாள்.

“போதும்! ரொம்பவும் ஐஸ் வைக்காதே. சும்மாவே பயணம் செய்ததில் ஜலதோஷம் பிடித்திருக்கிறது. வேண்டுமானால் ஒன்று செய்யேன்” என்றான்.

“என்ன சொல்லு?”

“உன் திருக் கரங்களால் சுவையான சமையல் செய்து வடை பாயாசத்துடன் ஒரு விருந்து போடு. ஒரு பிடி பிடித்து விட்டு உடனே இடத்தை காலி பண்ணி விடுகிறேன்” என்றான்.

காஞ்சனையும் நகைத்தவள், அப்படியே தங்களது உத்தரவு மன்னரே!” என அபிநயத்தோடு உள்ளே ஓடினாள்.

மோகன் பாயாசப் பிரியன். சாப்பாடு என்றால் உள்ள படியே ஒரு பிடி பிடித்து விடுவான் என்பது அவளுக்குத் தெரியும். அதனாலே மாமியாரிடம் சொல்லி விட்டு உடனடியாய் சமையலில் இறங்கினாள்.



மோகனை டி.வி. பார்க்க வைத்து விட்டு இரண்டு மணி நேரத்தில் பருப்பு, கூட்டு, கிச்சடி, குழம்பு, பாயாசம் என சுவைபட ஒரு விருந்தையே உண்டாக்கி விட்டாள்.

அலுவலகத்திற்கு போன் போட்டு உதயசந்திரனை வரச் சொல்லலாமா என்ற நினைப்பு ஓடியது.

மறுகணமே “அப்படி அவள் கூப்பிட்டால் மட்டும் அவன் என்ன வந்துவிடவா போகிறான்? சரியான சிடுமூஞ்சி.. இதற்காகவா கூப்பிட்டாய்? என அவளை ஏசக்கூட செய்வான்!” என்ற பய நினைப்பில் அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

கலகலப்பான இந்த மோகன் அப்படி ஒரு சுபாவம் கொண்ட உதயசந்திரனை பார்க்காமல் இருப்பதே நல்லது என நினைத்தாள்.

அதனாலே மோகனிடம் உதயசந்திரன் வராததற்கு சாக்கு போக்கு சொல்லிவிட்டு அவனை டைனிங் டேபிளில் உட்கார வைத்தாள். சுடச்சுட விருந்தை பரிமாறினாள். சொன்னபடியே ஒரு பிடி பிடித்தான் மோகன்.

“ஆஹா! என்ன ஒரு சுவை! பிரமாதம்! பிரமாதம்!” அவன் வாயில் இருந்து வார்த்தைகள் பாராட்டுக்களாய் வந்து விழுந்தது.

பின் மோகன் குடும்ப விஷயம் அவனது மிலிட்டரி அனுபவங்கள் பற்றியெல்லாம் விவரித்தான். சிரிக்கச் சிரிக்கப் பேசினான்.

காஞ்சனை உற்சாகமாய் ஆர்வத்தோடு அவன் பேச்சை ரசித்தாள். நேரம் போனதே தெரியவில்லை.

மாலை சரியாய் நான்கு மணிக்கு அவளிடம் விடை பெற்று கிளம்பி விட்டான் மோகன். அதுவரை அவனது கலகலப்பில் மகிழ்ந்தவள் குதூகலிப்புடனே அவனுக்கு விடை கொடுத்தாள்.

அவன் சென்ற சிறிது நேரத்தில் இடித்தபுளி போல் உர்ரென உள்ளே நுழைந்தான் உதயசந்திரன்!



16

உதயசந்திரன் அப்படி தன் மனதை கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல் குரங்காட்டம் ஆடினாலும் காஞ்சனை தன் பங்கிற்கு தினம் ஏதாவது சுவாரஸ்யமாக செய்ய வேண்டும். அவன் கவனத்தை தன் பக்கம் ஈர்க்க வேண்டும் என்ற நினைப்பே மனதில் ஓடியது.

அதனாலே அன்று தங்க ஜரிகை பார்டர் சேலை ஒன்று பெட்டிக்குள் இருந்து எடுத்தாள். அழகு பார்த்தாள். உடம்போடு ஒட்டி அவளை நளினமாகக் காட்டும் அந்தச் சேலையை அப்படியே கட்டிக் கொண்டு கண்ணாடி முன் போய் நின்றாள்.

ஊரில் அதைக் கட்டிய போது பக்கத்து வீட்டு தோழி ஒருத்தி அவளிடம், "சேலை பிரமாதம். இந்தச் சேலையில் உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?" என புகழ்ந்து தள்ளியது அவள் காதுகளில் எதிரொலித்தது.



அதைப் போலவே உதயசந்திரனும் அவளை அந்தச் சேலையில் பார்த்து வியக்கிறானா ஏதாவது செய்வானா என்ற எதிர்பார்ப்பு அவளுள் ஓடியது.

அதை அறிந்து கொள்ள விரும்புபவள் போல் அந்தச் சேலையுடன் போய் அவன் முன் நின்றாள். சேரில் உட்கார்ந்து அலுவலக பைல்களை பார்த்துக் கொண்டிருந்தவன் அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

அவளை கண்களைச் சுருக்கி ஒரு பார்வை பார்த்துவிட்டு அவன் பாட்டுக்கு குனியப் போனான்.

அவளுக்கு ஆர்வத்தை அடக்க முடியவில்லை. "இந்தச் சேலை எப்படி இருக்கிறது? நான் எப்படி இருக்கிறேன்" என்றாள் ஆர்வம் பொங்க.

அவன் மறுபடி நிமிர்ந்து கண்களைச் சுருக்கினான்.

"புதுச் சேலையா?" என்றான்.

அவள் பெரிதாய் புன்னகைத்து விழி அகல தலையாட்டினாள்.

அவன் வீசிய அடுத்த வார்த்தை அவளை குமட்டலுக்கு தள்ளியது.

"சகிக்கவில்லை!" என்றான்.

பின் அவள் முகம் போன போக்கைப் பார்த்து, "சேலையில் என்ன இருக்கிறது? இதுபோன்று சேலை கட்டாமல் வெறுமே வந்து நீ நின்றால்தான் அழகாய் இருப்பாய்" என்றான்.

அவனது பேச்சு அவளுக்கு குமட்டவே செய்தது. அவளது அழகை ரசிக்க வேண்டாம் குதர்க்கமாக பேசாமலாவது இருக்கலாமே!

அவள் முகம் கூம்பி அகலப் போனாள்.

"நில்" என்றான் அவன்.

திரும்பிப் பார்த்தாள்.

"என்ன பெண்கள் நீங்கள்! எத்தனை காலம் ஆனாலும் இந்த சேலை கட்டி அழகு பார்ப்பதை நிறுத்த மாட்டீர்கள்.. ப்ளடி லேடிஸ்!"

அலட்சியமாய் சொல்லி ஏளனமாய் முணுமுணுத்தான் அவன்.

இவன் ரசனை இவ்வளவுதான்! என சலிப்புடன் அவள் சென்று விட்டாள்.

இன்னொரு நாள் சமையல் ரெசிபிக்கள் நிறைய படித்து அவற்றிலிருந்து புதுப்புது வகை உணவுகள் அவனுக்கு பிடித்த நூடுல்ஸ் வகைகள் என வித விதமாய் தயார் செய்து அவனுக்கு பரிமாறினாள்.

தட்டில் அவள் ஆர்வமாய் வைத்ததை எந்தவித உணர்ச்சியுமில்லாமல் சாப்பிட்டு ஏப்பமிட்டான் அவன்.

ஒரு வார்த்தை உணவு ருசி பற்றியோ அவள் செய்தது பற்றியோ பேசவில்லை.

அவள் வாய்விட்டு கேட்டு விட்டாள்.



"எப்படி இருக்கிறது.. உங்களுக்கு பிடிக்கும் என ஆர்வமாய் செய்தேன்!"

அவளது கேள்விக்கு திரும்பி கண்களை சுருக்கிப் பார்த்தான்.

"எதற்காக திடீரென இப்படிச் செய்தாய்?" என்றான்.

அவள் பற்கள் தெரிய தலையை ஆட்டினாள்.

"சும்மாதான்.. உங்களுக்குப் பிடிக்கும் என செய்தேன்" என்றாள்.

"சும்மாவாக செய்தாயா.. அல்லது என்னை தாஜா.. செய்து ஏதும் காரியம் சாதிக்கவா?" என்றான் குதர்க்கமாய்.

"ஐயோ! அப்படியெல்லாம் இல்லை. உங்களுக்கு நீங்கள் விருப்பப்பட்டதை செய்து எனது அன்பை உணர்த்தத்தான்."

அவள் குரல் உயரச் சொல்லியும் அவன் அதை ஏற்றுக் கொள்ளாதவன் போல் மறுப்பாய் தலையசைத்தான்.

"நான் நம்ப மாட்டேன். கல்யாண இரவு அன்றே கண்களில் எல்லாம் பெரிதாய் மை தீட்டி என்னை மயக்கப் பார்த்தவளாயிற்றே? அதுபோல இதுவும் எதற்காகவோ நீ போடும் நாடகமாக கூட இருக்கலாம். எப்படி நம்புவது?"

அவன் சொன்னதும் இம்முறை அவளுக்கு எரிச்சல் பன்மடங்காகியது.

பொறுக்க முடியாதவள் போல் அவன் பக்கம் போய் கோபமாய் நின்றாள்.

"எதற்காக இப்படி குதர்க்கமாகவே பேசுகிறீர்கள்? உங்களுக்கு நல்ல விதமாகவே ஒரு விஷயத்தை எடுக்கத் தெரியாதா?"

"ம்ம் தெரியுமே!" என்றான் அவன் அலட்சியமாய்.

இம்முறை அவளுக்கு மற்றொரு சந்தேகம் எழுந்தது. அதையும் கேட்டுவிட்டாள்.

"உண்மையைச் சொல்லுங்கள். உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா இல்லையா? ஒருவேளை என்னைப் பிடிக்காமல் போய்த்தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்களா?"

அவள் கோபமாய் மூச்சு வாங்க கேட்டதற்கு மறுபடியும் ஏளனமாய் சிரித்து, "முட்டாள்! முட்டாள்!" என்றான்.

அவள் விடவில்லை.

"சரி.. நான் முட்டாளாகவே இருந்து விடுகிறேன். என் கேள்விக்கு சரியாய் பதில் சொல்லுங்கள். என்னைப் பிடித்திருக்கிறதா இல்லையா?"

அவன் இம்முறை சட்டென அமைதியாகி முகம் வெட்டினான்.

"பிடிக்காமலா.. உன்னுடன் குடும்பம் நடத்துகிறேன். அதிலும் நீ ஊர் மெச்சும் பெரிய அழகி ஆயிற்றே! உன்னைப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியுமா?"

அவள் மறுபடியும் சலித்துதான் போனாள்.



இதற்கு இந்தக் கேள்விக்கு கூட இப்படி குதர்க்கமான பதில்தானா? இவனைத் திருத்தவே முடியாதா?

அவள் திகைத்து யோசிக்க சட்டென தனது விரல்களால் மெல்ல சொட்டென அவள் தலையில் தட்டினான். "இதுதான் எனது சுபாவம். புரிந்து கொள். புரிந்து நடந்து கொள்!" என்றான் குரல் உயர்த்தியபடி.



## 17

அந்த வாரம் என்னவோ உதயசந்திரன் வழக்கத்திற்கு மாறாக பரபரப்பில் இருந்தான். தினமும் சீக்கிரமாக வேலைக்குச் செல்வதும் மாலை நேரம் கழித்து வருவதுமாக இருந்தான்.

அப்படியே வந்தாலும் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தலையில் கை வைத்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

இரண்டு மூன்று நாள் கவனித்தவள் மறுநாள் என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆவலில் அவனிடமே கேட்டாள். "மரமண்டை! உனக்கு எங்கே புரியப் போகிறது?" என்றான் ஏளனமாய்.

வந்த கோப உணர்வுகளை எல்லாம் புரிந்து கொண்டு "சொன்னால் புரிந்து கொள்கிறேன்.." என்றாள்.

அவன் கால் மடித்து உட்கார்ந்தபடி அவளைப் பார்த்தவன், "சொன்னால் புரிந்து கொள்வாயா? எங்கே முதலில் என் அலுவலகத்தை நான் பார்க்கும் வேலையைப் பற்றிச் சொல்!" என்றான்.

அவள் விழிக்கவே செய்தாள். அவன் அரசாங்கத்தின் வருமானத்துறை பிரிவு ஒன்றில் இடைநிலை ஆய்வாளர் என்று மட்டுமே அவளுக்குத் தெரியும். அதற்குமேல் அவன் அவனது வேலைகளைச் சொன்னதும் இல்லை. அவள் கேட்டாலும் அதை எல்லாம் தெரிந்து என்ன செய்யப் போகிறாய்? என்று எதிர்கேள்விதான் கேட்பான். கேட்டிருக்கிறான்.

அதனால் அவள் அவளுக்குத் தெரிந்த அந்த அவனது உத்தியோக பொறுப்பு பற்றி மற்றும் சொல்லி நிறுத்தினாள். ''பார்த்தாயா? உனக்கு அதற்கு மேல் ஒன்றுமே தெரியவில்லை! சரியான மக்கு!'' என்றான்.

அவன் என்ன குட்டு குட்டினாலும் கோபப்படக் கூடாது. பொறுமையையும் நிதானத்தையும் கடைபிடிக்க வேண்டும் என உறுதியெடுத்தவள் போல் சலனமில் லாமல் சிரித்தாள்.

''நான் மக்குதான். நீங்களே விபரமாகச் சொல்லுங்கள். புரிந்து கொள்கிறேன்..'' என்றாள்.

உதயசந்திரன் நிமிர்ந்து தலையை சிலுப்பிக் கொண்டு விளக்க ஆரம்பித்தான். ''நன்றாகத் தெரிந்து கொள்... நான் வருமான வரித் துறையின் இடைநிலை அதிகாரி. எனக்கு கீழ் ஆறு பேர் குமாஸ்தா வேலை பார்க்கிறார்கள். எனக்கு பொறுப்புகள் அதிகம். இப்போது என் அலுவலகத்தில் புரமோஷன் செய்யப்படும் பதவி உயர்வு பற்றிய பேச்சு அடிபடுகிறது. நானோ இல்லை என்னைப் போன்ற இன்னொரு இடைநிலை அதிகாரியோ தலைமைப்



பொறுப்பிற்கு தலைமை அதிகாரியாக உயர்வு பெற இருக்கிறோம்.''

அவன் நிறுத்தவும் அவள் வெறும் ''ம்ம்..'' என்றாள்.

''என்ன ம்ம்...? நான் என்ன கதையா சொல்கிறேன்?'' என்றான் கோபமாக.

''இல்லை.. மேலே சொல்லுங்கள். நான் முழுவதுமாய் புரிந்து கொள்கிறேன்..''

''ஓஹோ! மகாராணி உத்தரவு போடுகிறார்கள். நான் எல்லாவற்றையும் சொல்ல வேண்டுமோ? வேண்டு மானால் ஸ்கூல் பையன் மாதிரி கையைக் கட்டிக் கொண்டு வேண்டுமானால் சொல்லட்டுமா?'' என்றான் மறுபடியும் இடக்காக.

''ஐயோ கோபப்படாதீர்கள்... நான் நிஜமாகவே தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்..'' என்றாள் மீண்டும் குரல் கம்ம.

''உன் ஆசையை குப்பையில் கொண்டு போடு'' என்றான்.

அவள் பேசாமல் அப்படியே நிற்கவும் ''எரிச்சலைக் கிளப்பாதே... இங்கிருந்து போ!'' என விரட்டினான்.

அவள் பயந்துதான் ஓடினாள். பின் கல்யாணி அம்மாள் மூலமாய் விஷயம் முழுவதும் புரிந்து கொண்டாள்.

அவளது அலுவலகத்தில் இப்போது புரமோஷன் போடும் வேலை நடந்து வருகிறதாம். அதனால் தனக்கு

கிடைக்க வேண்டிய புரமோஷன் கிடைக்குமா.. கிடைக்காதா.. என்ற தவிப்பில் அவன் இருக்கிறானாம்!

அடே.. இதுதானே விஷயம்? இதை அவளிடம் சொல்வதற்கென்ன? எதற்காக இப்படி எரிந்து விழ வேண்டும்? என நோகத்தான் செய்தாள்.

அடுத்து வந்த வாரத்தில் அந்த புரமோஷன் அவனுக்கு இல்லாமல் மற்றொரு சக ஸ்டாப்புக்கு போய்விட்டது என்பது தெரிந்தது. மிகவும் கோபமாய் இரண்டு மூன்று நாள் கண் சிவக்க உதயசந்திரன் நடமாடினான்.

அவளையும் விடவில்லை. அதையே சாக்கு வைத்து ஏசினான். "பார், நீ புரமோஷன் பற்றி அன்று கேட்டு வாய் வைத்தாய். உன் பார்வை பட்டதும் அது புஸ்ஸென்று ஆகி எனக்கு கிடைக்காமல் போய்விட்டது.." என்றான் குறை கூறுவது போல்.

அவள் இதற்கு என்ன சொல்லுவாள்? இருந்தாலும் சமாளித்து, "உங்கள் திறமைக்கு கண்டிப்பாக கிடைக்கும். கவலைப்படாதீர்கள்" என்றாள் ஆறுதல் கூறுவது போல்.

ஆனால் அதற்கும், "இன்னொரு வாய்ப்பு மீண்டும் அலுவலகத்தில் வந்தாலும் அப்போதும் நீ வந்து குறுக்கிட்டு முட்டாள்தனமாய் கேள்விகளைக் கேட்டு கிடைக்க விடாமல் செய்து விடுவாய்தானே?" என குத்தினான்.

ஐயோடா... சாமி! இவனிடம் பேசினாலே வலியப்போய் வாங்கிக் கட்டிக் கொள்வது போல் ஆகி விடுகிறதே! என பயந்து ஒடத்தான் செய்தாள்.



ஒருவாரம் அப்படி எதையோ பறி கொடுத்தவன் போல் உதயசந்திரன் உர்ரென அலைந்தவன் பத்து நாட்களுக்குப் பிறகு இயல்புக்கு வந்தான்.

அன்று இரவு தள்ளிப் படுத்திருந்தவளை தன் பக்கம் இழுத்தான்.

புரியாமல் விழிகளை படபடத்தவளிடம், "ஒரு வாரம் என் மூடு சரியில்லை. அதனால்தான் கோபமாக இருந்தேன்" என்றான்.

"எனக்குப் புரிகிறது.." என்றாள் அவளும் மெல்லிய குரலில்.

"அதனால்தான் அன்று உன்னை அப்படியெல்லாம் ஏசினேன். எனக்கு புரமோஷன் கிடைக்காததற்கு நீ என்ன செய்வாய்?" என்றான் திரும்பவும்.

அட.. இப்படியெல்லாம் கூட இவன் யோசிப்பானா? அன்று அப்படி நடந்து கொண்டதற்காக தவறு என்று உணர்ந்து விட்டானா? அதற்காக வருத்தம் கொள்கிறானோ? என அவள் ஓரளவு மகிழ்ச்சி தோன்ற சிந்திக்கும்போதே வேதாளம் மரம் ஏறிய கதையாய் அடுத்த வார்த்தைகளை வீசினான்.

"ஒன்றை நீ நன்றாகத் தெரிந்து கொள் காஞ்சனை. அப்படி நான் கோபமாக இருக்கும் சமயங்களில் எல்லாம் நீ என் எதிரில்... என் மூஞ்சியில் கூட விழிக்காமல் நடமாடு. இல்லையெனில் உன்னைப் பார்த்தாலே எனக்கு அடக்க முடியாத அளவுக்கு கோபம் பொங்கி விடும். பின் நான் ரௌத்திரமாகி விடுவேன்!" எனப் பேசி நிறுத்தியவன்,

"புரிகிறதா" எனவும் கேட்டு முடிக்க.. வழி தெரியாதவளாய் திகைத்து விழித்தாள் அவள்.

சட்டென வழக்கம் போல் அப்படி விழித்தவளின் தலையில் விரல்களால் செல்லத் தட்டு ஒன்று தட்டி, "இப்படி எதற்கெடுத்தாலும் கண்களை உருட்டி விழிக்கக் கூடாது. தலையை ஆட்டி சரி என்று சொல்ல வேண்டும். இதையும் புரிந்து கொள்!" என்ற போது அவள் அவன் சொன்னபடியே தலையை ஆட்டி 'சரி' என்றாள்.

"அது! அப்படியொரு பயம் என்னிடம் உனக்கு எப்போதும் இருக்க வேண்டும். இருக்க வைப்பேன்!" என்றபடி அவளை முழுவதுமாய் தன் பக்கம் வேகமாய் இழுத்து அணைத்தான்.

அதற்குமேல் அவனைப் பார்க்கப் பிடிக்காதவள் போல் இறுக கண்களை மூடிக் கொண்டாள் அவள்.



## 18

**கா**ஞ்சனை இரண்டு மூன்று நாள் தீவிர யோசனைக்குப் பின் தெளிவாக ஒரு விஷயத்தை தெரிந்து கொண்டாள்.

அது உதயசந்திரனின் புன்னகை! சதா சிடுமூஞ்சி போல் கடுகடுவென இருப்பவன் ரங்கு மாமா இருந்த மூன்று நாட்களும் சிரித்தானே! அதுவும் கட்டுப்படுத்த முடியாமல் குபுக்கென புன்னகை மன்னன் போல் சிரித்தானே!



அப்படி அந்த மூன்று நாட்களும் அவன் அடிக்கடி புன்னகைத்ததால், அவளிடம் கூட வழக்கம் போல் கடுமையாகவோ விரட்டலோ இல்லாமல் இயல்பாக பேசினானே!

ஆக.. அவனை இயல்பான மனிதனாய் வழிக்குக் கொண்டு வருவது எப்படி? என்று அவளுக்குப் புரிந்து விட்டது.

மறுநாள் முதலே அதற்கான வேலையிலும் இறங்கி விட்டாள்.

அவள் உதயசந்திரன் எப்போதும் இலக்கியப் புத்தகங்களைப் படிக்கிறேன் பேர்வழி என ஒரு குவியலாய் புத்தகங்களை தன் முன்னால் பரப்பிக் கொண்டு இரவு ரொம்ப நேரம் உட்கார்ந்திருப்பான்.

அன்று இரவும் அவன் அப்படியே உட்கார பக்கத்தில் போய் உட்கார்ந்தாள் காஞ்சனை.

ஆவலாய் அந்த புத்தகங்களை நோக்கியவள் கையிலெடுத்து ஒவ்வொன்றாய் பார்த்து படிக்க ஆரம்பித்து விட்டாள்.

உதயசந்திரன் அவளது செய்கையை நிமிர்ந்து திகைப்புடன் பார்த்துவிட்டு, கையில் விரித்து வைத்திருந்த புத்தகத்தில் கவிழ்ந்து கொண்டான்.

"எனக்கும் இலக்கியம் சொல்லிக் கொடுங்களேன். நானும் தெரிந்து கொள்கிறேன்!" என்றாள் குரல் உயர்த்தி.

அவன் நிமிர்ந்து ஆழமான பார்வை ஒன்றால் அவளை ஊடுருவி விட்டு, "இலக்கியம் சொல்லித் தெரிவதில்லை. படித்தால்தான் புரியும்" என்றான்.

"அப்படியா? அப்படியானால் நான் இப்போது முதலே புத்தகங்களை படிக்க ஆரம்பித்து விடுகிறேன். இலக்கியம் பற்றி தெரிந்து கொள்கிறேன்" என்றாள்.

பின் சொன்னபடியே இரண்டு மூன்று புத்தகங்களை எடுத்துக் கொண்டு போனாள். அவளுக்கு அவ்வளவு புரியாவிட்டாலும் அக்கறையாய் படித்துப் பார்த்தாள்.

பின் உதயசந்திரனிடம் அது பற்றி பேசி விளக்கம் கேட்க.. அவள் வியப்படையும் வகையில் அவன் சுவாரஸ்யமாக கண்களில் ஆர்வம் மின்ன பேச ஆரம்பித்து விட்டான்.

அவன் இலக்கியம் பற்றி சமூகப் புரட்சி செய்த இலக்கிய நாவல்கள் பற்றியெல்லாம் விவரிக்க... தன்னுடன் இப்படி அவன் பேசும் அதிசயத்தை நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அன்று மட்டும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தான் அவன். காஞ்சனை கண் கொட்டாது அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சைக்காலஜி படிப்பவர்கள் சொல்லும் 'லிஸன் டூ த ஆப்லோஸிட்' என மற்றவர்கள் சொல்வதை முதலில் கேளுங்கள் என்பது எவ்வளவு முக்கியமான விஷயம். ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொள்ள எவ்வளவு அவசியம் என்றும் புரிந்தது.



அவன் பேசுவதையெல்லாம் ஆர்வம் பொங்க கேட்டவள் அவன் பேசி முடித்ததும் முகத்தில் வியப்பு பொங்க பார்த்தாள்.

தொடர்ந்து அவள் அவனையே பார்க்க உதயசந்திரன் அதில் வெட்கப்பட்டவன் போல், "என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்றான்.

"இவ்வளவு விஷயம் உங்களுக்குத் தெரியுமா? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்றாள் கெஞ்சலாய்.

அவள் சொன்னதைக் கேட்ட அவன் முகத்திலும் மகிழ்ச்சியான பரவசம் ஒன்று ஓடியது.

அவள் நினைத்தது சரிதான். உதயசந்திரனுக்கு எப்போதும் தான் மற்றவர்களை விட ரொம்பத் திறமை யானவன். நிறைய சாதனைகளைச் செய்தவன் என்றெல் லாம் அளவுக்கு மீறிய கற்பனை இருந்தது. சொல்லப் போனால் அந்த எண்ணமே அவன் சந்திக்கும் வரையும் துச்சமாக மதிக்கும் பாவனையை அவனுக்குத் தருவித் திருந்தது.

அதனாலே அவனை லேசாய் புகழ்ந்தால் கூட தலை கிறுகிறுக்கும் அளவுக்கு சிலிர்த்தான் அவன்.

மேலும் அப்படி தினம் அவனுடன் இலக்கியம் பற்றிப் பேச பேச அவளுக்கு எல்லாமே இலகுவாய்த் தோன்றியது. கணவனோடு வெகு சகஜமாய் பேசிக் கொள்ள முடிந்தது.

வெறும் ஒற்றை வார்த்தைகளிலே பதில் சொல்லி பழக்கப்பட்டவன் இப்போது அவளுக்காக கூடுதலாக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுவதைக் கவனித்தாள்.

தினம் காலையில் எழுந்ததும் அவள் மீது அபரீத அன்பு வைத்திருப்பதாகவும், தன் உயிரே அவன்தான் என்பது போலவும் எண்ணங்களை மனதில் ஏற்படுத்திக் கொண்டு நடமாட ஆரம்பித்தான்.

வேறு எந்த சிந்தனையுமில்லாமல் அதே எண்ணத் துடன் அவள் அலைவதால் சாதாரணமாக அவன் அருகில் போய் அணைத்தபடி அமர்வதும், அவன் கைகளோடு தன் கையைக் கோர்த்துக் கொள்வதும் அவளுக்கு இயல்பாகவே போயிற்று.

சில சமயம் காலையில் ஆர்வமாய் பேப்பர் படிக்கும் அவன் கழுத்தில் மாலையாய் கைகளைக் கோர்த்து அவனது தோளில் பெரும் அமைதி கிடைப்பதுபோல் நிம்மதியாய் சாய்ந்தும் கொள்வாள்.

உதயசந்திரன் அதுபோன்ற சமயங்களில் திரும்பி அவளை ஆழமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்புவான். அது அவன் தன் உள்ளுக்குள் ஒரு ரசிப்பு புன்னகை புரிவது போல் அவளுக்குத் தோன்றும்.

அவளும் இதுபோல் சில விஷயங்களை உள்ளுக்குள் ரசிக்கவே செய்தாள். அவனுடன் பேசும் போதும் சரி, அவனுக்கு பணிவிடை செய்யும்போதும் சரி, அவனுக்கு நெருக்கமாய் இடித்துக் கொள்ளாத குறையாய் நிற்பாள். அவள் கை விரல்களும் அவனைத் தொட்டுக் கொண்டோ அவனது முதுகை அணைத்து வருடியபடியோதான் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.



தனது ஒவ்வொரு செயலிலும் பேச்சிலும் அவன் மீது தான் அபரிதமான அன்பு வைத்திருப்பதை உணர்த்த துடித்தாள். அவன் அலுவலகம் சென்ற பின்னும் கூட ஏதாவது சாக்கு வைத்து அவனுடன் போனில் பேசினாள்.

தினம் அலுவலகம் முடிந்து வருபவனை முகம் மலர வரவேற்று, வயப்படுத்த ஏதாவது செய்ய ஆரம்பித்தாள். அவனுக்கு மிகவும் பிடித்த உணவு பதார்த்தங்களை டிபனாய் செய்து அவனை திக்குமுக்காட வைத்தாள்.

மாலதிதான் ரகசியமாய் அவள் செயல்களை எல்லாம் கவனித்து, ''என்ன அண்ணி, கவனிப்பு, ரோமன்ஸ் எல்லாம் கொஞ்சம் ஓவராகவே இருக்கிறதே?'' என்க முகம் சிவந்து பதில் சொல்லாமல் ஓடினாள்.

''ம்ம்... நடக்கட்டும்! நடக்கட்டும்! என்ன சினிமா ஜோடிகள் போல் நீங்களும் அண்ணனும் வீட்டினுள் ஓடியாடி கட்டிப் பிடித்து டூயட் ஆடாமல் இருந்தால் சரிதான்!'' என கிண்டலும் அடித்தாள்.

உதயா ஒருமுறை காஞ்சனை உதயசந்திரனின் தோள் மீது கைவைத்தபடி இருப்பதைப் பார்த்தவள், தலை யிலடித்தபடி, 'விவஸ்தை கெட்ட' என அவள் காதுபட முணுமுணுத்து அகன்றாள்.

அதை அப்படியே புகாராய் கல்யாணி அம்மாளிடம் சென்று சொல்ல.. கல்யாணி அம்மாள் இம்முறை உதயாவைத்தான் அடக்கினாள். ''நீ விடு! இது அவர்கள் விஷயம். நாம் தலையிடக் கூடாது!' என புத்திமதியும் சொன்னாள்.

ஆனால் உள்ளுக்குள் அவளுக்கு எல்லாமே புரியத்தான் செய்தது. தனது மகன் உதயசந்திரனின் குணத்தை அறியாதவளா என்ன? மருமகளாவது வந்து மாற்றினால் சரி என நினைத்துக் கொண்டாள்.

அதனாலே உதயாவின் தொடர் பஞ்சரிப்பால் காஞ்சனை மீது சிறிது கடுமை காட்டியவள் அடியோடு மாறி காஞ்சனை மேல் பரிவும் இரக்கமும் கொண்டாள் அவள்.



19

**மா**லதிதான் ஒருநாள் திடீரென கேட்டாள். "என்ன மன்னி, உங்களுக்கும் அண்ணனுக்கும் என்னதான் பிரச்சினை?" என்றாள்.

இவள் சின்னப் பெண். இவளிடம் என்ன சொல்வது என்ற நினைப்பில் "அதெல்லாம் ஒன்றுமில்லையே" என்றாள் கைகளை விரித்து.

மாலதி விடவில்லை. அகலக் கருவிழிகளின் குண்டு கண்மணிகளை உருட்டியவாறு, "இல்லை.. என்னமோ இருக்கிறது.. சும்மாச் சொல்லுங்கள். அண்ணனின் தலையில் இரண்டு தட்டு தட்டி உங்களிடம் ஒழுங்காக... ஏன் உங்களுக்கு அடிமையாகவே நடந்து கொள்ளச் சொல்கிறேன்" என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டு காஞ்சனை கடகடவென சிரித்து விட்டாள்.



"ஐயோ! சிரிக்காதீர்கள் மன்னி. நிஜமாகவே என்னால் செய்ய முடியும். எப்படித் தெரியுமா?"

"எப்படி?"

"அண்ணனிடம் உங்களைப் பற்றி நன்கு எடுத்துச் சொல்கிறேன். தினம் உங்கள் புகழ் பாடுகிறேன். அண்ணன் அதைக் கேட்டால் கொஞ்சம் கொஞ்சமாய் மாறி விடுவார். உங்களைப் புரிந்து கொள்வார்."

மாலதி சொல்லச் சொல்ல காஞ்சனைக்குத் திக்கென்றது இருந்தது. சின்னப் பெண் தன் விஷயம் எதுவும் தெரியாது என்று நினைத்தால்... நம் பிரச்சினையை நன்கு புரிந்து வைத்திருக்கிறாளே! என பிரமித்தாள்.

மாலதியோ விடாமல் நச்சரித்தாள்.

"ஐயோ! சொல்லுங்கள் மன்னி! உங்களுக்குள் பிரச்சினைதானே?"

இனியும் சொல்லாமல் இருந்தால் நன்றாக இருக்காது என்று எண்ணிய காஞ்சனை, "ஆமாம்... சிறிய பிரச்சினை. உன் அண்ணன் என்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறார். என் உணர்வுகளை உணர்ந்து கொள்ளாமல் நடமாடுகிறார்.." என்றாள்.

அவள் சொல்லி முடித்ததும் கெக்க பிக்கவென ஒரு சிரிப்பு சிரித்து ஓய்ந்தாள் மாலதி.

"என்ன மாலதி சிரிக்கிறாய்?"

"நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே மன்னி.. அண்ணன் அப்படித்தான். சரியான காட்டான் என்று.."

"அதற்காக அப்படியே விட்டுவிடுவதா?"

"வேறு வழி?" என திரும்பவும் சிரிக்கப் போனவள் காஞ்சனையின் சீரியசான முகத்தைப் பார்த்து அதை நிறுத்தினாள்.

"உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது மன்னி. அண்ணன் கலகல டைப் மட்டுமல்ல. சதா சிடுமூஞ்சி. அவருடன் சாதாரணமாக ஒரு விஷயத்தை பேசுவது கூட முடியாதுதான். கோபப்பட்டிருவார். டக்கென சண்டை போட்டு விடுவார்.." என நிறுத்தியவள் புருவங்களை உயர்த்தி யோசனைக்கு போவது போல் போனாள்.

பின் நிமிர்ந்தாள்.

"மன்னி, எனக்கொரு யோசனை தோன்றுகிறது."

"என்ன மாலதி?"

"இந்த விஷயத்தை நாம் அம்மாவிடம் சொல்லிப் பார்த்தால் என்ன? பொதுவாகவே அண்ணனுக்கு அம்மாவிடத்தில் ஒரு பயம் உண்டு. ஒருவேளை அம்மா இரண்டு அதட்டு அதட்டினால் கேட்டு விடலாம்தானே?"

மாலதி சொல்ல.. இதற்கு என்ன பதில் சொல்வது என குழம்பத்தான் செய்தாள் காஞ்சனை. நாலு சுவருக்குள் நடக்க வேண்டிய கணவன் மனைவி பிரச்சினைகளை புகார் போல் எல்லோரிடமும் சொல்லி கொட்டடித்து அதற்காக..



அவர்கள் உதயசந்திரனைக் கூப்பிட்டு அட்வைஸ் செய்வது... இதுவெல்லாம் பார்க்க நன்றாகவா இருக்கும்?

யோசித்தவள் உடனே மாலதியிடம் மறுத்தாள்.

"எதற்கு மன்னி பயப்படுகிறீர்கள்?"

"இல்லை மாலதி உன் அண்ணன், அம்மா மூலமாக நான் புகார் சொல்வதாக என் மேல் கோபப்பட்டிருவார். பின் பிரச்சினை பெரிதாகி விடும்."

"அப்படியெல்லாம் ஆகாது. ஆகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.."

பெரிய மனுஷி போல் கைகளைக் கட்டிக் கொண்டு தலையாட்டினாள் மாலதி.

அவள் சொன்ன விதத்தைப் பார்த்து காஞ்சனைக்கும் ஒரு நப்பாசை ஓடியது.

ஒருவேளை மாலதி சொல்வது போல் உதயசந்திரன் தாயாரின் பேச்சுக்கு மதிப்பு கொடுத்து சிந்தித்தால்... மனம் மாறி விட்டால்...? அது நல்லதுதானே? என நினைப்பு ஓடியது.

அதனாலே அரை மனதுடன் தலையாட்டினாள்.

அது போதாதா மாலதிக்கு. குஷியடைந்தவளாய், "இரண்டு நாளில் பாருங்கள்.. அம்மா மூலம் எல்லா வற்றையும் சரி பண்ணிக் காட்டுகிறேன்!" சூளுரைக்காத குறையாக சொல்லிவிட்டு அகன்றாள்.

சொன்ன மாதிரியே மாலதி அன்று இரவே தாய் கல்யாணி அம்மாளிடம் விஷயத்தைச் சொல்லியிருக்க வேண்டும்.

மறுநாள் உதயசந்திரன் அலுவலகம் சென்றிருக்கும் சமயமாய்ப் பார்த்து சமையலறையில் இருந்த அவளைத் தேடி வந்து விட்டாள் அவள்.

''என்ன காஞ்சனை மாலதி சொல்வதெல்லாம் உண்மையா?'' என்றாள் நம்ப முடியாதவள் போல்.

காஞ்சனை மெல்ல தலையாட்டினாள்.

''இத்தனை நாள் ஆயிற்று. என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே? நான் நீங்கள் எந்த பிரச்சனையு மில்லாமல் சந்தோஷமாய் குடும்பம் நடத்துவதாய் அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன்..'' கல்யாணி அம்மாள் சொன்ன தொனி ஏதோ அவர்களது வாழ்க்கையில் பெரும் பூகம்பம் வீசுவது போலவும் அதில் அவள் தத்தளிப்பது போலவும் தொனிக்க அவசரமாய் மறுத்தாள் அவள்.

''ஐயோ! அப்படியெல்லாம் ஒன்றும் பெரிய விஷய மல்ல. சிறிய விஷயம்தான்! சின்னப் பிரச்சினைதான்!'' என்றாள்.

கல்யாணி அம்மாள் விடவில்லை.

''அதுவெல்லாம் இருக்கட்டும். முதலில் நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல் காஞ்சனை.''



''கேளுங்கள் அம்மா.''

''உதயசந்திரன் உன்னிடம் அன்பாக நடந்து கொள்கிறானா இல்லையா?''

இதற்கு என்ன பதில் சொல்வது? என ஒரு கணம் திகைத்த காஞ்சனை, ''அன்பாகத்தான் நடந்து கொள் கிறார்கள். ஆனால்..'' என இழுத்தாள்.

''ஆனால்.. என்ன? சும்மா தைரியமாகச் சொல் காஞ்சனை..''

''வேறு ஒன்றுமில்லை.. என்னிடம் ரொம்பவும் கோபப் படுகிறார். என் மீது அவர் வைத்திருக்கும் அன்பை கொஞ்சமும் வெளிக்காட்டுவதில்லை.''

''அதாவது சிடுமூஞ்சியாய் இருக்கிறான் அப்படித் தானே?''

'ஆமாம்' என்பது போல் தலையாட்டினாள் அவள்.

''வரட்டும் அவன்... இன்று பார்த்துக் கொள்கிறேன்'' என கல்யாணி அம்மாள் அன்றே இதுபற்றி உதயசந்திரனிடம் பேசத் தயாராக காஞ்சனையை பயம் பற்றிக் கொண்டது.

ஆனால் உதயசந்திரன் வந்தபோது நடந்ததே வேறு. கல்யாணி அம்மாள் பேசக் கூப்பிட்டதுமே 'என்ன விஷயம்?' எனத்தான் எரிச்சலாய்க் கேட்டான்.

''ஒரு முக்கியமான விஷயம்'' என்று கல்யாணி அம்மாள் இழுத்தபோது மேலும் சுருக்கினான்.

"அப்படி என்ன முக்கியமான விஷயம் இருக்கப் போகிறது? பிறகு சொல்!" என விறுவிறுவென உள்ளே போய்விட்டான்.

அதற்குப் பின் மேலும் இரண்டு முறையும் கல்யாணி அம்மாள் இப்படியே பேச அழைக்க எரிந்து விழாத குறையாய் அவர்களை விரட்டினான்.

அவனது கோபத்தையும் எரிச்சலையும் பார்த்த கல்யாணி அம்மாளும் சப்தநாடி ஒடுங்கி விட்டாள். நமக்கு எதுக்கு வம்பு? இவன் சொன்னால் மட்டும் கேட்கவா போகிறான்? என கடைசி வரையில் காஞ்சனை விஷயத்தை பேசாமலே இருந்து விட்டாள்.

திகைத்துதான் போனாள் காஞ்சனை.



20

உத்யசந்திரன் அன்று அலுவலகத்திற்கு வந்தவன் வேலைகளில் கவனம் செலுத்த முடியாமல் பெரும் யோசனைகளில் தான் ஆழ்ந்திருந்தான்.

காஞ்சனையின் நடவடிக்கைகள் அவனை ரொம்பவும் சிந்திக்க வைத்திருந்தது.

அதிலும் சமீப காலமாய் அவள் பழங்கால பதிவிரதைகள், பத்தினிப் பெண் போல் அவனையே சுற்றி வருவதும், ஓடோடி பணிவிடைகள் செய்வதும், அவன்தான் தன் உயிர் என பிதற்றிக் கொண்டு அலைவதும் அவனை மனதளவில் பாதிக்கத்தான் செய்திருந்தது.



இந்த கலியுகத்தில் இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? கணவனே கதி என அலைவாளா? என்றெல்லாம் யோசனை ஓடியது.

இதற்கு தன்னால் மட்டும் பதில் காண முடியாது. தனது பகுத்தறிவாள இலக்கியவாதி நண்பர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான் உதயசந்திரன்.

அதே யோசனையில் அன்று மாலை தன் நண்பர்கள் கூட்டத்தை சந்தித்தான்.

விஷயத்தை விளக்கியபோது எல்லோரும் அதிரும்படி சிரித்தார்கள். "எல்லாம் பெண்கள் தங்கள் மாய வலையில் வீழ்த்தி தங்கள் கட்டுப்பாட்டில் ஆண்களைக் கொண்டு வரப் போகும் சாகசம்.." என்றனர் ஒரே குரலில்.

அதாவது புதியதாய் வந்த மனைவிமார்கள் இப்படித்தான் ஆரம்பத்தில் விழுந்து விழுந்து கவனிப்பார்களாம். மாப்பிள்ளை பயல் அதில் கிறங்கி.. என்னடா நம் மீது இவ்வளவு அன்பு செலுத்துகிறாள்? இப்படி பாசத்தை கொட்டுகிறாள்? என நினைத்து அப்படியே உருகுவானாம். பின் அந்த உருக்கத்தில் காணாததைக் கண்டது போல் அவளைப் பார்க்க ஆரம்பித்து விடுவானாம். அந்தப் பார்வை அப்படியே மயக்கமாகி... அப்படியே மெல்ல மெல்ல அவர்கள் விரிக்கும் வலையில் மாப்பிள்ளைகள் விழுந்து விடுவார்களாம்.

பின் என்ன... மனைவிமார்கள் இதுதான் சமயம் என கொம்பேறி மூக்கனாய் அவன் தலையில் ஏறி உட்கார்ந்து

கொண்டு உச்சி தலைமுடியை பிடித்துக் கொண்டு அவர்களை ஆட்டுவிக்க ஆரம்பித்து விடுவார்களாம். பின் அவர்கள் சொல்வதைக் கேட்டு பூம்பூம் மாடாய் தலையாட்டி வேலை செய்வதே ஆண்களின் வேலையாய் போய்விடுமாம். இதில் இருந்து கடைசிவரை மீள முடியாமல் அடிமைகளாகவே ஆண்கள் ஆகிவிடுவர். நீ அப்படியொரு இக்கட்டில் மாட்டி விடாதே... உதயசந்திரன்'' என பெரிதாய் எல்லோரும் லெக்சர் அடித்து அவனுக்கு அட்வைஸ் மழை பொழிந்தார்கள்.

சும்மாவே உதயசந்திரன் இடித்த புளி. அவர்கள் பேச்சை, சொன்னதையெல்லாம் கேட்டதும் உருண்டு திரண்ட புளியாகி விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்று முதல் வீட்டிற்கு வந்தவன் மேலும் இறுக்கமாய்த் தான் நடமாடினான். காஞ்சனையிடம் கூடுதலாக கடுமையைக் காட்டினான்.

அந்தக் கடுமை, 'ஏய்', 'நீ', 'போ' என ஒற்றை வார்த்தைகளாய் வெளிவந்து காஞ்சனையை சுட்டெரிக்கச் செய்தது.

புரியாமல் அவள் அவனையே விழிகளை விரித்து பார்க்க, 'நடிக்காதே, உன் நாடகமெல்லாம் தெரியும்'' என்றான் வாய்விட்டு.

''நாடகமா? நடிப்பா? என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் காஞ்சனை பதட்டத்துடன்.



''பின்.. என்ன? இந்தக் கவனிப்பு ஓடோடி வந்து பணிவிடை செய்வது போன்ற பாசாங்கு எல்லாம் நடிப்புத்தானே?''

''நடிப்பா.. யார் சொன்னது?''

அவள் மறுபடியும் திடுக்கிட்டுக் கேட்டாள். அவன் பெரிதாய் சிரித்து பயங்காட்டினான்.

''வேறு யார்? நான்தான் சொல்கிறேன். எல்லாம் நீ போடும் நடிப்பு. என்னை மயக்க நீ தினம் தினம் போடும் வேஷம்..''என்றான் குரல் உயர.

''ஐயோ! என்ன இது அபாண்டம்? நான் உங்களுக்கு பணிவிடைகள் செய்வது வேஷமா?''

''வேஷம்தான்! அதில் சந்தேகமே இல்லை. அப்படி கவனிப்பது போல் கவனித்து எங்களை மயக்கி உங்கள் வலையில் வீழ்த்த வேண்டியது... பின் அப்படியே முந்தானையில் முடிநது கொண்டு வாழ்நாள் முழுவதும் ஆமாம் சாமி.. போடும் இளிச்சவாயனாக்கி.. அடிமைப் படுத்துவது... இதுதானே.. உங்களது.. உனது திட்டம்..? ஆனால் பார்.. உன் விஷயத்தில் அது ஒருபோதும் நடக்காது.. நடக்க விடமாட்டேன்!''

மறுபடியும் சொல்லி எகத்தாளமாய் சிரித்தான் அவன்.

அவள் திகைத்துதான் போனாள்.

என்ன சொல்கிறான் இவுன்? நாம் காட்டும் அன்பும் பாசமும் இவனை மயக்க நாம் போடும் வேஷம் என்றா?

அப்படியானால் இவனால் அந்த அன்பை பாசத்தை உணர முடியவில்லை... முழுவதுமாய் ஏற்று புரிந்து கொள்ள முடியவில்லை. எதற்காகவோ என்று அல்லவா சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறான்? இவனை என்ன செய்வது?

கணவன் மனைவி என்பது ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டி குடும்பம் நடத்துவது தானே? அதைவிட்டு விட்டு இவனை சதி திட்டம் தீட்டுவது போல் மயக்கவோ அடிமைப்படுத்தவோ இல்லையே! இதை ஏன் இவன் புரந்து கொள்ள மறுக்கிறான்.

இவ்வளவு விபரீதமாய் எல்லாம் முளையில் சிந்தனையில் உதித்து நினைக்கத் தெரிந்தவனுக்கு இந்த உண்மை ஏன் உரைக்காமல் இருக்கிறது?

''பதில் சொல்! நான் சொல்வது எல்லாம் உண்மை தானே?''

சாதனை செய்து எதையோ கண்டுபிடித்து விட்டதைப் போல் உறுமலாய் கர்ஜித்துக் கேட்டான் அவன்.

''நீங்கள் நினைப்பது போல் நான் நடிக்கவும் இல்லை. வேஷம் போடவும் இல்லை. ஆனால்...'' அவளை வேண்டுமென்றே நிறுத்தி அவளைப் பார்த்தான்.

''ம்ம்.. சொல்லு.''

மறுபடியும் உறுமினான்.

''அப்படி நீங்கள் நடிப்பது.. வேஷம் போடுவது போல் நான் இருப்பதாய் நினைத்தால் என் வாழ்நாள் முழுவதும் அந்த நடிப்பை நடிப்பேன்... உங்களிடம் அன்பு செலுத்தி



ஓடோடி பணிவிடைகள் செய்யும் பாசமான வேஷத்தைப் போடுவேன், போதுமா?''

மூச்சு வாங்க சொல்லிவிட்டு விறுவிறுவென அகன்றாள் அவள்.

அதற்கும் முகத்தில் எவ்வித சலனமுமில்லாமல் இடித்த புளியாய் நின்று கொண்டிருந்தான் உதயசந்திரன்!



## 21

**கா**ஞ்சனைக்கு உதயசந்திரன் விஷயத்தில் இன்னும் சில குழப்பங்களும் நீடித்தது. சில சமயங்களில் அவனுக்கும் மனம் என்று உண்டு. அதில் இரக்கம் என்பது சுரக்கும் எனப் போல் நடந்து கொள்வான்.

''என்ன உட்கார்ந்திருக்கிறாயா.. தலை வலியா?'' என கரிசனமாய் கேட்பவன், அடுத்த வார்த்தையாக, 'முட்டாள் பெண்ணே! இப்படி கால் மடக்கி நெடுநேரம் உட்கார்ந்திருப்பதற்கு படுக்கையில் சென்று கொஞ்சம் தூக்கம் போட்டால் எல்லாம் சரியாகப் போய் விடும் அல்லவா? போ!'' என்பான்.

இன்னொரு நாள் இப்படித்தான் அவளை எதிரில் உட்கார வைத்து, ''என்னிடம் நிறைய எதிர்பார்க்கிறாய்? நான் உன்னிடம் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் கற்பனை செய்து வைத்திருக்கிறாய்.. அப்படித்தானே?'' என்றான்.

அவள் பேசாது இருக்கவும், ''எனக்குத் தெரியும். அந்தக் கால சினிமாக் கதாநாயகிகள் போல வேலைக்குச் சென்ற அத்தான் வருவார். ஆசை முத்தம் தருவார். கொஞ்சிக் குலாவுவார்.. என்றெல்லாம் நீ எதிர்பார்க்கிறாய்தானே?'' என பெரிய ரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டதுபோல் அவன் கேட்டபோது அவள் சிரித்தே விட்டாள்.

''அட சிரிக்காமல் பதில் சொல்லு..'' என்றான் அவன்.

''இல்லை.. இல்லை..'' என்றாள் அவள் அழுத்தந் திருத்தமாக.

''பின் வேறு என்னவாம்?''

''அக்கறை'' என்றாள் ஒரே வார்த்தையில்.

''அக்கறையா?''

அவன் தனது நீளமான புருவங்களை உயர்த்த விளக்கினாள் அவள்.

''இப்படி உட்கார வைத்து என்னிடம் பேசுகிறீர்களே... என்ன ஏதுவென்று அக்கறையாய் கேட்கிறீர்களே... இதுதான் எனக்கு வேண்டும். இதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்'' என்றாள் தலையாட்டி.

அதற்கு மேல் அவன் பேச மாட்டான். சலித்தவன் போல் எழுந்து கொள்வான். ''யூ லேடீஸ்.. உங்களை திருத்த முடியாது..'' என முணுமுணுத்துச் செல்வான்.

ஆனால் காஞ்சனை விடமாட்டாள். தனது அன்பு, பாசத்தை தொடர்வாள். அவன் வீட்டிலிருக்கும் ஒவ்வொரு



நொடியும் பம்பரமாய்ச் சுழன்று, அவனுக்கு பணிவிடைகளைச் செய்வாள். அவன் முகம் சுளித்தாலும் ஆர்வம் பொங்க புன்னகை மூலமாகவே அவனைப் பார்த்தாள். பேசினாள். தனது உயிரே அவன்தான் போல நடமாடினாள்.

சில நேரம் அவள் சிரிக்கச் சிரிக்க பேசுவது கூட அவனுக்கு எரிச்சலாகி விடும். 'லூசு மாதிரி என் முன் நின்று உளறாதே! போ!' என சைகை செய்து விரட்டவே செய்வான்.

அப்போதும் இன்முகம் மாறாமலே அகல்வாள் அவள். மனம் கனத்து நெஞ்சம் தடுமாறும் போதும் தந்தை சொன்ன வார்த்தைகளே அவள் காதுகளில் ஒலிக்கும். 'உனக்கு அவர் மீது அன்பு, பிரியம் இருக்கிறது அல்லவா காஞ்சனை? பிறகு எதற்கு பயப்படுகிறாய்? என்ன ஆனாலும் சரி.. என தொடர்ந்து போராடி உனது அன்பை பாசத்தை அவருக்குப் புரிய வை.. பின் உன் வாழ்வில் இனிய மாற்றங்கள் நிகழும்!'' என்றல்லவா சொல்லியிருந்தார்?

அதனாலே காஞ்சனை தளராமல் நெஞ்சு நிமிர அடுத்த முயற்சியில் இறங்குவாள். அவளது இந்த முயற்சிகளை அரசல் புரசலாய் கவனித்த மாலதிதான் ''என்ன அண்ணி இது.. எத்தனை நாள்?'' என்றாள் குறும்பாய்.

அவள் புரியாமல் விழிக்க, ''பின் வீட்டில் சைடு டிராக்காய் உங்களுக்கும் அண்ணனுக்கும் ஒரு பாசப் பொழிவான டிவி சீரியலே ஓடிக் கொண்டிருக்கிறது போல...'' என விளக்கியபோது, ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..'' என்று விலகி ஓடினாள் காஞ்சனை.

அடிக்கடி உதயாதான் கடும் பார்வை பார்த்து தணலாய் அவளை எரித்தாள். காஞ்சனைக்குப் புரிந்தது. சின்னப் பெண். அவளுக்கும் ஏக்கம் இருக்கும்தானே? வீராப்பாய் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டால் போதுமா? மனதில் துளிர்க்கும் ஆசைகளையும் அடக்க வேண்டுமே?

உதயா பற்றி யாருமே இந்த வீட்டில் யோசிக்க மறுக்கிறார்களே... என நினைத்தவள் தான் ஏதாவது செய்ய முடியுமா? என தீவிரமாய் சிந்திக்கவும் ஆரம்பித்தாள்.

அவளுக்கு உடனடியாய் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மளிகைக் கடைதான் ஞாபகத்திற்கு வந்தது. காஞ்சனை மளிகைச் சாமான்கள் வாங்க அடிக்கடி அந்த மளிகைக் கடைக்குச் செல்வது வழக்கம். அந்த மளிகைக் கடை நடத்தும் சண்முகம் என்பவர் கிட்டத்தட்ட உதயாவின் ஒத்த வயதுக்காரர்.

உதயாவைப் போலவே கவனித்து நடத்த சொந்த பந்தங்கள் இல்லாததால் பிரம்மச்சாரியாய் ஆகிவிட்டவர். தானே சுயமா உழைத்து ஒரு சிறு பெட்டிக் கடையில் இருந்து நல்ல வருமானம் வரும் மளிகைக் கடை வரை பொருளாதாரத்தில் உயர்ந்தவர்.

காஞ்சனைக்கு அந்த சண்முகம் பற்றி கேள்விப்பட்டதில் இருந்து அவர் மீது தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. சில கடைக்காரர்கள் போல் வம்பளந்து பேசாமல் அளவோடு பேசி தொழிலை கண்ணும் கருத்துமாய் அவர் இருப்பதைப் பார்த்து அவள் வியந்திருக்கிறாள்.



அப்படி காஞ்சனை அவர் கடைக்கு சாமான்கள் வாங்கச் செல்லும் போது ஓரிரு முறை அவர் மெல்ல உதயா பற்றி அவள் கல்யாணம் செய்யாமல் இருப்பது பற்றியெல்லாம் கேட்டபோது, காஞ்சனையும் ஏதோ யோசனையில் விட்டேற்றியாகத்தான் பதிலைச் சொல்லியிருந்தாள்.

ஆனால் இப்போது அதை தீவிரமாக யோசித்து பார்த்தபோது, காஞ்சனை ஒரு விஷயத்தை ஆச்சரிய மாகவே உணர்ந்தாள்.

அடக்க ஒடுக்கமாய் வரும் வாடிக்கையாளர்களுக்கு பெரும் மரியாதை கொடுக்கும் அந்த மளிகைக் கடை சண்முகம் எதற்கு உதயா பற்றி அக்கறையாய் விசாரிக்க வேண்டும்? என்ன காரணமாக இருக்கக் கூடும்? என்று காஞ்சனை தேடியபோது விடையும் கிடைத்தது.

வேறென்ன? சண்முகம் இந்த உதயாவை அடிக்கடி பார்த்து... தன்னைப் போலவே கல்யாணம் செய்யாமல் இருக்கிறாள் என அக்கறையாய் நினைத்திருக்கக் கூடும்.. ஈடுபாடு கொண்டிருக்கக் கூடும்!

தன்னைப் போலவே இந்த வீட்டில் ஒரு ஜீவன் இருக்கிறதே.. என்கிற பரிவு அக்கறை.. அது போதுமே!

காஞ்சனை மனதிற்குள் வெகுவாய் யோசித்தவள் திடமாய் ஒரு முடிவும் எடுத்தாள். அதன்படி மளிகைச் சாமான்கள் வாங்கும் பொறுப்பை மறுநாள் முதல் உதயாவே செய்யும்படி அவள் தலையில் கட்டினாள்.

உதயா எரிச்சலுடன் அதற்கு முறைத்து மறுக்க, "இல்லை உதயா, உனக்குத்தான் சாமான்களின் விலை,

தரமான நல்ல சரக்கு என்றெல்லாம் பார்த்து வாங்கத் தெரியும்.. நான் குமுட்டை... என்று உன் அண்ணன் என்னை ஏசுகிறார்..'' என வலிய ஒரு பொய்யை அவிழ்த்து விட்டதும் குஷியாகி தலையாட்டினாள் அவள்.

கல்யாணி அம்மாள் அப்படி உதயா திடீரென மளிகைச் சாமான்கள் வாங்கச் செல்வது கண்டு திகைக்க... காஞ்சனை, அம்மாவிடம் விஷயத்தை மறைக்கக் கூடாது என்ற நினைப்போடு எல்லாவற்றையும் சொன்னாள். மளிகைக் கடை சண்முகம் அடிக்கடி உதயா பற்றி அக்கறையாய் விசாரிப்பதை விளக்கினாள்.

கல்யாணி அம்மாளும் முழு நம்பிக்கையில்லாதவளாய், "அப்படியாவது ஏதாவது நல்லது நடந்தால் சரிதான்!'' என விட்டு விட்டாள்.

விஷயமும் காஞ்சனை நினைத்தது போலவே நடக்க ஆரம்பித்தது. முதலில் வழக்கம் போல் எரிச்சலும் வெறுப்புமாய் சிடுமூஞ்சித்தனத்துடன் மளிகைகள் வாங்கச் சென்ற உதயா நாளாக நாளாக புன்னகை வீசியபடி குஷியாய் குதி போட்டுக் கொண்டு வாங்கச் செல்வதை காஞ்சனை கவனித்தாள்.

கூடவே தினம் வேலைக்காக அலுவலகம் செல்லும் போதும் வரும் போதும் மெனக்கென நின்று சண்முகத்திடம் உதயா ஏதாவது பேசிச் செல்வதையும் கவனித்தாள்.

துடுக்குக் கில்லாடியான மாலதியும் இதை எப்படியோ அரசல் புரசலாய் மோப்பம் பிடித்து விஷயத்தை ஒருநாள்



டமாரம் போடாத குறையா வெளிச்சத்திற்கு கொண்டு வந்துவிட்டாள்.

"நம் வீட்டின் பரபரப்பான கிசுகிசு செய்தி உதயமான அக்காவிற்கும், மளிகைக் கடை அண்ணாச்சிக்கும் மன்மதனின் அபார வீச்சு. காதல் ரசம் சொட்டும் சந்திப்புகள்... டொட்ட டொய்ங்ங்..!'' என ஒய்யார குரலில் எல்லோர் முன்னும் சொல்லி அதிர வைத்தாள்.

எல்லோரும் ஷாக்கடிக்காத அதிர்ச்சியாய் திரும்பி உதயாவைப் பார்க்க அவள் தன் வாழ்க்கையிலே முதன் முறையாய் முகம் சிவக்க வெட்கப்பட்டாள். நாணிக் கோணி ஓடினாள்.

அந்த உதயாவின் செய்கையை கண்டு மொத்த குடும்பமும் மகிழ்ச்சியில் துள்ளத்தான் செய்தது. கல்யாணி அம்மாளுக்கும் ஒரே சந்தோஷம். சொல்ல முடியாத அளவுக்கு குதூகலம்!

அப்படியே ஓடிப் போய் காஞ்சனையை கட்டிக் கொண்டாள். "எல்லாம் உன் புத்திசாலித்தனம்தான். சமர்த்துப் பெண்ணாய் யோசித்து அவ்வளவையும் செய்திருக்கிறாயே! எங்கே உதயா இப்படியே வாழ்நாள் முழுவதும் இருந்து விடுவாளோ.. என பயந்து கொண்டிருந்தேன். என் வயிற்றில் பால் வார்த்தாயம்மா!'' என நெகிழ்வாய்ச் சொன்னபோது உச்சி குளிரத்தான் செய்தாள்.

அடுத்து வந்த நாட்களில் அந்த சண்முகத்துடன் சம்பந்தம் பேசப்பட்டு ஒரே மாதத்தில் முகூர்த்த தேதி

முடிவாகி உதயாவின் கல்யாணமும் இனிதே நடந்தேறியது.

சிடுமூஞ்சாய் சிடுசிடுவென இருந்த உதயாவும் சுபாவம் மாறி கலகலவென நகைக்கவும் ஆரம்பித்து விட்டாள். மாலதிதான் சுற்றிச் சுற்றி வந்து "அடடா.. அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள்.. போல் என்ன ஒரு நாணம்.. என்ன ஒரு வெட்கம்... சண்முகம் அத்தானின் கை லேசாய் பட்டு உரசினாலே... இப்படி ஒரு குங்குமப் பூ சிலிர்ப்பு சிலிர்க்கிறாயே?" என கிண்டலடித்துக் கொண்டிருந்தாள்.

கல்யாணம் முடிந்த மறு வாரம் உதயா புகுந்த வீடு புறப்பட்டாள். குடும்பம் முழுவதும் ஒரே சந்தோஷம். குதூகலம். விஷயம் தெரிந்தோ தெரியாமலோ... எல்லோரும் 'மருமகள் வந்த ராசி.. உதயாவிற்கு திருமணம் நடந்து விட்டது' என காஞ்சனையை மெச்சினர். புகழாரம் சூட்டினர்.

உதயசந்திரனுக்கு நீண்ட நாளாய் இழுத்துக் கொண்டிருந்த உதயாவின் கல்யாண விஷயம் சட்டென இனிதாய் நடந்ததில் சந்தோஷமே! அதுவும் காஞ்சனைதான் எல்லாவற்றுக்கும் காரணம் என கல்யாணி அம்மாள் மூலம் தெரிந்து பெரும் ஆச்சரியம் காட்டினான்.

அந்த சந்தோஷத்தில் 'வா..' என அவளை பைக்கில் முதல் முறையாய் வெளியே அழைத்துச் சென்றான். ஒருநாள் சினிமா.. ஒரு நாள் கோவில்.. இன்னொருநாள் பார்க்.. என மூன்று முறை வெளியே அழைத்துச் சென்றான்.



அவன் காட்டிய அந்த சின்ன அன்பிலும் ரொம்பவும் இனிமையாய் உணர்ந்தாள் காஞ்சனை.

அன்று பார்க்கில் அவனுடன் உட்கார்ந்திருந்தபோது வேண்டுமென்றே அவன் திடமான நெஞ்சினில் சாய்ந்திருந்தாள். எங்கோ பராக்கு பார்த்தவாறு அவனும் தோளோடு அவளை அணைத்துப் பிடித்திருந்தான்.

இப்படி நெருக்கமாய் இருந்தும் ஏதாவது பேசுவான் என ஆசையாய் எதிர்பார்த்த அவளுக்கு.. அவன் வாயில் இருந்து முத்து உதிராத ஏமாற்றமே!

இடித்த புளி போல் கல்லாய் இருந்தான்.

கடலை விற்றுக் கொண்டிருந்தவனை கூப்பிட்டு ஒரு கொத்து கடலை வாங்கி அவன் கையில் வைத்துக் கொண்டு அவன் பாட்டுக்கு சாப்பிட ஆரம்பித்து விட்டான். அவள் பிடுங்கித்தான் தனக்கும் இரண்டொரு கடலைகளை எடுத்து வாயில் போட வேண்டியதாயிற்று.

'சே! என்ன மனிதன் இவன்? இவன் சுபாவமே இப்படித்தானோ?' என வெறுத்துப் போனாள் அவள்.

மேலும் இப்படியே ஒவ்வொரு நாட்களும் தொடர நரகமாய் உணர்ந்தாள் அவள்.

அவள் என்ன அன்பு காட்டினாலும் எப்படியெல்லாம் பணிவிடை செய்து புன்னகையை பாசத்தைக் காட்டினாலும், அவன் மாறவில்லை. அதே இடித்தபுளிதான்!

இப்படிப்பட்டவனுடன் தொடர்ந்து வாழ்வதில் என்ன பயன்? என்ன பிரயோஜனம்? என்கிற நினைப்பே தினம் தினம் எழுந்து அவளை இம்சிக்க ஆரம்பித்து விட்டது.

வெகுவாய் சிந்தித்து ஒரு முடிவிற்கும் வந்தாள் காஞ்சனை.



22

காஞ்சனை அன்று முடிவெடுத்தவள் மடமடவென யோசித்து ஒரு பிளானும் செய்து விட்டாள்.

இனியும் காட்டானாய் இடித்தபுளி போல் இருக்கும் இவனுடன் இயந்திரம் போல் குடும்பம் நடத்துவது எவ்வித பிரயோஜன முமில்லை.

கணவன் மனைவி புரியாமலே, ஒருவருக்கொருவர் 'அண்டர்ஸ்டாண்டிங்' இல்லாமலே குடும்பம் நடத்துவது மற்றவர்களுக்கு சகஜமாய் இருக்கலாம். பழகிப் போயிருக்கலாம்.

ஆனால் அவளால் முடியாது!

அவளுக்கு கணவன் மனைவி புரிதல் வேண்டும். அவளுக்கென்று எதிர்பார்ப்புகள் இருக்கிறது. ஆசை இருக்கிறது. இப்படி இப்படி இருக்க வேண்டும். இந்த மாதிரி அன்பு செலுத்தி சந்தோஷமாய் தினம் தினம் குதூகலத்துடன் வாழ வேண்டும் என்ற கனவெல்லாம் இருக்கிறது.



அது உதயசந்திரன் விஷயத்தில் அமையவில்லை என்பதற்காக... அதை அப்படியே விட்டுவிட முடியாது. அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

அவளைப் பொறுத்தவரை... எதுவும் கிடைக்க வில்லையா? அதனால் என்ன? என்று சும்மா இருக்காமல் அது கிடைக்கும் வரை போராட வேண்டும். அதுதான் அவளது பாலிசி!

அதற்காக வாழ்நாள் முழுவதும் போராடவும், காத்திருக்கவும் அவள் தயார்தான்!

நமக்கு இந்த ஜென்மத்தில் இதுதான்! இது தான் நம் தலைவிதி! என ஏற்றுக் கொள்ளும் டைப் நிச்சயமாய் அவள் இல்லை!

என்ன ஆனாலும் சரி.. உதயசந்திரனை மாற்றிவிட வேண்டும். தான் விரும்பும்படி அவனை அன்புக் கணவனாய் ஆசைக் கணவனாய் ஆக்கிவிட வேண்டும் என்பதே அவளது குறிக்கோள்!

அந்த குறிக்கோளை அடைய துணிந்து சில முயற்சி களை செய்ய வேண்டும். துணிந்து சில தியாகங்களை செய்ய வேண்டும். அப்போதுதான் இறுதியில் வெற்றி பெற முடியும் என நினைத்தாள்.

எல்லாவற்றுக்கும் முதல் படியாய் கொஞ்ச நாட்கள்... ஏன் கொஞ்ச மாதங்கள் கூட கண்டிப்பாய் உதயசந்திரனை விட்டு பிரிந்திருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

அந்தப் பிரிவு... அவனை அவள் பற்றி யோசிக்க வைக்கலாம்.

இதுவரை எத்தனையோ முறை சொல்லியும் புரியாதது சொல்லாமலே அவன் மூளைக்குள் பளிச்சிடலாம்.

அவன் திருந்தலாம். அவள் விரும்பும்படி மாறலாம். எல்லாம் ஒரே நம்பிக்கைதான்!

தீவிரமாய் யோசித்து முடிவெடுத்து ஒரு பிளானும் செய்தாள் காஞ்சனை. அதன்படி ஒரு மாதமோ இரண்டு மாதமோ பிறந்தகத்தில் போய் உட்கார்ந்து விடுவது என தீர்மானித்தாள்.

ஆனால் உதயசந்திரன் ஒன்றும் அவள் கேட்டவுடன் ''அம்மா வீட்டுக்கா? தாராளமாய் போய் வா..'' என அனுப்புகிற டைப் இல்லை. முன்பே அவன் கூடுதலாய் இருபது நாட்கள் இருக்கக் கேட்டபோது பெரும் சண்டை போட்டவன்.

அதனால் அவளை லேசில் விட மாட்டான். அதனால் அவனை விட வைக்க காஞ்சனை ஒரு திட்டம் வகுத்தாள்.

அதன்படி இரண்டு நாள் கழித்து வேண்டுமென்றே இரவு இலக்கிய புத்தகங்களை விரித்துக் கொண்டு பெரிய சிந்தனையாளன் போல் உட்கார்ந்தவனிடம் வம்புக்கு போனாள்.

அவளது ஜல் ஜல் சலங்கை சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தவன், எதிரில் கால் மடித்து உட்கார்ந்தாள்.



என்ன? என்று பார்வையாலே கேட்டவனிடம் பேசாமல் அவனைப் பார்த்தபடியே இருந்தாள்.

''உங்களிடம் பேச வேண்டும்'' என அவள் சொல்வாள் என நினைத்து ''உன்னிடம் பேச எனக்கு இப்போது நேரமில்லை..'' என்றான். குரலை உயர்த்தி பிடித்திருந்த புத்தகத்தில் தன் கண்களை பதித்தவாறு.

''உங்களிடம் நான் பேச வரவில்லை..'' என்றாள் அவளும் வெடுக்கென.

''பின் என்ன?''

அவன் திரும்பவும் கண்களை விலக்கி அவளைப் பார்த்தான்.

''உங்களுடன் சண்டை போட வந்திருக்கிறேன்' என்றாள்.

அவன் புருவம் உயர்ந்தது. கையிலிருந்த புத்தகத்தை கீழே வைத்து விட்டான். அவளை உறுத்துப் பார்த்தான்.

''என்ன சொன்னாய்? சண்டை போடவா?''

''ம்ம்..'' என செவ்விதழ்களை அழுத்தமாய் கடித்துக் கொண்டு சொன்னவள், ''நான் எதற்கு என்று சொன்னால் உங்களுக்குப் பெரும் ஆச்சரியமாய் இருக்கும்'' என்றாள் புதிர் போல்.

அவன் முகம் குழப்பமாய் மாறியது.

''என்ன? சொல்ல வந்ததைச் சொல்லு!'' என்றான.

''நான் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டேன்'' என்றாள் அவள் மறுபடியும் புதிர் போடுபவளாய்.

அவன் முகம் கொஞ்சம் எரிச்சலானது.

''என்ன கண்டு பிடித்து விட்டாய்?''

''உங்கள் மனதில் உள்ள விஷயங்களை, உண்மை களை?''

''உண்மைகளா? என்ன சொல்கிறாய்?''

''ம்ம்.. நீங்கள்... நீங்கள் உண்மையில் நடிக்கிறீர்கள்... என்னிடம் நன்றாக நடிக்கிறீர்கள்!'' என்றாள்.

''நடிக்கிறேனா? என்ன உளறல் இது?'' அவன் முகம் சற்று கோபத்திற்குப் போனது.

''ம்ம்... ம்ம்'' என மறுபடியும் தலையை வேகமாய் அசைத்து ஆட்டியவள், ''எனக்குத் தெரியும். நீங்கள் என் மீது அளவு கடந்த ஆசை, பிரியம் வைத்திருக்கிறீர்கள். அன்பு வைத்திருக்கிறீர்கள். இருந்தும்.. இருந்தும் எதையும் வெளிக்காட்டாமல் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லாதது போல் நன்றாக நடிக்கிறீர்கள்.. சரிதானா?'' என்றாள் பிரயாசையான குரலில்.

அவன் இம்முறை கடகடவென சிரித்து விட்டான். ''என்ன பேத்தல் இது? எந்த மடையன் அப்படிச் சொன்னான்?'' என்றான் குரல் உயர்த்தி.

அவள் மீண்டும் தலையாட்டினாள்.



''யாரும் சொல்லவில்லை. ஆனால் எனக்குத் தெரியும். நீங்கள்.. நீங்கள்.. என் மீது அன்பு வைத்திருக்கிறீர்கள். அளவு கடந்த ஆசை வைத்திருக்கிறீர்கள். உங்களால் என்னைப் பிரிந்து ஒருநாள் கூட இருக்க முடியாது..''

இம்முறையும் அவனால் அடக்க முடியவில்லை. விழுந்து விழுந்து சிரித்தான். அவன் அப்படிச் சிரிப்பதைப் பார்த்தவளுக்கு இவன் இப்படிச் சிரிக்க மாட்டானா.. என்று முன்பு ஏங்கியதும் ஞாபகத்திற்கு வந்தது.

ஆனால் இப்போது இவன் இப்படிச் சிரிப்பதற்கான காரணத்தை உணர்ந்தபோது பெரும் கிலியே பயமாய் அவள் வயிற்றைப் புரட்டியது. தன் மீது அளவு கடந்த அன்பு இருக்கிறதென்று சொன்னதற்கே இந்தச் சிரிப்பு சிரிக்கிறானே? அப்படியானால்..?

அவன் 'லூசு.. சரியான லூசு.. நீ!' என சிரிப்பை நிறுத்தி விளித்துக் கொண்டிருப்பது கண்டு அவள் உணர்வுக்கு வந்தாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்தி தனது நோக்கம் ஒன்றையே நினைத்தாள்.

''என்னைப் பிரிந்து உங்களால் ஒரு நாள் கூட இருக்க முடியாது..'' என்றாள் மறுபடியும்.

அவன் புருவம் உயர்த்தி மறுபடியும் சிரித்து தலையாட்டியவன், ''ஒருநாள் என்ன? ஒரு வருஷம் கூட இருப்பேன்'' என்றான் விட்டேற்றியாய்.

என்ன ஒரு வருஷமா? என்ன சொல்கிறான் இவன்? என உள்ளுக்குள் பயந்தாலும் அதை வெளிக்காட்டாமல், ''ச்சு. இதை நான் நம்ப மாட்டேன். உங்களால் நான் இல்லாமல்

என்னைப் பிரிந்து எல்லாம் இருக்க முடியாது. அது கொஞ்சமும் நடக்காத காரியம்..'' என குரலில் அழுத்தம் கொடுத்து அவள் முடிக்க அவனுள் சினம் எகிறியது.

''என்ன உளறுகிறாய்? அதையும் பார்த்து விடுவோமா?'' என்றான்.

''நான் ரெடி. ஆனால் நீங்கள்தான் உண்மையை மறைக்கிறீர்கள். என் மீது ஆசையை வைத்துக் கொண்டு இல்லாததுபோல் நடிக்கிறீர்கள். உங்களால் என்னைப் பிரிந்து நான் இல்லாமல் வாழ்வது முடியவே முடியாத ஒன்று..''

அவள் திரும்பவும் உறுதியான குரலில் அப்படிச் சொன்னது அவனுள் பயங்கர எரிச்சலைக் கிளப்பியிருக்க வேண்டும்.

உட்கார்ந்திருந்தவன் டக்கென எழுந்து விட்டான். ''என்ன.. என்னடி? நீ இல்லாவிட்டால் என்னால் இருக்க முடியாது என்கிற ஆணவத் திமிரா?'' என்றவன் அதே கோபக் குரலில், ''அதையும் பார்த்து விடுவோம். நாளையே நீ பெட்டியைத் தூக்கிக் கொண்டு உன் வீட்டுக்குக் கிளம்பு. எத்தனை மாதம் வேண்டுமானாலும் உன் வீட்டுத் தரையை தேய்த்துக் கொண்டு நீ அங்கு உட்கார்ந்து கொள். நீயில்லாமல் இங்கு ராஜா மாதிரி நான் வாழுவேன். வாழ்ந்து காட்டுகிறேன். அதையும் உன் முட்டைக் கண்களை திறந்து கொண்டு நன்றாகப் பார்த்து ரசி!'' ஏறக்குறைய கத்திவிட்டு அகன்று விட்டான் உதயசந்திரன்.



அவள் வருந்துவதற்குப் பதில் ஆனந்தமே அடைந்தாள். தனது திட்டம் இப்படி 'போட்டு வாங்கி' தன்னை ஊருக்கு அனுப்ப அவனை சம்மதிக்க வைக்க, தான் போட்ட பிளான் வெற்றி பெற்றது கண்டு மகிழ்ச்சியே கொண்டாள்.

மறுநாளே பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஊருக்கு கிளம்பி விட்டாள் காஞ்சனை.



23

உதயசந்திரன் அதை சற்றும் எதிர்பார்க்க வில்லைதான்!

காஞ்சனை மறுநாளே விருட்டென கிளம்பிப் போய்விட்டாள். எல்லோரிடமும் டாட்டா காண்பித்து ஆட்டோ பிடித்து பெரிய சூட்கேஸை தனியாளாய் தூக்கிக் கொண்டு அவள் போவதைப் பார்த்து அவனால் அதிராமல் இருக்க முடியவில்லை.

ஏதோ சின்னப் பெண் தான் ஏசினால் கொஞ்ச நேரம் கண்ணைக் கசக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். பின் சரியாகிவிடும் என நினைத்தவனுக்கு அவள் வீராப்பாய் கிளம்பியது அதிசயமே!

மாலதி கல்யாணி அம்மாளிடம் எல்லாம் வீட்டைத் தேடுவதாகவும், பார்த்துவிட்டு ஒரு பத்து நாளில் வந்து விடுவதாகவும் சொன்னாள்.

ஆனால் அவனிடம் மட்டும், ''சரியாக இரண்டு மாதம்.. நமக்குள் ஒரு பெட்.. சிறிய போட்டி. பிரிந்திருப்போம்.

என்னைத் தேடி ஓடி வருவீர்கள்.. என் மீது நீங்கள் வைத்திருக்கும் அபரிமிதமான அன்பு எனக்கு மட்டும்தான் தெரியும்!'' என்றாள்.

அவள் விழிகளை அசைத்து கண்ணடித்துச் சொன்ன விதம் அவனை மிகவும் எரிச்சலூட்டியது போலும். ''சரிதான் போடி...'' என்றவாறு திரும்பவும் கையிலிருந்த பேப்பரில் கவிழ்ந்து கொண்டான்.

காஞ்சனைக்கு உள்ளூர கலக்கமாய் இருந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் விறுவிறுவென கிளம்பினாள்.

திருச்சிக்கு செல்லும் பஸ்சில் ஏறி உட்கார்ந்ததும் 'ஒரு வழியாய் திட்டப்படி கிளம்பியாயிற்று. வீட்டில் என்ன செய்ய? திடுதிப்பென்று பெட்டியும் கையுமாய் போய் நின்றால் தாய் தந்தை திகைக்க கூடுமே?' என்ற யோசனை ஓடிற்று.

அதற்கும் ஒரு வழிவகுத்தாள். அலுவலகத்தில் 'அவருக்கு ஒரு மாதம் டெபுடெஷனாய் வடமாநிலம் சென்று வேலை பார்க்க உத்தரவு. அதுவரை உன் வீட்டில் இருந்து விட்டு வா எனச் சொல்லிவிட்டார்' எனச் சொல்லி சமாளித்து விடலாம் என முடிவெடுத்தாள்.

அவள் நினைத்தபடியே அவள் சொன்னாலும் அப்படியே நம்பி விட்டனர். அம்மாவுக்கு ஒரே சந்தோஷம்! ஒரு மாசமா? என அன்பாய் கட்டிக் கொண்டாள்.

ஆனால் காஞ்சனைக்குத்தான் மனம் வலித்தது. இவர்கள் நினைப்பது போல் விஷயம் இல்லையே? அவள் ஒன்றும்



சாதாரணமாக உதயசந்திரனிடமிருந்து பிரிந்து வரவில்லையே? ஒரு முடிவோடுதானே வந்திருக்கிறாள்!

அதற்கு ஒரு மாதம்.. இரண்டு மாதம்.. ஏன் ஒரு வருஷம் கூட ஆகலாமே? ஒருவேளை அவள் எதிர்பார்ப்புப்படி எதுவும் நடக்காமல் 'விட்டது சனியன்' என உதயசந்திரன் அவன் பாட்டுக்கு அவளைத் தேடாமல் இருந்து விட்டால்..?

நினைக்கவே பயமாய் இருந்தது. கிடுகிடுவென பயத்தில் ஆடிய உடம்பை உதடுகளை அழுந்தக் கடித்து நிறுத்தினாள்.

''நம்புவோம்... நம்பிக்கை வைப்போம்... நல்லது நடக்கும்!' என்ற தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நடமாடினாள்.

காஞ்சனை நினைத்தது போலவே உதயசந்திரனிடம் அவளது பிரிவு ஓரளவு அதிர்ச்சியையே ஏற்படுத்தி யிருந்தது.

'ஏதோ சாதாரண பேச்சாக பேசியது இவ்வளவு பெரிய பிரச்சினையாகி விட்டதே என திகைக்கத்தான் செய்தான். ஆனாலும் அவளுக்கு வாய் கொஞ்சம் ஜாஸ்திதான். இப்படி கொஞ்சம் விரட்டி விட்டால்தான் புத்தி வந்து சரி வருவாள்' என்ற எண்ணமும் வீராப்பாய் அவனுள் ஓடியது.

அதனால் பேசாமல் இருந்து விட்டான். வரட்டும் என்று விட்டுவிட்டான்.

ஆனால் காஞ்சனை சென்று ஒரு வாரம் ஆகிவிட்டது. வீட்டில் மாலதிதான் குடைந்து விட்டாள். ''மன்னி வராமல்

இருக்க மாட்டார்களே... என்ன விஷயம்? என்ன விஷயம்?'' என உதயசந்திரனை பிய்த்து எடுத்தாள்.

''வருவாள்'' என ஒற்றை வரியையே பதிலாகச் சொல்லிக் கொண்டு உதயசந்திரன் நழுவிக் கொண்டிருந்தான். மாலதி விடாமல் ''மன்னி வீட்டு போன் நம்பரை கொடு நான் பேசுகிறேன்'' என்றாள்.

''போன் அவளது வீட்டில் கிடையாது. பக்கத்து வீட்டில்தான் உண்டு. அந்த நம்பர் என்னிடம் இல்லை!'' என்று அதற்கும் கைகளை விரித்தான்.

மாலதி விடாமல் போய் கல்யாணி அம்மாளை நச்சரித்தாள். ''நீங்களாவது அண்ணனிடம் கேளுங்கள்..'' என தூண்டி விட அவளும் தன் பங்கிற்கு உதயசந்திரனிடம் கேட்டாள்.

தாயிடமும் அதே பதிலைத் தான் சொன்னான் உதயசந்திரன். ''போய் ஒரு மாதம் ஆகப் போகிறது. ஒரு லெட்டர் ஒரு போன் கூட இல்லை. உடம்பு நோவு என்றால் கூட தெரியாமல் போய்விடுமே! என்னப்பா சொல்கிறாய்?'' என்றாள் கல்யாணி அம்மாள் பதட்டம் தொனிக்க.

அதற்கும் ''அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது. வருவாள்'' என்று சமாளிக்கத்தான் செய்தான்.

தொடர்ந்து இரண்டு தினங்கள் கழிந்தும் கல்யாணி அம்மாள் அதையே கேட்கவும், ''ம்ம்.. போன் பண்ணி காஞ்சனையுடன் பேசிவிட்டேன். இன்னும் பத்து தினங்களில் வந்து விடுவதாக சொல்லிவிட்டாள்..'' என வாய் கூசாமல் ஒரு பொய்யையும் எடுத்து விட்டான்.



இப்படியொரு பொய் சொல்லாவிட்டால் இவர்களை சமாளிக்க முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது. இன்னும் விட்டால் நச்சரித்து போய் காஞ்சனையைக் கூட்டிக் கொண்டு வா என அனுப்பி வைத்தாலும் அனுப்பி வைப்பார்கள் என்ற நினைப்பு ஓடியது.

அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டால் தன் நிலைமை, தான் காஞ்சனை மீது கொண்ட கோபம் எல்லாம் என்னாவது? அவன் சவால் விட்டுச் சென்ற மாதிரியே வலியச் சென்று அழைத்தது போல் ஆகிவிடுமே!

கூடாது! என்ன ஆனாலும் சரி, அந்த காஞ்சனையை போய் கூட்டி வருகிற தப்பை மட்டும் செய்யக் கூடாது. என்ன நடக்கிறதென்று பார்த்து விடுவோம்! காஞ்சனைக்கு.. அவ்வளவு திமிரா... இல்லை வறட்டு கௌரவமா?

கொதிப்பு அடங்காமலே யோசித்தான் உதயசந்திரன்.

அவனுக்கு இன்னொரு விஷயமும் உறுத்தியது.

இந்த காஞ்சனைக்கு திடீரென எப்படி தைரியம் வந்தது?

யதேச்சையாய் பேச வந்ததுபோல் பேசி பெரிய சண்டையை கொண்டு வந்துவிட்டாளே!

ஆமாம்... ஒருவேளை எதுவும் திட்டம் வைத்து தான் இப்படி வேண்டுமென்று சண்டை போட்டாளா?

திடும்மென மனதை திருப்பி வேறு விதமாய் யோசித்துப் பார்த்தான்.

அன்று நடந்தவைகள் எல்லாம் திரும்பவும் அவன் மனத் திரையில் ஓடியது.

சும்மா இருந்தவனை வம்பிழுக்க வந்தது போல் அன்று காஞ்சனை அவன் எதிரில் வந்து உட்கார்ந்தது... பேச்சு கொடுத்து அவன் கோபத்தைக் கிளறியது... அந்த கோபத்தில் நாளையே நீ பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பு என அவன் கத்தியது... என எல்லாம் அவன் நினைவில் ஓடியது.

ஆக.. அன்று காஞ்சனை அப்படி பேச வம்பிழுத்தது.. ஊருக்குப் போக வேண்டும்.. தன் பிறந்தகத்திற்கு போக வேண்டும் என்ற காரணத்தினால்தானா?

ஆனால் அந்த நினைப்பையும் அவனால் முழுதாய் ஏற்று ஜீரணிக்க முடியவில்லை. காஞ்சனைக்கு அவனைப் பிரிந்து விடுவது நோக்கமல்லவே. அவனுடன் சந்தோஷமாய் வாழ வேண்டும்.. அவன் அன்பு முழுவதையும் தான் பெற வேண்டும் என்றுதானே புலம்பாத குறையாய் சொல்லிக் கொண்டிருந்தாள்:

பின் ஏன் இப்படிச் செய்தாள்? என்ன காரணமாக இருக்கும்?

என்ன காரணமாக இருந்தாலும் சரி... அதற்காக இப்படி பேசாமல் ஒரு லெட்டர் கூட போடாமல் எப்படி அவளால் இருக்க முடியும்?

அந்த துணிச்சல் ஒருபோதும் அவளுக்கு வந்திருக்க வாய்ப்பில்லையே யார் கொடுத்தது?



அப்படிப் பார்த்தாலும் காஞ்சனைதான் துணிச்சலாய் ஏதோ அசட்டு தைரியத்தில் இப்படி வீராப்பாய் இருந்தாலும் அவள் வீட்டில் ஒன்றும் சொல்ல மாட்டார்களா? அவள் தாய் தந்தையும் பயந்த சுபாவம் கொண்டவர்கள்தானே?

இப்படி காஞ்சனை வந்து ஒரு மாதத்திற்கு மேல் வீட்டில் இருந்தால் என்ன எது என்று பயந்து காஞ்சனையை கையோடு கூட்டிக் கொண்டு வந்திருப்பார்களே?

அப்படி எதுவும் நடக்கவில்லையே ஏன்?

எதனால் இந்த மௌனம்?

ஒன்றும் புரியாமல் குழம்பத்தான் செய்தான் உதயசந்திரன்.

அவனுக்கு இதுபற்றி யாரிடமும் கேட்க முடியவில்லை. யாரிடமும் பேச முடியவில்லை. வீட்டில் யார் கேட்டாலும் நழுவலாகவே பதில் சொன்னான். பாதிப்பில்லாதது போலவே நடமாடினான்.

வீட்டின் காஞ்சனையைத் தேடி அதிகம் தொண தொணத்தது மாலதி மட்டுமே. அவள் காஞ்சனையை மன்னி மாதிரி நினைக்காமல் தோழியாகவே கருதியிருந் தாள். தன் காலேஜ் கதை, ஊர்க் கதை என தினம் தினம் காஞ்சனையிடம் வம்படித்தவளுக்கு அவள் இல்லாதது பெரும் சங்கடமாகப் போயிற்று.

அதனாலே ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை உதயசந்திர னிடம் வந்து துணிந்து, ''இதோ பார் அண்ணா, மன்னி லேசில் பிறந்தகத்தை விட்டு வருவது போல் தெரிய

வில்லை. நான் கயிறு கட்டி இழுத்து வருகிறேன். நீ மன்னியின் அட்ரசைக் கொடு!" என்றாள் விளையாட்டு போல் சீரியசான முகத்துடன்.

ஆனால் அதற்கும் உதயசந்திரன் கொஞ்சமும் அசரவில்லை!

"நீ சின்னப் பெண்! போ! எல்லாம் எனக்குத் தெரியும்" என விரட்டினான்.

ஆனால் மாலதி விடவில்லை.

"நான் சின்னப் பெண்தான். ஆனால் இந்த சின்னப் பெண்ணிற்கு இருக்கும் அறிவு அந்த பாசமான தேட்டம் கூட உன்னிடம் இல்லையே. மிஸ்டர் காட்டான்!" என்றாள் வேண்டுமென்றே முகத்தில் பழிப்பு காட்டியவாறு.

"நீ ஒழுங்காய் போக மாட்டாயா?" என அடிப்பது போல் கையை ஓங்கினான் உதயசந்திரன்.

"வெவ்வ.. வவவேவே..!" என மறுபடியும் அவனை கிண்டலடித்து ஓடினாள் அவள்.

ஆனால் மாலதியின் கேள்வி.. உதயசந்திரனை இம்சித்து காஞ்சனை பற்றி மேலும் யோசிக்க வைத்தது.

★ ★ ★

அந்த யோசனையிலேயே ஒரு வாரம் ஓடியது. இருபது நாட்களைத் தாண்டி.. இதோ முப்பது நாட்கள் ஓடிவிட்டது.

காஞ்சனையிடமிருந்து ஒரு லெட்டர், ஒரு போன் இல்லை.



உதயசந்திரன் தன் வாழ்க்கையிலேயே முதன் முறையாய் திகைத்தது யோசித்தது அப்போதுதான் எனச் சொல்ல வேண்டும்!

அலுவலகத்திற்குச் சென்றவன் வேலை ஓடாமல் என்ன நடந்தது? ஏன் இப்படியெல்லாம் நடந்தது? என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தான்.

வீட்டிற்கு வந்தாலும் இதேபோல் காஞ்சனையின் நினைப்பு குபீரென வந்து விடும். அவன் பைக் சப்தம் கேட்டதுமே வாசல் பக்கம் ஓடி வந்து அவள் புன்னகை ததும்ப நிற்பதும் தான் கொஞ்சமும் சட்டை செய்யாமல் அவளைக் கடந்து செல்வதும் அவன் ஞாபகத்திற்கு வந்து உறுத்தியது.

அதுவும் கடந்த மூன்று மாதங்களில் காஞ்சனை அவனையே விடாது சுற்றி வந்தது.. ஓடோடி பணிவிடை களைச் செய்தது... முகம் மலர.. அவன் பார்வைக்காக அவன் பேச்சுக்காக தவம் கிடப்பது போல் ஏக்கமாய் கிடந்தது... அவன் எரிந்து விழுந்தாலும் அலட்சியப்படுத்தினாலும் பதில் பேசாது புன்னகையுடன் ஏற்றுக் கொண்டது... எல்லாம் ஞாபகத்தில் வந்து அவனை இம்சித்தது.

இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? நாம் இவ்வளவு உதாசீனப்படுத்தியும் கொஞ்சமும் முகம் சுளிக்காமல் காலையே சுற்றி வந்தாளே?

கேட்டால் 'உங்கள் மீது அபரிமிதமான அன்பு.. எனக்கு..' என்கிறாள். எனது உயிரே நீங்கள்தான்! என்கிறாள். சொல்வது மட்டுமில்லாமல் செயலிலும் அப்படியே நடந்து

கொள்கிறாளே! ஒருவேளை அதுவெல்லாம் நடிப்பில்லாமல் மெய்யாகவே இருக்குமோ?

அப்படி மெய்யாக இருக்கும் பட்சத்தில்... ஒரு பெண்.. என்னதான் மனைவி என்றாலும் நாம் இவ்வளவு உதாசீனப்படுத்தியும் இப்படி அன்பு வைத்து உருகுவாளா?

எல்லாம் நிஜம்தான்! என அவளது செய்கைகளை... ஓடோடி செய்த பணிவிடைகளை எல்லாம் நினைத்து காட்சிகளாய் மனதில் ஓட விட்டவன் திகைப்பாய் அதிரவே செய்தான்.

இந்தக் காஞ்சனை இவ்வளவு உயிருக்குயிராய் அன்பு செலுத்தியிருக்கிறாள். தனக்கு பணிவிடை செய்வதே அவளது உலகம் போல் நடமாடியிருக்கிறாள். நாம்தான் புரியாமல் இருந்து விட்டோமோ?

ஏன் இப்படி இருந்தோம்? என தனக்குத் தானே கேள்வி கேட்டு முதல் முறையாய் தன்னையே ஊடுருவி யோசித்துப் பார்த்தான் உதயசந்திரன்.

அவனுக்கு எரிச்சலாகவும் வந்தது. தான் என்ன அவ்வளவு கொடூரமானவனா? என தன்னைத்தானே திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டான்.

அவன் காதுபட நண்பர்கள்... சில ஆபீஸ் ஊழியர்கள் அதிசயித்து சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறானே! 'சும்மா சொல்லக் கூடாது உதயசந்திரனோட ஒய்ஃப் நல்ல அழகு! உலக அழகி மாதிரிதான் இருக்காங்க!' என்று.



அப்படிப்பட்ட அந்த காஞ்சனையின் அழகை ஒருநாளாவது பாராட்டியிருக்கிறானா? இல்லை பார்த்து ரசிக்கவாவது செய்திருக்கிறானா?

இல்லையே... அதை ஆவேசமாய் கடித்துக் குதறும் வகையில் ஒவ்வொரு முறையும் முரட்டுத்தனத்தைத் தானே காட்டியிருக்கிறான்?

அழகை விடுவோம்... குணம்? எப்பேர்ப்பட்ட குணம் அவளுக்கு? அவனது கோபம், எரிச்சல், கொஞ்சமும் சட்டை செய்யாத சுபாவம் என எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருக்கிறாளே?

கணவன் மனைவியாய் மனம் விட்டு பேசுவோம்... என எத்தனையோ முறை அவள் ஆவலாய் வந்தபோது அவளை அடிக்காத குறையாய் விரட்டியிருக்கிறானே?

எல்லாவற்றையும் நினைத்து நினைத்துப் பார்த்து உதயசந்திரன் குமையத்தான் செய்தான். அவனது ஆழ்மனம் நன்கு விழித்து அவன் செய்த தவறுகளை எல்லாம் பட்டியல் போட வைத்தது.

அதற்குள் மேலும் பத்து நாட்கள் ஓடி விட்டது. காஞ்சனையின் மீதான தேட்டம் கொஞ்சம் கொஞ்சமாக உதயசந்திரனுள் அதிகரித்தது.

ஒருநாள் ஏதோ ஒரு வித உந்துதலில் காஞ்சனை முன்பு கொடுத்திருந்த அவளது பக்கத்து வீட்டு டெலிபோன் நம்பருக்கு துணிந்து போன் செய்தான் அவன்.

ஒரு மாமி போனை எடுக்க, காஞ்சனை பற்றி விபரம் கூறி கொஞ்சம் பேச அழைக்கும்படி பணிவாய் கோரினான்.

பக்கத்து வீட்டு மாமி சொன்ன பதில் அவனை அப்படியே அதிரச் செய்தது.

''காஞ்சனையா? அவளுக்கு உடல் நலமில்லாமல் நேற்று ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் அல்லவா சேர்த்திருக்கிறார்கள்'' கேட்ட உதயசந்திரனுக்கு தலைசுற்றி யது.



24

உதயசந்திரன் தாமதிக்கவில்லை.

யாரிடமும் சொல்லவில்லை. மறு நிமிடமே கிளம்பி விட்டான். திருச்சியை நோக்கி பஸ் ஏறி விட்டான்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை!

அவசர சிகிச்சை பிரிவில் காஞ்சனையா?

அவளுக்கு என்னாயிற்று?

ஒருவேளை... நம் நடவடிக்கைகளால் மனம் வெறுத்து.. வாழப் பிடிக்காமல்... தற்கொலை.. போன்று முடிவெடுத்து விட்டாளா?

கடவுளே..அப்படி எதுவும் இருக்கக் கூடாது!

நினைக்கும்போதே அவனது நெஞ்சம் பதறிற்று. காஞ்சனைக்காக ஏங்கிற்று!



காஞ்சனை ஒன்றும் அப்படிப்பட்ட கோழை அல்ல. அது அவனுக்கு நன்றாகவே தெரியும். இருந்தாலும் நம் மீது இப்படி அளவுக்கதிகமான அன்பு, பாசம் வைத்துக் கொண்டு... அது கிடைக்காமல் போன வெறுப்பால்... ஒருவித விரக்தியில் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கலாம் அல்லவா?

அப்படி இருக்கக் கூடாது. காஞ்சனை அப்படி மனம் வெறுத்து அப்படி ஒரு முடிவு எடுத்திருக்கக் கூடாது. அப்படியே அது நடந்திருந்தாலும் காஞ்சனைக்கு எவ்வித ஆபத்தில்லாமல்... பிழைத்தாக வேண்டும்.. அவள் உயிரோடு வேண்டும்... காஞ்சனை எனக்கு.. வேண்டும்.. காஞ்சனை எனக்கு வேண்டும்..!

தன்னையறியாமல் மனம் சிந்தித்து சிந்தித்து பேதலித் தது போல் பிதற்ற ஆரம்பித்தது கண்டு உதயசந்திரனே திடுக்கிடத்தான் செய்தான்.

ஆக.. அவனுக்கு காஞ்சனை மீது அன்பு இல்லாமல் இல்லை. உள்ளுக்குள் இருந்திருக்கிறது. அதை வெளிக் காட்டாமல் நடமாடி இருக்கிறான். இப்போது காஞ்சனைக்கு ஆபத்து என்றதும் அந்த உள் மனம் தானாய் வெளிவந்து பிதற்ற ஆரம்பித்து விட்டது.

நான் அப்படி ஒன்றும் மற்றவர் போல் அதுவும் காஞ்சனையின் அன்பைப் புரியாத கல்நெஞ்சுக்காரன் இல்லை... என தனக்குத்தானே சொல்லிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான் அவன்.

மூன்று மணி நேரம் ஒன்றும் ஓடாமல் தவிப்பாகவே அவனுக்கு கழிந்தது.

பஸ் திருச்சி பஸ் ஸ்டாண்டை நெருங்கியதும் நிற்பதற்கு முன் தாவிக் குதித்து இறங்கினான். கால் டாக்ஸி ஒன்றை பிடித்து காஞ்சனை குடியிருக்கும் லயன்ஸ் காலனிக்கு போகச் சொன்னான்.

திரும்பவும் அரை மணி நேரப் பயணம்.

அதற்குள் திரும்பவும் பக்கத்து வீட்டு மாமியை தொடர்பு கொண்டு ஆஸ்பத்திரி பற்றி விபரம் கேட்டான்.

மாமி சொன்ன 'ஜே.கே. ஹாஸ்பிடல்' நோக்கி வண்டியைச் செலுத்தச் சொன்னான்.

நிமிடங்கள் வேகமாய் நகர்ந்தது.

இதோ ஜே.கே. ஹாஸ்பிடல்!

மற்றவர் பார்வைகளை கொஞ்சமும் பொருட்படுத்தாது தவிப்பாய் விறுவிறுவென உள்ளே ஓடினான்.

ரிசப்ஷனில் விபரம் கேட்டபோது அவசர சிகிச்சைக்கான ஐ.சி.யூ வார்டை நோக்கி கை காட்டினர்.

கடவுளே! அப்படியானால் காஞ்சனை... உண்மையிலே.. எதுவும் விபரீத முடிவெடுத்து அபாய கட்டத்தில் தான் இருக்கிறாளா?

மறுபடியும் பதறி... நிலை கொள்ளாமல் ஓடினான்.

ஐ.சி.யூ. பிரிவு.



அந்த பெரிய அறையின் வாசல் முகப்பில் கைகளை கட்டியவாறு கவலையுடன் காஞ்சனையின் தாயும் தந்தையும்.

தற்செயலாய் நிமிர்ந்தவர்கள் உதயசந்திரன் பதட்டமாய் வருவதைப் பார்த்து அவர்களும் அதிரவே செய்தார்கள்.

''மாப்பிள்ளை! மாப்பிள்ளை..! வாங்க..! காஞ்சனை.. காஞ்சனை..'' மேற்கொண்டு சொல்ல முடியாமல் தவிக்க -

''காஞ்சனைக்கு.. என்னாயிற்று? சொல்லுங்கள்..! சொல்லுங்கள்..!''

பரபரத்த உதயசந்திரனுக்கும் அதற்குமேல் பேச முடியவில்லை. மூச்சு வாங்கியது.

''மாப்பிள்ளை.. என்னை... என்னை.. மன்னித்து விடுங்கள்! உங்களுக்கு உடனே தகவல் சொல்லத்தான் துடித்தோம்.. ஆனால்.. ஆனால் காஞ்சனைதான்.. பிடிவாதமாய் சொல்லக் கூடாது.. என தடுத்து விட்டாள்.''

திக்கித் திணறி காஞ்சனையின் தந்தை குருநாதர் சொல்ல உதயசந்திரன் மேலும் திகைக்க ஆரம்பித்தான்.

ஆக.. அவன் நினைத்தது போல்தான் காஞ்சனை மனம் வெறுத்து விரக்தியில் செய்து கொண்டு அதை... தன்னிடம் கூட சொல்லக் கூடாது.. என சொல்லிக் கொண்டு..?

''சொல்லுங்கள் மாமா.. காஞ்சனைக்கு என்னதான் ஆயிற்று?''

பதறிக் கத்தியவனைப் பற்றி ஆறுதலாய் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார் குருநாதர்.

"ஐயோ! பதற வேண்டாம்! மாப்பிள்ளை! காஞ்சனை அபாய கட்டத்தை தாண்டி விட்டாள். இனி பயப்படத் தேவையில்லை... என டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள்.."

குருநாதர் அப்படிச் சொன்னதும்தான் உதயசந்திரனுக்கு பதட்டம் குறைந்து மூச்சே வந்தது.

பின் நடந்த எல்லாவற்றையும் விவரிக்க ஆரம்பித்தார் குருநாதர்.

"காஞ்சனை முதலில் ஒன்றையும் எங்களிடம் கூறவில்லை. மாப்பிள்ளை... பின் ஒரு மாதம் கழித்துதான் ஏதோ ஒரு வேண்டுதலுக்காக தான் ஒரு நேரம் மட்டும் சாப்பிட்டு, மற்ற நேரம் உண்ணாமல் இருக்கும் விரதத்தை ஆரம்பிக்கப் போவதாய்ச் சொன்னாள்..

"நாங்களும் சரி.. ஏதோ வேண்டுதல் பிரார்த்தனையாக இருக்கும் என நினைத்து சாதாரணமாக இருந்து விட்டோம். ஆனால் பத்து நாட்கள் அப்படி விரதத்தை கடைபிடித்த காஞ்சனை... பத்து நாட்களைத் தாண்டியதும் அந்த ஒரு நேர உணவையும் நிறுத்தி முழு நேர உண்ணாவிரதத்தை தொடங்கியிருக்கிறாள். இது எங்களுக்கே கூட தெரியாது. தெரியாத வகையில் காஞ்சனை செய்திருக்கிறாள்.

திடீரென இரண்டு நாளுக்கு முன் அவள் சோர்வாய் நடுக் கூடத்தில் மயங்கி விழுந்தபோதுதான் பதறிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு கூட்டி வந்தோம். ஆனால்.. ஆனால்.."

குருநாதர் நிறுத்த "சொல்லுங்கள்.. சொல்லுங்கள்.. மாமா!" என பரபரத்தான் உதயசந்திரன்.



"இங்கு ஹாஸ்பிடல் வந்து சேர்ந்ததும் தான் தெரிந்தது அவள் காஞ்சனை இப்படி கடைசி பத்து இருபது நாட்களில் எதுவும் சாப்பிடாமல் உடலை வருத்தி இருந்தது.. அவளின் உடலின் சக்தி குறைந்தது... பலம் எல்லாம் போய்.. நெஞ்சுத் துடிப்பு கூட இறங்கி... பெரும் அபாயக் கட்டத்தில் அவள் இருக்கிறாள்.. என டாக்டர்கள் சொல்லி புரிந்தது."

நிறுத்திய குருநாதர் மறுபடியும் பதட்டமாகவே தொடர்ந்தாள். "ஆனால்.. ஆனால்.. எல்லாம் நல்ல நேரம்.. நல்ல வேளை.. மாப்பிள்ளை சரியான நேரத்தில் காஞ்சனையை கூட்டி வந்ததால் நேற்று ஒரு நாள் முழுக்க தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளித்து அவளைக் காப்பாற்றி விட்டார்கள்... இனி பயமில்லை.. மாப்பிள்ளை... இன்னும் கொஞ்ச நேரத்தில் சாதாரண வார்டிற்கு மாற்றி விடுவார்களாம்... இன்னும் இரண்டொரு தினங்களில் டிஸ்சார்ஜ் ஆகி விட்டிற்கும் அழைத்துச் சென்று விடலாமாம்.."

குருநாதர் சொல்லி முடிக்க.. பூரண நிம்மதியடைந்த வனாய் நிம்மதி பெருமூச்சு விட்டான் உதயசந்திரன்.



## 25

இருபத்து நான்கு மணி நேரம் கழிந்து விட்டது.

காஞ்சனை ஹாஸ்பிடலின் அறை ஒன்றுக்கு மாற்றப்பட்டு, கையில் குளுகோஸ் ஏறிக் கொண்டிருந்தது.

உணர்வு வந்தவளாய் மெல்ல கண் விழித்தாள் காஞ்சனை.

டாக்டர், நர்ஸ் என மாறி மாறி இருவரிடமும் பேசிவிட்டு ஆவலாய் அவளைப் பார்க்க உதயசந்திரன் வருவது அவள் கண்ணின் விழித்திரைகளில் பளிச்சிட்டது.

மருண்டு போன மானின் விழிகளோடு அவனை நிமிர்ந்து சந்திக்க திராணியில்லாதவளாய் விழிகளை தாழ்த்தினாள் காஞ்சனை.

உதயசந்திரன் ஏதேதோ பேச நினைத்தவனை அவளது கரு விழிகளிலிருந்து இரண்டு பெரிய நீர்மணிகள் உருண்டு ஓடுவதைக் கண்டதும் ஒரேடியாய் பதைத்து விட்டான்.

''ஐயோ! என்னை மன்னித்து விடு. நான் திருந்தி விட்டேன் காஞ்சனை..'' என்றான் பரிதவிப்பான கெஞ்சும் குரலில்.

நம்ப முடியாதவளாய் நிமிர்ந்து பார்த்தவள் உதயசந்திரன் பதைத்து கண் கலங்குவதையும் அவனது விழிகளிலும் கண்ணீர் முத்துக்கள் உருவாகி தன் கைகளில் சிதறுவதை உணர்ந்து நடப்பது நிஜம்தானா என புரிந்து கொண்டாள்.

என்ன.. உதயசந்திரன் அழுகிறானா? அதுவும் தனக்காக துடித்துப் போய் கண்ணீர் சிந்துகிறானா?

மறுபடியும் அவனையே உறுத்து உறுத்து ஆசையாய்ப் பார்த்தவள் நடப்பது எல்லாம் உண்மைதான்.. என புரிந்து கொண்டு மறுகணமே நெகிழ்ச்சியானாள்.



''கடவுளே! நீ என்னை கைவிடவில்லை. எதற்காக உண்ணாமல் உறங்காமல் பித்துப் பிடித்தாற் போல் உண்ணாவிரதம் இருந்து உருகினேனோ... அந்த வேண்டுதல் நிறைவேறி விட்டது. என் கணவருக்கு என் மீது அன்பு வந்து விட்டது. அது போதும்.. அதுபோதும்.. கடவுளே! இதோ இந்த கணம்.. இந்த மகிழ்ச்சி இது போதும்! இப்போதே.. இப்படியே.. நான் இறக்கத் தயார்!''

வாய்க்குள் முணுமுணுத்தவள் கடைசி வரிகளை மட்டும் சத்தமாய் வாய்விட்டு அரற்றி விட்டபடி, மறுபடியும் மயக்கமானாள்.

''என் கணவரின் அன்பு எனக்கு கிடைத்து விட்டது.. இக்கணமே இறக்கத் தயார் கடவுளே!' என காஞ்சனை முணுமுணுத்தபடி மறுபடியும் கண்கள் சொருக மயக்கத் திற்கு போனதைக் கண்டு துடிக்கவே செய்தான் உதயசந்திரன்.

மறுபடியும் ஓடோடிப் போய் டாக்டரை அழைத்து வந்தான். பரிசோதித்து விட்டு ''ஒன்றுமில்லை, சாதாரண மயக்கம்தான். தெளிந்து விடும். சாயங்காலமே டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்குக் கூட்டிப் போகலாம்!'' என டாக்டர் சொல்லிவிட்டு அகன்றார்.

★ ★ ★

மறுநாள் இரவு -

கட்டிலில உதயசந்திரன் சாய்ந்திருக்க.. அவனது நெஞ்சினில் சாய்ந்தபடி காஞ்சனை!

மைவிழிகளில் ஆசையும் பளபளப்பும் தோன்ற நிமிர்ந்தாள்.

"நீங்கள் சொல்லுங்கள்!" என்றாள்.

"முதலில் நீ சொல்!" என்றான் அவன்.

புன்னகையுடன் லேசாக கணைத்தவள் "ம்ம்... சொல்வதற்கென்ன? நீங்கள் மனம் மாற வேண்டும்.. உங்கள் அன்பு எனக்கு முழுமையாக வேண்டும்.." என சத்தியாகிரகம் இருப்பது போல் திடீரென கடவுளை வேண்டிக் கொண்டு உண்ணாவிரதத்தை தொடங்கி விட்டேன்.." என்றவள் ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு பின் குரல் நெகிழ, "என்ன ஒரு இனிய மாற்றம்! நான் எதிர்பார்த்தது போல் நான் நினைத்ததுபோலவே... எல்லாம் நடந்து விட்டதே! நீங்கள் என் அன்பைப் புரிந்து கொண்டீர்கள்... என்னைத் தேடி ஆவலாய் ஓடி வந்து விட்டீர்கள்... உங்களது பரிபூரண அன்பும், பாசமும் எனக்கு கிடைத்துவிட்டது.." என்றபடி மென்மையாய் அவன் தன்னை வளைத்துப் பிடித்திருந்த அவனது கரங்களை காட்டியபடி சொன்னாள்.

உதயசந்திரனும் ஓரிரு கணம் அந்தப் பேச்சில் நெகிழ்வாய் சிலிர்த்தவன், அப்படியே குனிந்து அவளது நெற்றியில் மௌனமாக முத்தமிட்டான்.

பின் நீள மூச்சொன்று எடுத்தவாறு, "கண்மணி, நீ நினைப்பது இப்போது நடப்பவை எல்லாம் உண்மைதான். நான் மெய்யாகவே திருந்தி விட்டேன். நீ என் மேல் காட்டின அபரிமிதமான அன்பை புரிந்து கொண்டேன். அப்படி



புரிவதற்கு முக்கிய காரணம் என்ன தெரியுமா?" என அவன் நிறுத்த ஆவலானாள் அவள்.

"என்ன காரணம்?"

"உனது பிரிவுதான் கண்ணம்மா..! அந்த நீ இல்லாத சூழல்.. உன்னுடைய பிரிவு என்னுள் பல மாற்றங்களை தோற்றுவித்தது. பல விதமாய் யோசிக்க வைத்தது. முதல் முறையாய் என் வாழ்க்கையிலேயே அன்று தான் எல்லா உண்மைகளையும் உணர்ந்தேன். நானே கதி என என்னை நம்பி வந்த உன்னிடம் சிறிதும் அன்பு காட்டாததோடு உன்னை எவ்வளவு உதாசீனப்படுத்தி எப்படியெல்லாம் நோகடித்தேன் என்பதும் எனக்குப் புரிந்தது. நன்கு உரைத்தது. என்னை நானே குட்டிக் கொண்டு.. நீ காட்டிய அன்பை... செய்த பணிவிடைகளை நினைத்து... தினம் தினம்.. உருக ஆரம்பித்தேன். அதுவும் ஒரு கட்டத்தில் எல்லை மீறி.. துணிந்து உன் பக்கத்து வீட்டு மாமிக்கு போன் செய்து உன்னிடம் ரெண்டு வார்த்தை பேசத் துடித்தேன்... பின்தான் விஷயம் கேள்விப்பட்டு.. பதறி ஓடி வந்து.."

அவன் மறுபடியும் நிறுத்தி... அப்படியே அவளை இறுக தன்னுடன் ஐக்கியமாக்குவது போல் வேகமாய் அணைத்துக் கொண்டான்.

"எனது அன்பைப் பெறுவதற்காக என்ன ஒரு ஆபத்தான முடிவும் எடுக்க துணிந்து விட்டாய்? இதில் கொஞ்சமும் பிசகு ஏற்பட்டிருந்தால் நான் உன்னையே இழந்திருப் பேனே! கண்ணம்மா?"

உடம்பு நடுங்க சொன்னபடி அவன் திரும்பவும் அவளை மென்மையாக அணைத்தான்.

அவள் காதுகளில் சொன்ன விதம் நெகிழ்வான குரலில் உச்சி முகர்வது போல் அணைத்த அவனது வேகம், அவனது அதுவரை வெளிப்படாத உண்மையான அன்பை அவளுக்கு உணர்த்தியது.

"இனி நமக்குள் பிரிவில்லை. நாம் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டோம்!" என்பது போல் அவளும் அவனை இறுக கட்டிக் கொண்டாள்.

சுகமான காதல் தென்றல் மேலும் இறுக்கத்துடன் அவர்களைத் தழுவ ஆரம்பித்தது. தங்களை மறக்க ஆரம்பித்தனர் இருவரும்.

